"சைவ நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

மாசி - பங்குனி - சித்திரை - 2013

## 1863 சுவாமி விவேகானந்தர் 2013



1863 2013

## 150th *Birth anniversary of* Swami Vivekananda

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

INVESTORS IN PEOPLE | Gold

community care at HOME

skillsforcare Accolades 2010

# SATASH COMMUNITY CARE

Providing Specific & Unique Individualised Person Centred Care
for people with Learning Disabilities
and associated mental health needs (Autism/Aspergers)

**Residential Care Services 24hrs Care**
**Children Services 24 hrs Care**
**Domiciliary Care**
**Short Break / Respite**
**Outreach**

உடல் வலிமை குறை காரணமாக அல்லது மன நோய் காரணமாக உங்களுக்கோ உங்களின் உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அனுபமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்ற பராமரிப்பினைத் திட்டமிட்டு வகுத்து அதற்கொப்ப செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பல ஆண்டுகளாகப் பாராட்டப்பட்டு வருகின்றது. மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**CONTACTS**

- 01708-856592 (Adults Services)
- 01708-851189 (Children's services)
- 0203-2001047 (Domiciliary Care Services)
- 07966377298 (Logan)
- 07957869620 (Letchmi)

logan@satashcommunitycare.com
letchmi@satashcommunitycare.com

மணி 21

# கலசம்
# KALASAM

ஒலி 72

www.saivamunnettasangam.com

FREE ISSUE

# பேரெழிற் காட்சி

# விஸ்வரூபம்

வணக்கம்.

பலர் பாடுபட்டு வளர்த்த பயிரின் அறுவடைக் காலம் 1970களி. கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் ஊட்டிய சத்துணவில் வளர்ந்த சில உள்ளங்கள் தாய் மடியைவிட்டுத் தனித்தனியே முகிழ்ந்து வெளியேறிய இளமைக் காலம் அது. அன்று சுமந்து வந்த கனவுகளில் ஒன்று தாய்ச் சங்கத் தனி வழி. அது நால்வர் நெறி.

விதை நெல்லொன்று உடன்கொண்டு வந்தாலும் முளையிட்டு வளர்க்க முடியாத விந்தையான இங்கிலாந்துச் சூழல். இருந்தாலும் வித்திட்டுக் காப்பாற்றி, நாற்று நட்டுச் சோறூட்டி, களையெடுத்து நடை பழக்கி, வளர்த்தெடுத்து வாரிசாகி இறை பணி செய்து முப்பத்தாறு வயது மாணவப் பயிராக நிற்கின்றோம் நாம் - சைவ முன்னேற்றச் சங்கம் UK.

பெற்றெடுத்தவள் அறுபதைத் தொட்டுவிட்டாள். அவளின் அனுபவம், ஆற்றல், இயக்கம் இவையெல்லாம் காலத்தால் அழியாத உண்மைகளாக இலங்கையில் நிலைபெற்றுவிட்டன. தாயவளின் தொண்டு அங்கும் இங்கும் எங்கும் நிறைந்து நிற்கின்றது. அதன் தொடர்ச்சி இந்நாட்டிலும் பரந்துவிட்டது. இந்த வளர்ச்சியின் விஸ்வரூபம் வியக்க வைக்கின்றது. தாய்ச் சங்கத்தின் அகத்திற்குள் அடங்கிக் கிடக்கும் சாதனைகள் எத்தனை! எத்தனை!! இச் சரித்திரச் சான்றுகளை எவ்வாறு நெறிப்படுத்தி விளங்க வைப்பது?

***ஆயிர கோடி காமர் அழகெலாஞ் திரண்டொன் றாகி***
***மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்***
***தூயநல் எழிலுக் காற்றா தென்றிடின் இளைய தொல்லோன்***
***மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்?***- என்னும் முருகப் பெருமானின் விஸ்வரூப தரிசனம் போல் இன்று உலகம் போற்ற உயர்ந்து நிற்கும் எங்கள் தாய்ச் சங்கத்தின் அருமை பெருமைகளை வகுத்துச் சொல்ல இயலாத நிலையில் வாழ்த்தி மகிழ விளைகின்றோம். இப் பேரெழில் காட்சியை வகுத்துக் கொடுத்த தாய்ச் சங்கமே, தாயே நீடூழி வாழ்க! வாழ்க!! வாழ்க!!!.

***நீரும் நிழலும் நிலம் பொதியும் நெல் கட்டும்***
***பேரும் புகழும் பெரு வாழ்வும் - ஊரும்***
***வருந்திருவும் வாழ் நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்***
***தரும் சிவந்த தாமரையாள் தான்*** - என்னும் ஔவையின் நல்வழிப் பாடலுக்கிணங்க தாய்ச்சங்க குடும்பத்தினர் அனைவரும் பெரு வாழ்வு பெற்று வளமாக வாழ்ந்து தொண்டிற் சிறக்க முருகப் பெருமான் அருள் செய்ய வேண்டுமென வணங்குகின்றோம். தாய்ச்சங்கத்தின் பணிகள் இன்னும் பன்மடங்கு சிறந்து சமய, சமுகத் தொண்டுகள் வளர தொண்டர் படை அணி திரள வேண்டுமென நாம் வாழ்த்துகின்றோம்.

இப்படிக்கு
*ஒரு விதை நெல் - சதாசிவம் ஆனந்ததியாகர்*
*கலசம் ஆசிரியர்*

அடுத்த இதழில் தாய்ச்சங்க வைர விழாக் காட்சிகள் வெளிவரும்.
இந்த இதழ் சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஆண்டைச் சிறப்பிக்கின்றது.


***ஆசிரியர்: சதாசிவம் ஆனந்ததியாகர்.*** ***நிர்வாகக் குழு:*** **வ.சிவனருட்செல்வர், க.ஜெகதீஸ்வரன், கவிஞர் பாலரவி, சி.அற்புதானந்தன், வ. இ. இராமநாதன், சிவ தம்பு**
தொடர்பு முகவரி: ***SMS* 2 Salisbury Road London E12 0AB Tel/Fax: 0208 514 4732**
**www.saivamunnettasangam.com**

*இமயம் (பயணத் தொடர்க் கட்டுரை)*

# பத்ரிநாராயணன் கோவில்

*- சாவகச்சேரியூர் கதிர்காமநாதன்*

இக்கோயில் இமயத்திலுள்ள தலங்கள் யாவற்றிலும் மிகப் பிரசித்தி பெற்றதாகும். வாகன வசதியால் நேரடியாகவே இக்கோயிலை அடைய முடியும். புத்துணர்ச்சியூட்டும், கண்குளிரும், லாவண்ணியமான காட்சிகள், அருவிகள், நீரோடைகள், மலைகள், மடுக்கள், விதவிதமான மக்கள், கிராமங்கள், சிறு நகரங்கள் எவரையும் அழைக்கும். பிரயாணம் செய்யும்போது சந்திக்கும் ஐந்து(5) நதிகளின் சங்கமங்களில் மக்கள் நீராடி உடலை மட்டுமல்ல, உள்ளத்தையும் ஆத்ம பலத்தையும் பெறுகின்றனர். மேலும், சிவனை வழிபடுவோருக்கு சிவனாகவும், பிள்ளையாரை வணங்குபவருக்குப் பிள்ளையாராகவும், இதே போன்று அம்மன், காளி, அனுமான் போன்ற தெய்வங்களுக்கு அப்படியே பத்ரிநாராயணன் தோன்றுவதாகக் கூறுவர். இது “எல்லாம் நானே” என்ற தத்துவத்தை விளக்குகிறது. கற்புக்கரசியான அருந்ததி, தனது கணவனாகிய வசிட்டமுனிவரிடம் இவ் இறைவனின் முக்கியத்துவம் பற்றிக் கேட்டார். அதற்கு “பாவிகளிலும் பாவியானவர், பத்ரிநாராயணனின் தரிசனம் கண்டால் மோட்சமடைவர்” எனப் பதிலளித்தார்.




உத்தரப் பிரதேசத்தில் கடல் மட்டத்திற்கு 10,244 அடி உயரத்தில் நர, நாராயண எனும் இரு மலைகளுக்கிடையே பனி சூழ்ந்த பள்ளத்தாக்கில் இக்கோயில் அமைந்துள்ளது. 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகவும் பெரியாழ்வாரால் மங்களாசாசனம் பெற்றதுமாகும். பத்ரிநாத், பத்ரிநாதபுரி, பத்ரிகாச்சிரமம், விஷால்பத்ரி, ஊர்வசிபீடம் என்றும் அழைப்பர். பத்ரிநாத் என்ற பெயரே நிலைத்து நிற்கிறது. பத்ரி = இலந்தை; நாத் = இறைவன்- இலந்தைக் காட்டில் இருக்கும் இறைவன். விஷ்ணு இங்கு குளிர், கூதல், வெயில், மழை, காற்று யாவற்றையும் பொருட்படுத்தாது கடும் தவம் செய்தார். இதை அறிந்த லக்ஷ்மி, இலந்தை மரமாகி ஆதரவு கொடுத்தாராம். இதனால் இவ்விடம் பத்ரிகாச்சிரமம் ஆகியதாம். பத்ரிநாராயணன் கோயில் ஒன்று தானாம் இப்படி ஆச்சிரமம் என்ற பெயர் கொண்டது!

இரும்புப் பாலமூடாக அகலநந்தா நதியைத் தாண்டித் தலத்தையடைதல் வேண்டும். ஐஸ் குளிர் நீரோடு அலறிப்பாயும் அகலநந்தா இக்கோயிலின் புனித நதியாகும். கோயில் தரைமட்டத்திலிருந்து 50 அடி உயரத்தில் அமைந்துள்ளது. படிகள் மூலம் ஏறித்தான் அடைதல் வேண்டும். பசுமையான பச்சை வர்ணங்கள் கொண்ட சதுர அமைப்பில் இருக்கும் முகப்பில் கிழக்கு நோக்கிய வாயில். வாயிலின் மேலே கண்டாமணி. உள்ளே கருடபகவான் நாராணனை நோக்கி நிற்கிறார். துவாரபாலகர் உண்டு. கிழக்குப் பிரகாரத்தில் மும்மூர்த்திகள், தவக்கோலப் பிள்ளையார். தெற்குப் பிரகாரத்தில் லஷ்மி கோயில் உண்டு. மூன்று பகுதிகளாலான ஆலயம். **கர்ப்பக்கிருகம்** -பொன்னாலான விதானம் அமைந்த பகுதி. இங்கு தவக்கோலத்தில் பத்மாசனத்தில் பத்ரியார் இருக்கின்றார். **தரிசன மண்டபம்** - பூசைகள் நடக்கும் இடம். **சபா மண்டபம்** - பக்தர்கள் கூடி, வணங்கி, வழிபட்டு, பஜனை செய்து தரிசனம் செய்யுமிடம். 20-25 பக்தர்களை அடக்கும் சிறிய கோயில்தான்.

**பிரயாணம்:-** கேதாரிநாத்திலிருந்து பத்ரிநாத்திற்கு வானில் மனைவியாரோடு சென்றேன். 3 மணி போல் ஸ்ரீநகரை அடைந்தோம். பெயருக்கேற்ப லட்சுமிகரமாக இமயத்தில் இருக்கிறது. முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹோட்டலில் தங்கினோம்.

**கமலேச்வர் ஆலயம்:-** விஷ்ணு இங்கு 1008 ‘பிரம்மகமலம்’ என்ற பூக்களால் சிவனை அர்ச்சனை செய்யும்போது, கடைசி மலரை காணாது தன் கண்மலரை எடுத்து அர்ச்சித்தாராம்.

குழந்தைச் செல்வம் இல்லாதோர், கார்த்திகை மாதத்தில் ஓர் அகல்விளக்கை ஏற்றி, கையில் ஏந்தியபடி நின்று பிரார்த்தித்தால் குழந்தை பிறக்குமாம். இதை எமது விடுதிக்காரர் கூறி, மறு வருடம் குழந்தையோடு வருகை தந்து பிரதியுபகாரம் செய்வதாகவும் கூறினார். நாங்கள் இக்கோயில் சென்று லிங்க வடிவிலுள்ள சிவனைத் தரிசித்தோம். முன்னர் கிழக்குப் பிரகாரத்தில், தியான கோலத்தில் இருக்கும் கணபதியையும் கண்டோம், வணங்கினோம்.



**ருத்திரப்பிரயாகை:-** 2000 அடி உயரத்தில் இருக்கும் இந்நகரை மறுநாள் 5 மணி போல அடைந்தோம். ஹோட்டல் சூரியில் (Hotel Suri) தங்கினோம். இங்கிருந்து தான் மக்கள் கேதாரிநாத்திற்கும், பத்ரிநாத்திற்கும் பிரிந்து செல்லும் பாதையூடாகச் செல்வர். இதனால் இவ்விடம் ஒரு சந்திப்பாகும். போவோரும் வருவோருமாகக் கல-கலப்பாக இருந்தது. இதற்கும் மேலாக இரு முக்கிய நதிகளின் சந்திப்பு — சங்கமம் இங்கிருக்கிறது.

கேதாரீஸ்வரரின் சிரசிலிருந்து வரும் மந்தாகினியும், பத்ரிநாராயணின் பாதங்களிலிருந்து வரும் அகலநந்தாவும் சங்கமமாகும் இடம் ருத்திரப்பிரியாகையாகும். நாங்கள் சங்கமத்திற்குச் சமீபிக்கும்போது ஒரே இரைச்சலாகவிருந்தது. தெருவிலிருந்து கீழிறங்கி சங்கமத்திற்குச் சென்றோம். "புண்ணிய தீர்த்தங்களைக் கண்டவுடன் நீராடல் வேண்டும். அதுவும் சங்கமமாகும் இடத்தை அடைந்தால் நழுவ விடக்கூடாது. எந்த நீராலும் உடல் அழுக்கைப் போக்கலாம். ஆனால் உள்ளத்தை தூய்மைப்படுத்திக் கொண்டு ஆத்மபலம் பெற புண்ணிய தீர்த்தங்களே கதி. சங்கமமாகும் இடம் தத்துவங்களின் சங்கமம். ஒருமைப்பாட்டின் சின்னம். ஓர் அத்வைதபீடம்"- பரணீதரன். வடக்கிலிருந்து சலனமற்று நீல நிறமாய் வரும் மந்தாகினியும், வடகிழக்கிலிருந்து இரைந்து, குமுறி, நுரைகளோடு ஓடிவரும் அகலநந்தாவும் சங்கமமாகும் காட்சி மிகப் பசுமையாக இருக்கிறது. இதுதான் நாங்கள் முதன்முதல் கண்ட சந்திப்பு. படிகளின் உதவியால் இறங்கி மந்தாகினி நதி சேருமிடத்தில் நின்று, நீராடினோம். அந்த மாலை நேரத்தில் வேறு சிலரும் நீராடினர். இரு நதிகளும் இணையும் இடத்திற்கு நடுவே உள்ள கோயிலில் உள்ள ருத்திரநாதரை வழிபடத் தவறவில்லை. இங்கு மந்தாகினி தனது பெயரை இழந்து அகலநந்தாவாகிறது. இமயத்திலிருக்கும் இச்சங்கமத்தில்தான் நாரதர் சிவனிடமிருந்து சங்கீதம் கற்றாராம். மறுநாள் காலை பத்ரிநாத் செல்லும் வழியாக புறப்பட்டோம். சாரதியாரும் தனது வானிற்கு டீசல் உணவளித்து, காற்றடித்து உயிர் கொடுக்கத் தயாரானார்.

**கர்ணப்பிரியாகை:-** இங்கு அகலநந்தவுடன்-பிண்டங்கள் சங்கமமாகிறது. கர்ணன் தவம் செய்து தானங்கள் செய்த இடமாம். வானை நிறுத்தி கீழே நடக்கும் சங்கமத்தைத், தரிசித்தோம்.

**நந்தப்பிரியாகை:-** பிரயாணம் சிறிது செய்தவுடன் மந்தாகினியும் அகலநந்தாவும் சங்கமமாகும் இடத்தைக் கண்டோம். நந்தகோபாலன் தவம் செய்ததும், துஷ்யந்தன் சகுந்தலையைக் காந்தர்வ விவாகம் செய்த இடமுமாம். பத்ரிநாத்திற்கு ஹரித்துவார் வெளிவாசல், நந்தப்பிரியாகை உள்வாசல் எனவும் கூறுகின்றனர்.

**விஷ்ணுபிரியாகை:-** மதிய நேரம் இவ்விடத்தை அடைந்தோம். இங்கு கருடகங்கா எனும் தெளலி நதி அகலநந்தாவுடன் சங்கமமாகும். நாரதர் விஷ்ணு தரிசனம் பெற்ற இடமாம். அகலநந்தா நதியிலிருந்து மின்சாரம் பெறும் அமைப்பு இருக்கிறது. இங்கிருந்து பத்ரிநாத் செல்வதென்றால் ஒரு வழிப்பாதை (Gate system) யாகும். பாதை குறுகியதாயும், வளைந்து செங்குத்தாகச் செல்வதாலும் நாங்கள் நிற்க வேண்டியதாயிற்று. அருகேயிருந்த சிவன் கோயிலைத் தரிசித்துப் பின்னர் அங்குள்ள தனி அனுமான் கோயிலையும் வணங்கினோம். அங்குள்ள தமிழ்க்கடையில் இட்டலி, சாம்பார் மதிய உணவு. என்னே திருப்தி. தமிழ், தமிழன் இமயத்திலும்!

**பதரிநாத்:-** மாலை 5.30மணிக்கு பத்ரிநாத் அடைந்தோம். Hotel Narayan Palaceல் தங்கினோம். வரவேற்கும் இடத்தில் அங்கு அமிதாபச்சன் சென்றதற்கு அடையாளமாக அவரது படத்தைப் பெரிதாக்கி வைத்திருக்கின்றனர்! எமது மனதிற்கும் சிறு கிளுகிளுப்பு!

**சப்தகுண்டம்:-** பத்ரிநாத் தலத்தில் சிறப்புகளில் இதுவுமொன்றாகும். உடனே பாலத்தினால்

அகலநந்தாவைத் தாண்டி கோயிலின் அருகாமையிலிருக்கும் இச் சுடுநீர்க் குண்டத்திற்கு வந்தோம். இதற்கு அருகில் சிறு குண்டங்கள் உண்டு. பெண்களுக்கும் ஆண்களுக்கும் பிரத்தியேகமாக இருக்கிறது. சிறு குண்டம் ஒன்றிற்கு சென்றோம். சிலர் கேணி போலிருக்கும் குண்டத்தில் குளித்தனர்! சிறு பிள்ளைகள் சூடு தாங்காமல் எழுந்து துடிதுடித்து ஓடினர். எனினும் நாங்கள் வாளி (Bucket) ஒன்றின் மூலம் அள்ளி நீராடினோம். அப்பப்பா! என்ன இதம்- குளித்தால்தான் தெரியும். சப்த குண்டத்திற்கு மனைவியாரோடு சென்றேன். 130டிகிரி. ஒரே சூடு. வாளியால் எடுத்து ஆறிய பின்னர்தான் நீராடினோம்.
பத்ரிநாராயணன் கோயிலுக்குள் சென்றோம். அன்று வைகாசி விசாகம். முதலில் ஆதிகேதாஸ்வரரை வணங்கி உள்ளே சென்றோம். சயன ஆர்த்தி நேரம். உட்சென்று தரிசிக்க டிக்கற். எமக்குத்தான் கடைசி டிக்கற். எமக்கு பின்னால் வந்த தொந்தி தனவந்தர் “You must be lucky” என்று கூறி ஏமாற்றத்தோடு திரும்பினார். தரிசன மண்டபத்தில் 20 பேர்தான் நின்றும் இருந்தும் தரிசிக்கலாம். ராவல் என்னும் பூசகர் படிப்படியாக பகவானின் அலங்காரத்தைக் களைந்தார். முதலில் மாலைகள்- துளசி, பூமாலை இவற்றை எடுத்து அன்பர்களுக்குக் கொடுத்தார். பின்னர் சுயம்பு சாளக்கிரமத்தில் பத்ரிநாதர் இரு கைகளையும் இணைத்துக்கொண்டு தவநிலையில் பத்மாசனத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டோம். இதன் பின்னர் சந்தனக்காப்பு அலங்காரம், மனத்தாபங்களைப் போக்கி நெஞ்சைக் குளிர்வித்து, கண்ணிற்கும் பெருவிருந்தாகும் இது. இரவு இமயத்தில் இதயம் குளிர சோறும் பருப்பும்!

**ராவல்ஜி:-** மறுநாட் காலை வெள்ளிக்கிழமை. பௌர்ணமியும் கூட. அதிகாலை 3 மணிக்கே எழும்பினோம். சென்று சுடுநீரில் நீராடினோம். பின்னர் ஏனையோர் நிற்கும் வரிசையில் சேர்ந்து நாமும் நின்றோம். ராவல்ஜி என மிக மரியாதையுடன் அழைக்கும் பூசகர், தனக்கென பிரத்தியேகமான சுடுநீர் குண்டில் குளித்து, பஞ்சகச்சம் கட்டி, நீள் கறுப்பு கோட்டு அணிந்து வந்தார். இவரை அழைத்து முன்னால் வெள்ளித்தடி ஏந்திய பராக்காரர் சென்றனர். இக் காட்சியைக் கண்டால் யாவருக்கும் ராவல்ஜி மீது மிக மரியாதையுண்டாகும். கேரள மாநிலத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நம்பூதிரியாராகும்.

**பத்ரிநாத்:-** இந்தியாவின் வடக்கு எல்லையான இமயத்தில் இருந்தாலும் பூசை, கோவில் காரியங்கள் தெற்கு இந்திய முறைப்படிதான் நடக்கிறது. பிரமச்சாரியாகிய ராவல்ஜி புரட்டாதி மாத வாமன துவாதசி மட்டும் ஆற்றைக் கடந்து நகருக்கு செல்ல முடியாது. காலை 4 மணிக்கே கோயில் பூசையை ஆரம்பிக்கும் இவரைப் பூசை முடிந்ததும், பராக்காரர்கள் திரும்பக் கூட்டியும் செல்வர். அந்த மாநில அரசாங்கமும், அரசியல்வாதிகளும், பிரமுகர்களும் பெருமதிப்பை இவரிடம் வைத்திருக்கின்றனர். முன்னைய நேபாள அரசர்கள் இவரை மிக உன்னத இடத்தில் வைத்து மரியாதை செய்தனர். நாங்கள் மும்முறை வரிசையில் சென்று பத்ரிநாராயணனின் தோற்றத்தையும், அபிடேகம், சந்தனக்காப்பு யாவற்றையும் கண்டோம். ஒருமுறை தான் வாழ்க்கையில் இத்தகைய சந்தர்ப்பம் வரும்! காலை 6.30 மணிபோல் உள்ளே சென்று அமர்ந்திருந்து மக்களின் கூட்டு ஆராதனையில் பங்குபற்றினோம். அப்போது ராவல் ஜி இல்லை.

**ஜோதிமட்:-** மதியம் புறப்பட்டு இரவு இங்கு தங்கினோம். பூசையில்லா ஆறுமாத காலம் ராவல் ஜி தங்குமிடம். இவ்விடத்தில்தான் ஆதிசங்கரருக்கு ஞானம் ஏற்பட்டதாம். அங்கிருக்கும் அன்னபூரணி கோயில் சென்று பின்னர் அருகே இருக்கும் அடர்த்தியான “கற்பகவிருட்சம்” மரத்திடம் சென்றோம். இம்மரத்தின் கீழ் நின்று நினைத்தால் காரியம் கைகூடுமாம். இலை ஒன்றைப் பறித்து வந்தோம்.

**தேவப்பிரியாகை:-** தெய்வீகமான இவ்விடத்தில் கங்கை நதி கங்கா மாதா-பிறக்கிறது. அகலநந்தா நதியும், பகீரதியும் சேர்ந்து கங்கை நதி தோன்றுகிறது. இது 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகவும் மங்களாசாசனம் பெற்றதுமாகும். தமிழ்நாட்டின் வில்லிபுத்தூரில் அவதரித்த விஷ்ணுசித்தர் என்ற பெரியாழ்வார்-


“நலம் திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும்
நாராயணன் பாதத் துழாயும் கலந்து இழி புனலால் புகர் படு கங்கை”-


எனப் பாடினார். அரனின் சிரசை அலங்கரிக்கும் கொன்றை மலரும், கரனின் திருவடியில் சமர்ப்பிக்கப்பட்ட துளசியும் சங்கமமாகிறதாம். புண்ணிய சேர்க்கையால் புனிதமடைந்த பிரவாகம் எழில்மிகு கங்கையாகப் பாய்கிறது!. மதிய நேரம் ஒரே வெயில். கீழே படிகள்மூலம் இறங்கி சங்கமத்தை அடைந்தோம். பகீரதி படுவேகமாக அலறிக்கொண்டு ஓடியது, அகலநந்தா சற்று

எங்கள் இருவரின் மனமும் சங்கமித்தது. பின்னர் சங்கமத்திற்கு இடையில் இருக்கும் கோயிலை வணங்கி சங்கற்பமும் செய்தோம்.

**ஆச்சிரமம்:-** ரிஷிகேசத்தைச் சமீபித்தோம். வானை சாரதி கடையருகே தேநீர் அருந்த நிற்பாட்டினார். அப்போது ஒரு வெள்ளைச் சுவாமியார், காவியுடையோடும் வெள்ளைத் தாடியோடும் தோன்றினார். தான் ஒரு South African எனவும் 1978ஆம் ஆண்டு தொடக்கம் ஆச்சிரமத்தில் இருப்பதாககவும் கூறினார். எங்களையும் அழைத்துச் சென்றார். கங்கைக் கரையில் பசுமையான மரங்களினிடையே ஆச்சிரமம் இருந்தது. முன் இருந்த முனிவர் சிவராத்திரியன்று சிவபதமடைந்தார் என்று குறித்திருந்தனர். அவரின் சமாதிதைத் தரிசித்தோம். சாயிபாபா இளமையில் அங்கு சென்றதற்கு சாட்சியாக ஒரு புகைப்படமும் மாட்டியிருந்தது. கேரள சாமியாரோடு கலந்துரையாடி ஏனையோரோடும் சேர்ந்து ஆசிபெற்றுத் திரும்பினோம். ஒரு முனிவரின் ஆச்சிரமம் பார்க்க வேண்டுமென்ற நெடுநாளைய ஆவலும் நிறைவேறியது.

பத்ரிநாராயணனை ஏனைய இமயத் தலங்கள் போன்று ஆறுமாதம்தான் ரிஷிகேசத்திலிருந்து சென்று தரிசிக்கலாம். இங்குள்ள சுடுநீர் குண்டு நீராடல், சமீபத்திலுள்ள ஐஸ் நீர் கொண்ட அகலநந்தா நதி, மரியாதைக்குரிய ராவல்ஜியின் வருகை,அவரின் அலங்கார பூசை, சந்திக்கும் ஐந்து சங்கமங்கள், பிற கோயில்கள், கிராமிய மக்கள் யாவுமே எவரையும் கவரும்.





**ஆலயத்தில் கிரியைகள்**

திருக்கோயிலில் நடைபெறும் கிரியைகள் நித்தியம், நைமித்தியம் எனப்படும்.

**நித்திய கிரியை**

ஆலயங்களில் தினமும் நடைபெறும் பூசை நித்திய கிரியையாகும்.
ஒரு நாளில் ஒரு முறை அல்லது இரு முறை பூசை நடைபெறும் கோயில்களும் உள்ளன. ஆறு காலப்பூசை இடம்பெறும் கோயில்களும் உள்ளன.

**நைமித்திய கிரியை**

வாரம், மாதம், ஆண்டு எனும் காலத்தில் வரும் விரத நாட்கள், சிறப்புத் திருவிழாக்கள் நைமித்தியக் கிரியைகளாகும். சோமவாரப் பூசை, பிரதோஷம், சதுர்த்தி, கந்தசஷ்டி, சிவராத்திரி, நவராத்திரி, திருவாதிரைத் திருநாள், வருடாந்த மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்றவை நைமித்தியக் கிரியைகளாகும்.


எல்லா ஆன்மாக்களின் நன்மையைக் கருதிக் கிரியைகள் செய்யப்படும் போது அவை **பரார்த்த கிரியை** எனப்படும்.

ஒவ்வொருவருடைய நன்மையைக் கருதிச் செய்யப்படும் கிரியை **ஆன்மார்த்த கிரியை** எனப்படும்.

ச.ஆ


# திருமுறைகளில் பாடல்கள் தெய்வீக ஒழுங்கில் அமைந்த அற்புதம்

கண்ணப்பநாயனாருடைய சரித்திரத்தைப் பார்ப்போம். வேதம் சிவபெருமானைச் 'சதாசிவோம்' என ஒருமுறை துதித்தவிடத்து முருகப்பெருமானை 'சுப்ரமண்யோம்' என்று மும்முறை துதித்து அவருடைய அருட்பெருமையை விளக்கிற்று. இங்கே கண்ணப்ப நாயனார் சரித்திரத்திலே நாகனுக்கு முருகன் செய்யும் அருளிப்பாட்டைக் குறிக்க சேக்கிழார் மூன்று பாடல்கள் (புராணம் 10,11,12) அமைத்தார். சிவபெருமானைக் குறிக்க "புரங்கள்" பெற்ற எந்தையர் என்று ஒருமுறை கூறினார். முருகப்பெருமானை அருட்சக்தியாகிய வேலுடன் சேர்த்தும், அவரது பெருமையை "செவ்வேல் முருகவேள்", "போரணி நெடுவேலான்", தடக்கைவென்றி அண்ணலார்" என மூன்று முறையும் அடுக்கிக் கூறினார். பன்னிரண்டு கண்களும் பன்னிரண்டு கைகளும் கொண்ட திரு-முருகப் பெருமானுடைய அருள் வெளிப்பாட்டைக் கூறும் இப்புராணத்தின் "கண்"ணாகிய பன்னிரண்டாம் திருமுறையில் பன்னிரண்டாவது திருப்பாட்டில் கூறிய தெய்வ அருள் நம்மால் போற்றப்பட வேண்டியது. காஞ்சி காமாட்சி அம்மையார் 'ஐம்பத்ரோரக்கரி'(51) என்று அழைக்கப்படுவார். அவர் இறைவரைப் பூசித்த செய்தியை, திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்திலே ஐம்பத்தோராவது பாட்டிற் கூறினார் சேக்கிழார் சுவாமி.



சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். இவற்றைத் 'திருமந்திரம்' என்ற திருமுறையாக ஆக்கிய திருமூல நாயனார் சரித்திரம் இருபத்தெட்டுப் பாடல்களால் பாடப்பெற்றிருக்கிறது. தடுத்தாட்கொண்ட புராணம் - பாடல்கள் 337 தொடக்கம் 340 வரையுள்ள நான்கு பாடல்களைப் பார்ப்போம். இந்த நான்கு பாடல்களிலும் பதினொரு வினைமுற்றுக்கள் தொடர்புபட்டு வருகின்றன. ஆனால் எழுவாய் ஒன்றே ஒன்று கடைசிப் பாடலின் அந்தத்தில் வருகிறது. எதிர்நின்றன, மன்றுளாடின, மாளக்கறுத்தன, வருடச்சிவந்தன, நெஞ்சிற் பொலிந்தன, தம்மை வேதிப்பன, சோதியுட் சோதிய, காணா அளவின, மேற்கொண்டிருந்தன, பிழைபொறுத்தாண்டன, தீர்க்க இசைந்தன ஆகிய பயனிலைகளுக்கு 'புண்டரிகப்பதம்' என்ற எழுவாய் அமைந்தது. இந்த அமைப்பு இறைவனையும் ஈசாநாயநம: முதலாகவுள்ள பதினொரு மந்திரங்களையும் குறித்தது என்று அறிஞர் கூறுவார்கள்.

**கண்ணப்ப நாயனார் புராணம் :-** முப்பத்தாறு (36) தத்துவங்கள், அறுபது தாத்துவிதங்கள் என்ற (60) தொண்ணூற்றாறு படிகளைத் தாண்டினால் சீவன்முத்தநிலை ஞான நிலை கைகூடும். தவஞ் செய்து செய்து ஆன்மீகத்தில் இப்படி முன்னேற வேண்டும். காளத்தி மலையை ஏறிக்கொண்டு வருகிற திண்ணனாருக்கு மனம், குணம் முதலியன மாறிக்கொண்டு வருகின்றன. பூலோக வாழ்க்கையின் விருப்பம், தொடர்பு குறைந்து குறைந்து உடல் பாரமும் அற்ற நிலை தோன்றுகிறது. மலையைக் கண்டது, பொன் முதலியனவற்றைக் கடந்தது, மலையின் தெய்வீக ஈர்ப்புச் சக்தியால் இழுக்கப்பட்டது முதலிய நிகழ்ச்சிகளைச் சேக்கிழார் பாடிக்கொண்டு வருகிறார். சரித்திரத்தின் தொண்ணூற்றேழாவது பாடலைப் பாடுகிறார் (97).




ஆவதென்? அதனைக் கண்டிங் கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன் றுளது போலும்; ஆசையும் பொங்கி மேன்மேன்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்;
தேவரங் கிருப்பதெங்கே? போதென்றார் திண்ண னார்தாம்
"நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்"

இதுவரை இருந்த தேவைகள், ஆசைகள் எல்லாம் போய், வேறொரு விருப்பம் அணைந்து விட்டது! அந்த வேறொரு விருப்பமாவது மலை மேலிருக்கும் தேவரைக்கண்டு ஒன்றி விடுவது. இப்படி உணர்கிறார். நாணனை ஊக்கப்படுத்துகிறது. விரைந்து போ என்கிறார். தொண்ணூற்றாறு படிகள் கடந்த நிலையில் தொண்ணூற்றேழாவது பாடலும் அமைந்து விட்டது. திருமுறைகளில் இப்படித் தெய்வீக பொருத்தங்களை நிறையக் காணலாம்.

**முருகன் பெயர்** – திருத்தொண்டர் புராணத்தில் முருகன் பெயர் ஆறு(6) இடங்களில் வந்திருக்கிறது. (ஆறுமுகம்)


**அப்பரின் திருப்பாலைத்துறைப் பதிகம்:-** தேவார அடங்கன் திருமுறையில் (7 திருமுறைகள்) ஐந்தாவது திருமுறையில் திருப்பாலைத்துறைப் பதிகம் வருகிறது. ஐந்தாந்திருமுறையில் பதிகங்கள் நூறு(100). இந்தப் பதிகம் ஐம்பத்தோராவது (51) பதிகமாகும்.. இது நடுவண் அமைப்பு. மேலும் இந்தப் பதிகம் பதினொரு (11) பாடல்களைக் கொண்டது. ஆறாவது பாடல் பதிகத்தின் நடுவணதாகிறது. அந்தத் திருப்பாடலைப் பார்ப்போம்.:-



விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாது சிவாயவென்று
எண்ணி லார்க்கிட மாவெழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே


இந்தத் திருப்பாடலில் 'சிவாய' என்ற சுத்த பஞ்சாக்கரம் வந்தமைந்திருக்கிறது! ஐந்தாவது திருமுறையில் நடுப்பகுதியில் சுத்த பஞ்சாக்கரம் உருத்திரத்தின் நடுவில் அமைந்தது போல அமைந்தது அற்புதமல்லவா?

**உருத்திர பசுபதி நாயனார் புராணம்:-** பசுபதி வைரவர் உருத்திரத்தை உறுதியாக ஓதி உய்தி பெற்றபடியால் உருத்திரபசுபதி நாயனார் ஆனார். இந்தப் புராணத்தில் பாடல்கள் பத்து(10). பாடல்கள் ஐந்தும்(5) ஆறும்(6) சேர்ந்து நடுவணதாகின்றன. திருஉருத்திரம் வேதங்களுக்குள்ளே ஓதச் சிறந்தது. உருத்திரத்தின் நடுவிலேதான் சுத்த பஞ்சாட்சரம் அமர்ந்திருக்கிறது. இதை ஓதி முக்தியடைந்தவர் உருத்திரபசுபதி நாயனார். நடுப்பகலிலும் நள்ளிரவிலும் கழுத்தளவு நடுநீரில் நின்று (எல்லாம் நடு), உச்சிமேற் கைகளைக் குவித்தபடி முடிந்தமட்டும் பலமுறையும் ஓதி அதன் பயனாய் முத்தியடைந்தவர். அவர் உருத்திரம் ஓதிய விதத்தை சரித்திரத்தின் நடுப்பகுதியாகிய ஐந்தாவது ஆறாவது பாடல்களில் சேக்கிழார் சொல்கிறார். உருத்திரத்தின் நடுப்பகுதியும் சரித்திரத்தின் நடுப்பகுதியும் பொருந்துகின்றன.



**சண்டீச்சுர நாயனார் புராணம்:-**

அனைத்துத் திறந்தும் ஆனினங்கள் அணைந்த மகிழ்ச்சி அளவின்றி
மனைக்கட் கன்று பிரிந்தாலும் மருவுஞ் சிறிய மறைக்கன்று
தனைக்கண் டருகு சார்ந்துருகித் தாயாந் தன்மை நிலையினவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள் கறவா மேபால் பொழிந்தனவால்



விசாரசர்மர் பசுக்களின் அருகில் போகும் பொழுதெல்லாம் எந்தப் பசுவும் தனது கன்றுபோல உணர்ந்து முலைகளைத் தொடாமலே பால் சொரிந்தது. இதைக் கண்டு விசாரசர்மர் சிவபூசை செய்ய எண்ணினார். கறவாமே பால்பொழிந்த இந்த நிகழ்ச்சியே பின்னால் நிகழ்ந்த அற்புதத்துக்கு தொடக்கம். அதைச் சொல்லும் பாடல், (59).சரித்திரத்தின் சரி நடுவே வருகிறது. சரித்திப் பாடல்கள் மொத்தம் ஐம்பத்தொன்பது.

**திருநாவுக்கரசு நாயனார் புராணம், திருப்பாதிரிப்புலியூர்த் திருப்பதிகம்**

திருப்பாதிரிப்புலியூர்ப் பதிகம் - எண் (95). பத்துப்பாடல் கொண்டது. இந்தப் பதிகத்தின் நடுப்பகுதியாக வரும் பாடல்கள் ஐந்தும் ஆறும் சூக்கும பஞ்சாக்கரத்தைத் தாங்கி நிற்கின்றன.



5. வைத்த பொருமைக் காகுமென் றெண்ணி மனத்தமைத்துச்
சித்தம் ஒருக்கிச் **சிவாய நம**வென் றிருக்கி னல்லேன்
மொய்த்த கதிர்மதி போல்வார் அவர்பா திரிப்புலியூர்
அத்தன் அருள்பெற லாமோ அறிவிலாப் பேதை நெஞ்சே

6. கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளாற்
திருவாய்ப் பொலியச் **சிவாய நம**வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரானே


நாயனார் கடலில் கல்லின் மேல் மிதந்து பஞ்சாக்கரத்தையே துணையாக ஆழ்ந்து சிந்தித்து ஓதி வந்து கரையேறிய களிப்பில் பதிகம் பாடினார். திருவருளால் சூக்கும பஞ்சாக்கரம் நடுப்பாடல்களில் அமைந்துவிட்டது.

**திருவாரூர் போற்றித் திருத்தாண்டகம்:-**
திருநாவுக்கரசு நாயனார் திருவாரூர் திருமூலட்டானர் மேல் பதிகம் பாடினார். இது போற்றித் திருத்தாண்டகம் என்று அழைக்கப்படுகின்றது. "கற்றவர்கள் உண்ணுங் கனியே போற்றி" என்று தொடங்கும் பதிகம் பத்துப் பாடல்கள் கொண்டது. பதிகத்தில் போற்றி என்ற சொல் நூற்றெட்டு வந்திருக்கிறது. மற்றைய போற்றித் திருத்தாண்டகங்களிலே அப்படி அமையவில்லை.


**பொய்யடிமையில்லாத புலவர் புராணம்:-**
கடைச்சங்கம் **நாற்பத்தொன்பது** புலவர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது(49). திருத்தொண்டர் திருவந்தாதியில் இவர்களைப் பற்றிய பாடலின் எண் நாற்பத்தொன்பது(49)!. திருத்தொண்டர் திருவந்தாதி பாடியவர் திருநாரையூர் பொள்ளாப்பிள்ளையாரின் அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பியாகும்.

**திருநீலநக்க நாயனார் புராணம்:-**
மறைப்பயனாகிய திருவைந்தெழுத்தினை அன்பு செய்தும், நித்தியமும் ஓதியும்- சரித்திர இறுதியில் சம்பந்தரின் நமச்சிவாயப்பதிகத்தின் திருவைந்தெழுத்தைக் கேட்டும் முத்தியடைந்த இந்நாயனாரது புராணம் முழுமையும் - 37 பாடல்கள்-ஐந்து சீர் கொண்ட பாடல்களாகவே அமைந்தன.

**திருஞானசம்பந்த நாயனார் புராணம்:-**
ஆளுடைய பிள்ளையார் 'புண்ணியப் பதினாறாண்டு' காலம்தான் வாழ்ந்தவர். மூன்று வயது தொடக்கம் பதினான்கு ஆண்டு வரையும் யாத்திரை செய்தார். மூன்றாவது வயதில் ஞானப்பாலுண்டு "தோடுடைய செவியன்..". பதிகம் பாடியதும் கோவிலுக்குட் புகுந்தார். அங்கு மனமார அம்மையப்பரை வணங்கினார். வாயிலுக்கு வந்தார். .வாயிலிற் குழுமி நின்ற




உறவினர், தொண்டர்கள், மற்றையோர் எல்லோரும் பேர- திசயத்தோடும் பெரும் பெருமையுடனும் பத்தியுடனும் பிள்ளையாரை வரவேற்றனர். அந்த நிகழ்ச்சிளைச் சேக்கிழார் மூன்று பாடல்களில் பாடினார். அன்பர்களே, புராணத்தைப் பாருங்கள். பாடல்கள் பெரியபுராண வரிசை இலக்கம் 1989-1991; நாயனார் புராண இலக்கம் 91-93: இம் மூன்று பாட்டுக்களாலும் பிள்ளையார் அன்றைய மூவாண்டு முதல் புண்ணியப் பதினாறாண்டு வரை உள்ள பதினான்கு ஆண்டுகளின் குறிப்பாகப் பதினான்கு வகையாகப் போற்றிய குறிப்பைக் காணலாம். நாயனார் தவத்தின் பேறாய்



அவதரித்ததைக் குறிக்க 'காழியர் தவமே' 'கவுணியர் தனமே' என்று தொடங்கியவர் சரித்திர முடிவில் திருப்பதிகங்கள் நிறைவு பெற்று உயிர்களுக்கு முத்திக்கதி யருளியது குறிக்க 'கதியே' என்று பாடினார்.
இந்த மூன்று பாடல்களிலும் பதினான்கு(14) விதமாக மக்கள் வாழ்த்தியதைக் குறிக்கிறார் சேக்கிழார். தவமே, தனமே, கடலே, அமுதே, திருவே, வைதிக நிலையே, முகிலே, புகலே. மணியே, ஒளியே, புண்ணிய முதலே, கண்ணிறை கதிரே, மதியே, கதியே என்று அந்த வாழ்த்துக்களை அமைத்தார். இந்த இடத்தில் கொஞ்சம் முன்னே போய்ப் புராணபாடல் 1952ஐப் பார்ப்போம். அந்தப் பாடலில் இரண்டு வயதுக்கும் பொருந்த இரண்டு செல்வச் சிறப்புக்களைச் சேக்கிழார் காட்டுகிறார்.

"நாவாண்ட பலகலையும் நாமகளும் நலஞ் சிறப்ப
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்த"

என்று ஆக பதினாறாண்டுகளுக்கும் பதினாறு மங்கல வாழ்த்துக்கள் அமைந்தது சேக்கிழார் மூலம் இறைவனின் அருள் காரணம்.

## ஆலயக் கிரியையில் ஷோடசோபசாரம்- பதினாறு வகை உபசாரங்கள்

**ஆவாஹனம்** - இறைவனைப் பூசை நடைபெறுமிடத்திற்கு அழைத்தல்

**ஆசனம்** - இருக்கை கொடுத்தல்

**பாத்யம்** - திருவடிகளைக் கழுவ நீர் கொடுத்தல்

**அர்க்யம்** - மரியாதையைக் காட்ட நீர் கொடுத்தல்

**ஆசமனம்** - அருந்த நீர் கொடுத்தல்

**மதுவர்க்கம்** - பால் பழம் கொடுத்தல்

**ஸ்நானம்** - நீராடல் செய்விப்பதைக் குறித்தல்

**வஸ்திரம்** - உடை கொடுத்தல்

**யக்ஞோபவீதம்** - பூணூல் போடுதல்

**கந்தம்** - வாசனைத் திரவியமளித்தல்

**புஷ்பம்** - மலர் கொடுத்தல்

**தூபம்** - சாம்பிராணிப் புகை காட்டுதல்

**தீபம்** - விளக்கு ஒளி காட்டுதல்

**நைவேத்தியம்** - அன்னமளிப்பதைத் தெரிவித்தல்

**தாம்பூலம்** - வெற்றிலை பாக்கு கொடுத்தல்

**நீராஞ்சனம்** - கற்பூரம் காட்டுதல்

### கேள்வி:

**இறைவனிடம் அதைக் கொடு இதைக் கொடு என்று வேண்டக் கூடாது. எல்லாவற்றையும் அவனே தருவான் என்கிறார்கள். அப்படியெனில், நாம் கோயிலுக்குச் செல்வதன் அவசியம் என்ன?**



### பதில்:


வேண்டுதல் என்பது அனைத்து நற்செயல்களுக்கும் ஆரம்பமானது. முதலில் கடவுளை நாம் வேண்டுதல் மூலமாகத்தான் தெரிந்து கொள்கிறோம். கடவுளிடம் நாம் வேண்டிக் கொண்டு விட்டோமானால், நம் மனதில் ஓர் உயர்ந்த எண்ணம் வந்துவிடும். நீர் நிரம்பிய வாளியைக் கையில் வைத்திருந்தால் அதன் கனம் நமக்குத் தெரிகிறது. இதே நேரம் அந்த வாளியைக் கிணற்று நீருக்குள் அமிழ்த்தினால் எந்தக் கனமும் தெரியாது. அதுபோலத்தான் நம்முடைய பிரார்த்தனையும். கடவுளிடம் வேண்டுவதால் நமக்குள் இருக்கும் மனக்குறைகள்- கிணற்றுக்குள் அமிழ்த்திய வாளியைப் போல் - கனம் விலகி ஓர் உத்வேகமும், கடவுளின் அருளும் நமக்கு நமது காரியத்தில் வெற்றியை அளிக்கும். 'வேண்டத்தக்கது அறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ' என்றபடி எல்லாம் அவனுடையதுதான் என்று அறிந்து, அவனிடம் நம்மைச் சமர்ப்பிப்போமாக. நாம் எல்லாம் சாதாரண மனிதர்கள்தான். நமக்கும் ஆசாபாசங்கள் உள்ளன. மனிதனிடம் வேண்ட வேண்டாமே தவிர, கடவுளிடம் தூய பக்தியுடன் நல்ல பலன்களை வேண்டுங்கள். சீக்கிரம் நிறைவேற அருள்புரிவார்.

**நன்றி- ஸ்ரீசண்முக சிவாச்சாரியார்.**

**அறிவோம் ஆன்மிகம் என்ற நூலிலிருந்து.**

# முத்திகள் பலவிதம்!

குருவடி பணிந்து இ. லம்போதரன்



மதங்கள் பல உள. ஆயினும் அவை எல்லாம் கூறுவதும் ஒன்றே. அதாவது விடுதலை அல்லது வீடுபேறு. இவ்வாறு வேறு வேறாக உள்ள மதங்கள் கூறுவது வீடுபேறு ஆயினும், அவை கூறும் வீடுபேற்று நிலைகளில் பெரும் வேறுபாடுகள் உள்ளன.

ஒரு மதம் சுவர்க்கத்தை அடைந்து அங்கு அழகான பெண்களுடன் போகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தால் முத்தி என்கிறது.. **இஸ்லாத்தில்** இவ்வாறான விவரணம் காணப்படுகின்றது. இன்னொரு மதம் இந்த உடல், மனம் என்ற இருப்புகள் கெடுவது முத்தி என்கிறது. பௌத்தம் இவ்வாறான முத்தியைப்பற்றிப் பேசுகின்றது. சில மதங்கள் எமது குணபேதங்கள் அடங்குவது முத்தி என்கின்றன. எமது தீய செயல்கள் அல்லது வினைகள் எல்லாம் விடுபடுவது முத்தி என்று சில மதங்கள் கூறுகின்றன. எம்மைப் பீடித்திருக்கும் மலமாசான அழுக்குகள் நீங்குவதே முத்தி என்று சில மதங்கள் கூறுகின்றன. நித்திய ஜீவனாகும் தன்மையே முத்தி என்று சில மதங்கள் கூறுகின்றன. விவேகம் அல்லது ஞான நிலையே முத்தி என்று சில மதங்கள் பேசுகின்றன. உயிர் என்ற இருப்பே இல்லாது போதலே முத்தி என்று சில மதங்கள் கூறுகின்றன. அட்டமாசித்திகளை அடைதலை முத்தி என்று சில மதங்கள் கூறுகின்றன. கல்லைப்போல துக்கம், சுகம் எது வந்தாலும் சலனம் இல்லாமல் இருக்கும் நிலையை அடைதலே முத்தி என்று சில மதங்கள் கூறுகின்றன.

மற்ற மதங்கள் கூறுவது இருக்கட்டும். இந்து மதத்திலேயே பலவிதமான முத்திகள் கூறப்படுகின்றனவே! இறைவன் உயிர் என்ற பேதமில்லாமல் உயிர்தானே இறை என்று உணர்தல் முத்தி என்று **சங்கரரின் அத்துவிதம்** கூறுகின்றது. உயிரும் இறையும் ஒரு போதும் ஒன்றாக முடியாது உயிர் இறையை அடைந்து அணுக்கத்தில் பேரின்பத்துடன் இருத்தலே முத்தி என்று **மத்துவரின் துவைதம்** கூறுகின்றது. உயிருக்குள் உயிராக உடனாக இருக்கும் இறையை அறிந்து அனுபவிப்பதே முத்தி என்று **இராமனுஜரின் விசிட்டாத்துவிதமும், நீலகண்டரின் சிவாத்துவிதமும் கூறுகின்றன.**

உண்மை ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்? இவ்வாறு ஒவ்வொரு மதமும் முத்தியைப்பற்றி பலபல விதமாகக் கூறுகின்றனவே! இவை எல்லாம் ஒன்றுக்கு ஒன்று முரணாக ஒரே குழப்பமாக இருக்கின்றவே என்று தலையைப் பிய்க்கின்றீர்களா? இவற்றுள் எது உண்மை என்று கேட்டால், ஒவ்வொரு மதமும் தத்தம் முத்திக் கொள்கையே உண்மை என்று சாதிக்கின்றன; மற்ற மதங்களுடன் பேதிக்கின்றன; அவையெல்லாம் கூறுவது பொய் என்றும் போதிக்கின்றன. இதற்காக ஒன்றையொன்று எதிர்க்கவும் தாக்கவும் இவை தயங்குவதில்லை. இதைத் தமது மதக் கடமையாகவும், கடவுளுக்குச் செய்யும் மிகப்பெரிய தொண்டாக தமக்கு கிடைத்த ஒரு பேறாகவும் எண்ணி இவ்வாறு செய்கிறார்கள். ஜீவனுக்கான சாந்தியையும், உலகத்துக்கான சமாதானத்தையும் வார்த்தைக்கு வார்த்தை கத்திக் கத்திப் போதிக்கும் இம்மதங்களால் மனித வரலாற்றில் பல யுத்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன; பல உயிர்கள் அழிந்திருக்கின்றன. இவ்வாறு அழிந்த மனித உயிர்களின் எண்ணிக்கை இரண்டு உலக மகா யுத்தங்களை விட அதிகம் என்று அறிகின்றோம். ஆனால் அறிவியல் வானத்தை முட்ட வளர்ந்து விட்டது என்று பெருமை பேசும் இக்காலத்திலும் கூட இந்த யுத்தங்களும் அழிவுகளும் தொடருகின்றன.

**சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர்** - என்றும்
**அத்தேவர் அவர் தேவர் அவர்தேவர் என்றிங்கள்**
**பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே** – என்றும் திருவாசகம் இவர்களைப்பற்றி 1100 ஆண்டுகளுக்கு முன்னர் கூறியிருக்கிறது.


இந்தச் சமயங்கள் ஒன்றுதானும் உலக சமாதானத்துக்கோ, உலக மக்களின் ஒருமைப்பாட்டுக்கோ உதவுவதாகத் தெரியவில்லை. இவற்றினால் உலக சமாதானத்துக்கும் மனிதகுல ஒற்றுமைக்கும் பெரும் அச்சுறுத்தல் இருப்பதாகவே தெரிகின்றது. இவர்கள் கூறும் சமாதானம் எல்லாம், உலகம் முழுமையும் தமது ஒரே மதத்தின் கீழ் வரும்போது வருகின்ற சமாதானமே. இவர்களுடைய கடவுள் இறுதிக்காலத்தில் மற்றவர்களை நியாயம் தீர்த்து நரகத்துக்கு அனுப்பியபின் இவர்களுக்கு உலகைக் கொடுக்கும்போது வருகின்ற நித்திய சமாதானம் பற்றியும் இவர்கள் பேசுகின்றார்கள்.

சைவம் இதைப்பற்றி என்ன சொல்லுகின்றது?

**அரிவையர் இன்புறும் முத்தி, கந்தம் ஐந்தும்**
**அறும் முத்தி, திரி குணமும் அடங்கும் முத்தி,**
**விரவு வினை கெடும் முத்தி, மலம் போம் முத்தி,**
**விச்கிரக நித்தம் முத்தி, விவேகம் முத்தி,**
**பரவும் உயிர் கெடும் முத்தி, சித்தி முத்தி,**
**பாடான முத்தி, இவை பழி சேர் முத்தி,**
**திரி மலமும் அகல, உயிர் அருள் சேர் முத்தி,**
**திகழ் முத்தி, இது முத்தித் திறத்தது ஆமே.**

என்று இவ்வாறான பல வகைப்பட்ட முத்திகள் பற்றி சைவத்தின் மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றான **சிவப்பிரகாசம்** நூலின் **50வது** பாடல் கூறுகின்றது. அந்தந்த மதங்களை அனுசரித்து அதன்படி வாழ்ந்தவர்கள் அடைகின்ற இவ்வகையான முத்திப்பேறுகள் எல்லாவற்றையும் சைவம் ஏற்றுக் கொள்கின்றது. ஆயினும் இவ்வாறான முத்திகள் எல்லாம் பத முத்திகள் அதாவது ஒவ்வொரு விதமான பதவி நிலைகளை அடைந்து அனுபவிக்கும் முத்திகள் என்றும் உயிர்களின் இந்த அனுபவ காலம் முடிந்ததும் அவை மீண்டும் தமது பயணத்தை தொடர வேண்டும் என்று சைவம் கூறுகின்றது.

இவ்வாறு உயிர்கள் நாத்திகம் முதலான பலவேறு விதமான மதங்களில் பல பிறவிகளில் பிறந்து அவ்வச்சமய நூல்களும், தாபகர்களும், போதகர்களும் கூறும் முறைப்படி ஒழுகி அவ்வச் சமயங்கள் கூறும் சுவர்க்க போகங்களையும், முத்தி பதங்களையும் அனுபவித்து ஈற்றில் வேதங்கள் கூறும் வைதிக மதங்களில் பிறந்து அவற்றின் பல வழிகளையும் அனுசரித்து ஒழுகி அவை கூறும் துவைத, விசிட்டாத்துவித, அத்துவித முத்தி நிலைகளைத் துய்த்துக் கடைசியாக உயிர் இறையுடன் இரண்டற ஒன்றி அனுபவிக்கும் நித்தியானந்த சுத்த அத்துவித முத்தி நிலையை அடைகின்றன என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது. மெய்யியல் ரீதியாக இதற்கு மேலான நிலை என்று ஒன்றைக் கூறவோ அல்லது கற்பனை பண்ணவோ கூட முடியாத நிலை உள்ளது. ஆகவேதான் சைவம் இதுவே இறுதியில் வருகின்ற நித்தியமான பேரின்ப வீடு என்றும் இதற்கு மேல் எந்தவித முத்தியும் இல்லவே இல்லை என்றும் அறிவியல் ரீதியாக ஆணையிட்டுக் கூறுகின்றது.



**அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் என்று**
**அபேதம், பேதாபேதம், பேதமாக**
**முத்தி பலவும் பகர்ந்தோம் பக்குவத்துக்கு ஈடா(ய்)**
**முத்தி அதிகாரிக்கு சொன்ன முத்தி குகனே கேள்,**
**சுத்த அத்துவிதமான சாட்சாத் தாரகையாஞ்**
**சொன்ன இம் முத்திக்கு மேல் அறிவது ஒன்றும் இல்லை**
**சத்தியமா(ய்), முதற், புனர், சத்தியம் முக்காலும்**
**சத்தியமாகும், நாத்தி, நாத்தி,நாத்தி**

அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் என்று அபேதம், பேதம், பேதாபேதமாக பக்குவத்துக்கீடா(க) முத்தி அதிகாரிக்குச் சொன்ன முத்தி(யை) குக(னே) கேள்! சுத்த அத்துவிதமான சாடசாத்காரதையாக (விளங்கப்பெறுகின்ற) சொன்ன முத்திக்கு மேல் அறியத்தக்கது ஒன்றும் இல்லை. நாத்தி, நாத்தி, நாத்தி (இல்லை, இல்லை, இல்லை)

இது முதல் சத்தியம், புனர் (மீண்டும்) சத்தியம், முக்காலும் சத்தியம். -
**சர்வஞானோத்தர ஆகமம்: பாடல் 32.**

17.02.2013 ஞாயிற்றுக்கிழமை லண்டன் சிவன் ஆலயத்தில் சைவ உலகம் பெருமைப்படும் வகையில் திருமுறை இன்னிசை விழா சிறப்பாக நடைபெற்றது. ஓதுவார்மூர்த்தி சுவாமி தண்டபாணி அவர்களின் முயற்சியையும் ஆலய நிர்வாத்தினரின் ஈடுபாட்டையும் சைவ உலகத்தின் சார்பில் கலசம் பாராட்டி மகிழ்கின்றது.

# நற்றமிழ் வளர்த்த நாவலர்

*திருமதி. புவனேஸ்வரி சபாரட்னம்*

பூ மணக்கும் பொழில் மணக்கும்
புனித நல்லூர் தான் மணக்கப்
பா மணக்க உரை மணக்க
பகர் சைவ நெறி மணக்க
தே மணக்கும் தமிழணங்கு
செய்த பெரும் தவப் பயனால்
நா மணக்க அவதரித்த
நாவலர் தான் இறைஞ்சுதுமே!

*- க.பொ.இரத்தினம்.*




தமிழன்னை பெற்றெடுத்த தவப்புதல்வன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். ஈழத்து தமிழ் இலக்கண அறிஞர்களில் மிகவும் இன்றியமையாதவர். தமிழ் உரை நடையின் தந்தையாகவும், சைவ சமயத்தின் காப்பாளராகவும் கருதப்படுபவர். 1822ஆம் ஆண்டு யாழ் நல்லூரில் பிறந்து 1879ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தவர். அவர் வாழ்ந்த காலத்தில் தமிழிற்கும், சைவத்திற்கும் செய்த சேவைகள் அளப்பரியவை. அன்றைய காலத்தில் பனை ஓலைச் சுவடிகளில் கடினமான பண்டிதர்களும், படித்தவர்களும் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய, பாடல் வடிவிலிருந்த நூல்களை முறையான, தெளிவான முறையில் அச்சுப் பதிப்பித்தவர். திருக்குறள் பரிமேலழகர் உரை, திருவிளையாடற்புராணம், பெரியபுராணம் போன்ற நூல்களையும் பிழையின்றிப் பதிப்பித்தவர்.

நாவலருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஆறுமுகன். இவர் தனது 12ஆவது வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் இரண்டிலும் புலமை பெற்றார். யாழ்ப்பாணத்தில் அன்றைய மெதடிஸ்த் பாடசாலையாகவும் இன்றைய யாழ் மத்திய கல்லூரியாகவும் இருக்கும் கல்லூரியில் கல்விகற்று ஆங்கிலத்தில் புலமை பெற்றார். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் புலமை பெற்ற நாவலர் அப்பாடசாலையிலேயே ஆசிரியராகவும் கடமை புரிந்தார். அக்காலகட்டத்தில் அப்பாடசாலையின் அதிபராக இருந்த பீட்டர் பேசிவல்(Peter Percival) பாதிரியார் கிறீஸ்தவர்களின் புனித நூலான பைபிளைத் தமிழில் மொழிபெயர்க்க எண்ணி ஆறுமுகநாவலரின் உதவியை நாடினார். எட்டு வருடங்கள் பாதிரியாருடன் இணைந்து பைபிளை தமிழில் மொழிபெயர்த்தார்.

சைவப் பிள்ளைகளுக்குப் பாடசாலை நூல் அச்சிடுவதற்காக இந்தியா செல்கிறார் ஆறுமுகம். திருவாவடுதுறை ஆதினத்தில் அவரது பேச்சுவன்மையை வியந்து, ஆதினத்தின் தலைவர் திரு. சுப்பிரமணிய தேசிகர் 'நாவலர்' எனும் பட்டத்தை அளித்துக் கௌரவித்தார்கள். இந்தியாவில் பல இடங்களிலும் அவரைக் கௌரவித்தார்கள். குன்றக்குடியிலுள்ள திருவண்ணாமலை ஆதினத்தில் அவரைப் பாராட்டி பல்லக்கில் ஏற்றி ஓதுவார்களும், தம்பிரான்களும் சூழ்ந்துவர, மங்கல வாத்தியங்களுடன் பட்டணப் பிரவேசம் செய்வித்தார்கள். கற்றோர்க்கும் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதற்கு இதுவோர் உகந்த உதாரணமாகும்.

அக்காலத்தில் ஜோன் கில்னர்(John Kilner) என்னும் ஆங்கிலேயர் நடாத்திய பாடசாலையில் சைவப் பிள்ளைகள் விபூதி அணிந்து செல்வது தடை செய்யப்பட்டது. அதனால் மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். இது கண்டு கொதித்தெழுந்த நாவலர் சைவப் பிள்ளைகளுக்கென சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்றை நிறுவினார். துரதிஷ்டவசமாக நிதி பற்றாக்குறை காரணமாக அப்பாடசாலை இயங்க முடியாமல் போய்விட்டது. யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை, கோப்பாய், பருத்தித்துறை ஆகிய இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பாடசாலைகளை ஸ்தாபித்தார்.

தமிழும் சைவமும் ஒன்றுக்கொன்று இணைவானவை, இவை இரண்டையுமே வளர்க்க வேண்டுமென உறுதி பூண்டார். அதற்கெனப் பிரசங்கங்கள் செய்தார். அதன் விளைவாக சமய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அன்றைய யாழ்ப்பாணத்தில் ஒரு பக்கம் புரட்டஸ்ரன் மதமும் மறுபக்கம் கத்தோலிக்க மதமும் சைவசமயத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தன. பலர் மதம் மாறி ஆங்கிலக் கல்விகற்று வாழ்க்கையில் முன்னேறினார்கள். தமது மொழியையோ,

மதத்தையோ அவர்கள் பொருட்படுத்தவில்லை. இப்படியான நேரத்தில் மதம் மாறுவதைத் தடுத்து சமய விழிப்புணர்ச்சியை ஊட்ட தமது முழு நேரத்தையும் செலவிடத் தீர்மானித்தார். இதன் காரணமாகத் தனது ஆசிரியத் தொழிலைத் துறந்தார். அதன் ஊதியமான 3 பவுண்களைத் துறந்தார், எல்லாவற்றிற்கும் மேலாகத் தனது திருமணவாழ்வைத் துறந்தார். தமிழும், சைவமும் அவரது உயிர் மூச்சாக இருந்தது.

ஆறுமுகநாவலர் சைவ சமய வேத, ஆகமப் பாடசாலையை அமைத்தார். ஆகம விதிகளுக்குப் புறம்பாக நடப்பவர்களை வன்மையாகக் கண்டித்தார், கிறிஸ்தவர்களை மாத்திரமல்ல, சைவர்களையும் அவர் தனது பிரசங்கங்களிலே தாக்கிப் பேசினார். போர்த்துக்கேயரால் 15ஆம் நூற்றாண்டில் அழிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசாமி கோயில் 1750ஆம் ஆண்டில் திரும்பக் கட்டப்பட்டது. கந்தசாமி கோயில் ஆகம விதிகளுக்கமையக் கட்டுப்படவில்லை என்று சாடியது மட்டுமல்ல அக்கோயிலிலே வேல் வைத்து வணங்குவதையும் எதிர்த்தார்.

நாவலர் காலத்தில் ஒன்பது நிலையங்களை அமெரிக்க, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த மிஷனரிகள் அமைத்திருந்தனர். நாவலரின் தீவிரமான பணியால் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல தென் இந்தியாவிலும்கூட சைவம் தப்பிப் பிழைத்தது. கடினமான தமிழ் நடையை எல்லோருக்கும் விளங்கும் உரைநடையாக மாற்றியமைத்த பெருமை நாவலரையே சாரும். ஏறத்தாள 97 நூல்களைப் பதிப்பித்தார். 23 அவரது சொந்த நூல்கள். 11 நூல்களுக்கான உரை. 40 இலக்கண, இலக்கியம, தத்துவமாகும். சைவ வினாவிடை, பாலபாடம் இன்றும் போற்றப்படுபவை.

ஆறுமுகநாவலர் கிறிஸ்தவ நூலான பைபிளை ஒழுங்காகக் கற்றார். கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்குக் கிறிஸ்தவ மிஷனரிகள் பெருந்தொகையான நூல்கள் பதிப்பிப்பதையும், பெரும் செலவில் கல்லூரிகள், கிறிஸ்தவ ஆலயங்கள், மத வகுப்புகள் நடத்தப்படுவதைக் கண்டு, அதை முன்மாதிரியாகக் கொண்டு சைவசமயத்தையும் வளர்க்க அதற்கான முயற்சிகளில் இறங்கினார்.

இராமலிங்க அடிகளார் மிகப்பெரிய ஆன்மீகவாதி, "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்" என்ற அற்புதமான பாடலைப் பாடியவர். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று வருந்திப் பாடிய கருணையுள்ளம் கொண்டவர். அவர் பாடிய பாடல்களைத் திருமுறைகளுடன் ஒப்பிட்டுப் பாடுவதை எதிர்த்து "போலி அருட்பா" என்னும் மறுப்பு நூலை வெளியிட்டு தனது மறுப்பைத் தெரிவித்தார். ஆலயங்களில் தேவாரம், திருமுறைகள் மட்டுமே ஓதப்பட வேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார் நாவலர்.

தமிழைச் சீர்படுத்திய பெருமையும், சைவத்தை வளர்த்தெடுத்த திறமையும், அந்நிய அரசாங்கங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ், சைவம் இரண்டையுமே காப்பாற்றிய வீரமும் எங்கள் யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலருக்கே உண்டு என்பதை உணர்ந்து பெருமையடைகிறோம். தமிழும், சைவமும் வாழும்வரை அவர் நினைவு வாழும்.

## கருவறையில் அர்த்தநாரீஸ்வரர்

சிவனும் சக்தியும் சமமானவை. இருவரும் சோந்ததே உலகம் என்பதை உணர்த்தும் திருவடிவம் அர்த்தநாரீஸ்வரர் வடிவாகும். திருச்செங்கோடு சிவன் கோயிலின் கருவறையில் இறைவன், அர்த்தநாரியாக எழுந்தருளி, அருள் பாலிக்கின்றார். மேலும் இது நவபாஷாணத்தால் ஆனது என்பது மற்றோர் சிறப்பு. இங்கு இறைவன் திருவடியின் கீழ் வற்றாத ஒரு சுனை பாய்கின்றது. இதைத்தான் 'தேவதீர்த்தம்' என்று அடியார்க்குக் கோயிலில் கொடுக்கின்றார்கள்.

# அறம்

அவர்கள் காத்திருந்தனர், ஞானியார் தியானத்திலிருந்து விழிப்பதற்கு. இப்போதெல்லாம் இதே வாடிக்கையாகப் போய்விட்டது. அவர் தியானம் கலைந்து விழித்தவுடன் தங்கள் குறைகளை, கேள்விகளை அவர்முன் வைத்து, அவரது பதிலைப்பெற்று அமைதி அடைந்தார். ஏனென்றால் கண்விழித்த சிறிது நேரத்திலேயே மீண்டும் ஞானத்தில் ஆழ்ந்து விடுவார். அந்த சில மணித்துளிகளுக்காக மக்கள் காத்திருக்கத் தொடங்கினர்.

ஞானி கண் விழித்தார். அனைவரையும் ஒரு முறை கனிவோடு நோக்கினார். அவர் பார்வை ஒருவன் மீது நின்றது. அவன் அவரை வணங்கிக் கேட்டான் "சாமி, கடவுளை எப்படி வழிபடுபடுவதுன்னே எனக்குத் தெரியலை. பெரிசா பூசை செய்யவோ, படையல் வைக்கவோ என்னால் முடியாது. நான் என்ன செய்யணும் சாமி?"




"இறைவனை வழிபடுவதற்கு எந்த நியதியும் இல்லையப்பா. இதில் ஆடம்பரம் தேவையில்லை. நான் என்ற சிந்தையற்று ஆழ்ந்த பக்தியுடன், உள்ளம் நிறை அன்புடன் ஒரு இலையைப் போட்டு வணங்கு. வில்வமோ அல்லது துளசியோ ஏதாவது ஒன்று. அவன் திருப்தி அடைவான். உன் பூசையை ஏற்றுக் கொள்வான்". ஞானி பதிலளித்தார்.

அவர் அடுத்தவனைப் பார்த்தார். அவன் கேட்டான் " சாமி, நான் அதிக வசதியில்லாதவன். தருமம் செய்யணுன்னு ஆசை இருக்கு. ஆனால் கொஞ்சமா ஏதாவது செஞ்சா எல்லாரும் கேலி செய்வாங்களோன்னு பயமா இருக்கு. நான் என்ன செய்ய சாமி?"

அவர் பதிலளித்தார் "உனக்கு நல்ல மனது இருக்கிறது. ஈதல் என்பது பெரிதாக இருக்க வேண்டியதில்லை. நேற்று நீ இங்கு வரும்போது எதிர்ப்பட்ட ஒரு பசுவுக்கு ஒரு வாய் புல் அளித்தாயே அதுவும் ஒரு தருமம்தான். நீ உண்ணும் உணவில் சிறிது பசித்தவருக்கு வழங்கினால் அது அறம். உண்ணும் முன் காக்கைக்குச் சிறிது அன்னமிட்டால் அதுவும் தர்மம் தான்".

அவர் பார்வைபட்ட அடுத்தவன் கேட்டான் "இதெல்லாம் கூட முடியலேன்னா என்ன செய்ய?"

கொஞ்சம் இடக்குப் பிடித்த அவனது கேள்வியைச் செவியுற்று அவர் புன்னகைத்தார். "ஊரில் எல்லோரும் உன்னை மிகவும் கோபக்காரன் என்று சொல்கிறார்கள். பல நேரங்களில் நானே கவனித்திருக்கிறேன். இனிமையாகப் பேசாமல் சுடு சொற்களையே பேசுவதை விடுத்து அனைவரிடமும் இன் சொற்களையே பேசுவாயாகில் அதுவே சிறந்த அறம்தானாம்.

"முகத்தானமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன் சொலினதே அறம்."

இதைச் சொல்லிவிட்டு ஞானி மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார்.




படம் - நன்றி: தினமலர்

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே". (திருமூலர்)

**எழுதியவர்–மதுரை சொக்கன்**

## மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் - அச்சோப் பதிக முதலாவது பாடலும் ஆங்கில மொழி பெயர்ப்பும்




51. **அச்சோப் பதிகம்**- அனுபவவழி அறியாமை
(தில்லையில் அருளியது)

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே –650

**Achchop pathikam** Translation by Rev.G.U.Pope
Oxford, Clarendon Press, 1900

THE WONDER OF SALVATION- ENJOYMENT INEFFABLE.



This hymn was composed after he had settled down in Tillai, His active life finished, and was waiting for the great release. He surveys, as he was so fond of doing, the whole course along which his Master had guided him; acknowledges how often he had fallen through an undisciplined and unpurified mind; and records with thankfulness that grace him the victory at last. *No rapture is like his!* Each verse addresses his Master variously as (1) Father, (2) the Mystic Dancer, (3) the Guru, (4) the High and Lofty One, (5) the Master, (6) the Blissful, (7) again as the Guru, (8) the Author of all things, and (9) the Mother (being one with Umai).

I. The Father's converting grace.
To me, who toiled and moiled 'mid fools, that knew not WAY of final peace,
He taught the WAY of pious love;- and that 'old deeds' might cease and flee,
Purging the foulness of my will, made me pure bliss, took for His own;-
'T was thus the FATHER gave me grace: O RAPTURE ! WHO SO BLEST AS I ?


# கலசம்
# KALASAM

கலசம் உங்கள் வீடு தேடி வர வேண்டுமா? இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்

If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment—payable to **SMS UK**

பெயர் : ........................................................................................ Donation: £...........

முகவரி : ........................................................................................ Postage: £ .........


........................................................................................ Total: £..........

........................................................................................

Postage and admin for two years : £10 (UK/Europe); £20 (Rest of the world).

**SMS Kalasam** 2 Salisbury Road, Manor Park, London E12 6AB kalasm@hotmail.com

# அருணகிரி நாதர் அருளிய திருப்புகழ்



விநாயகர் துதி


தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.



பதம் பிரித்தல்

கைத்தலம் நிறைகனி அப்பமொடு அவல்பொரி
கப்பிய கரி முகன் அடிபேணி




கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் என வினை கடிது ஏகும்

மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மல் பொரு திரள் புய மத யானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டு அவிழ் மலர் கொடு பணிவேனே

முத்தமிழ் அடைவினை முற்படு கிரி தனில்
முற்பட எழுதிய முதல்வோனே



முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம்
அச்சு அது பொடி செய்த அதிதீரா

அத்துயர் அது கொடு சுப்பிரமணி படும்
அப்புனம் அதனிடை இபம் ஆகி

அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அககணம் மணம் அருள் பெருமாளே.

**பதவுரை**

கைத்தலம் = கையில். நிறை = நிறைய. கனி = பழம். அப்பம் ஒடு அவல் பொரி = அப்பம், அவல்,பொரி(இவைகளை). கப்பிய = வாரி உண்ணும். கரிமுகன் = யானை முகக் கடவுளின். அடிபேணி = திருவடிகளை விரும்பி. கற்றிடும் அடியவர்=கற்கும்அடியவர்களுடைய. புத்தியில் உறைபவ =மனதில் உறைபவனே. கற்பகம் என = (உன்னைக்) கற்பகமே என்று கூறினால். வினை = வினைகள்(யாவும்). கடிது ஏகும் = விரைவில் ஓடிப் போகும்.

மத்தமும் = ஊமத்த மலரும். மதியமும் =(பிறைச்) சந்திரனும். வைத்திடும்அரன் மகன் = (சடையில்) தரித்த சிவபெருமானுடைய மகனும். மல் பொரு திரள் புய = மற்போருக்குத் தக்க திரண்ட தோள்களையுடையவனும். மதயானை = மதயானையை ஒத்தவனும்.

மத்தள வயிறனை = மத்தளம் போன்ற வயிறு உடையவனும். உத்தமி = உத்தமியாகிய (பார்வதியின்). புதல்வனை = மகனும் (ஆகிய கணபதியை). மட்டு அவிழ் மலர் கொடு = வாசனை வீசும் மலர்களைக் கொண்டு. பணிவேனே = நான் பணிவேன்.

முத்தமிழ் அடைவினை = முத்தமிழை எல்லாம். முற்படு கிரிதனில் = (மலைகளுள்) முற்பட்டதான மேரு மலையில். முற்பட எழுதிய = முதல் முதலில் எழுதிய. முதல்வோனே = முதன்மையானவனே.

முப்புரம் எரி செய்த =(அசுரர்களின்) திரிபுரங்களையும் எரித்த. அச்சிவன் = அந்தச் சிவபெருமான். உறைரதம் = எழுந்தருளிய இரதத்தின். அச்சு அது = அச்சை. பொடிசெய்த = பொடியாக்கிய. அதிதீரா = மிக்க தீரனே

அத்துயரது கொடு = (வள்ளியம்மை மீது கொண்ட காதலாகிய) அந்தத் துயரத்தோடு. சுப்பிரமணி படும் =(உன் தம்பியாகிய) சுப்பிரமணி நடந்த. அப்புனம் அதன் இடை = அந்தத் (தினைப்)புனத்திடை. இபமாகி = யானையாகத் தோன்றி.


அக்குற மகளுடன் = அந்த குற மகளாகிய வள்ளியுடன். அச்சிறு முருகனை =அந்தச் சிறிய முருக வேளை. அக்கணம் = அப்பொழுதே. மணம் அருள் பெருமாளே = மணம் புரிவித்த பெருமாளே.

**சுருக்க உரை**

கை நிறையப் பழம், அப்பம், அவல், பொரி இவைகளை வாரி உண்ணும் யானை முகக் கடவுளின் திருவடியை விரும்பிக் கற்கும் அடியவர் உள்ளத்தில் உறைபவனே. உன்னைக் கற்பகமே என்று கூறினால் விரைவில் வினைகள் யாவும் ஓடிப்போகும். ஊமத்தம்பூ, பிறைச் சந்திரன், இவற்றைச் சடையில் அணிந்துள்ள சிவபெருமானின் மகனும், மற்போருக்குத் தக்க திரண்ட தோள்களை உடையவனும், மதயானையை ஒத்தவனும், மத்தளம் போன்ற வயிற்றை உடையவனும், உத்தமியாகிய பார்வதியின் மகனுமாகிய கணபதியை, வாசனை வீசும் மலர்களைக் கொண்டு நான் பணிவேன்.

முத்தமிழை எல்லாம் பழமையான மேரு மலையில் முன்பு எழுதிய முதன்மையானவனே. திரிபுரங்களை எரித்த சிவபெருமானின் இரதத்தின் அச்சைப் பொடியாக்கிய மிக்க வல்லவனே. வள்ளிநாயகியின் மீதுள்ள காதலால் துயரமுற்ற உன் தம்பியாகிய சுப்பிரமணி நடந்த அந்தத் தினைப்புனத்தில் யானையாகத் தோன்றி, அந்தக் குறமகளுடன் இளையவனாகிய முருகவேளுக்கு மணம்புரிவித்த பெருமாளே, உன்னை மட்டவிழ் மலர் கொண்டு பணிவேன்.

*உரை திரு. கோபாலசுந்தரம்*
**www.kaumararam.com**



# வீரபத்திரக்கடவுள்

*- மு.சிவராசா*

பிரம்மதேவனின் மூத்த மகன் தக்கன். தந்தையிடம் உபதேசம் பெற்று சிவனை நோக்கித் தவம் செய்து மூவுலகையும் அடக்கி ஆளும் வல்லமையையும், உமையம்மையை மகளாகவும் அவளை மணக்கும் மருகனாக சிவனையும் பெற்றான். தாட்சாயணி என்ற பெயரில் வளர்ந்த உமையைத் சிவன் திருமணம் புரிந்தார். ஆயின் தக்கன் விரும்பியவாறு மணச்சடங்கு நடைபெறுமுன் பெருமான் தேவியைக் களவாகக்கூட்டிக் கொண்டு கையிலை சென்றார். கோபமடைந்த தக்கன் சிவனைப் பலவாறு இகழ்ந்தான். பின்பு பிரமன் முதலியோர் ஆலோசனைப்படி மகளையும் மருகனையும் காண கையிலை சென்றான். அங்கே காவலராகிய பூதங்கள் தக்கனை உட்செல்ல அனுமதிக்கவில்லை. மீண்ட தக்கன் சிவனையும், தாட்சாயணியையும் வெறுத்து அவர்களைத் தன் விரோதிகளாகவே கருதலானான்.

உலக நாயகராகிய சிவபெருமானை முன்னிட்டு பிரம்மதேவர் ஒரு யாகம் செய்தார். அதற்கு விஷ்ணு முதலாய தேவர்களும், முனிவர்களும், தக்கனும் பிறரும் வந்திருந்தனர். யாகத்தில் சிவனுக்காக அவிர்ப்பாகத்தைப் பெற நந்திப்பெருமான் வந்திருந்தார். "சுடலையில் ஆடும் அந்தப் பித்தனுக்கு அவிர்ப்பாகம் கொடுக்க வேண்டாமென" தக்கன் தடுத்தான். அல்லாமலும் யாகசாலையில் எல்லோர் முன்பும் சிவனை இகழ்ந்துரைத்தான். இதனால் கோபமடைந்த நந்தியெம் பெருமான் "சிவனைப் புறந்தள்ளி யாகம் செய்பவர் தலை அறும்படி சாபமிட்டு அவ்விடம் விட்டு அகன்றார். பிரமயாகம் அந்த அளவில் நின்று போயிற்று. நந்தி சாபம் காரணமாகவும், தக்கனுக்கு பயந்தும், அதன்பின் எவரும் யாகம் செய்ய முற்படவில்லை.

தக்கன் தானே வேள்வி ஒன்று செய்யத் தொடங்கினான். அவனுக்குப் பயந்து தேவர், முனிவர் யாவரும் யாகத்துக்கு வந்தனர். சிவனுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. யாகம் நடக்கையில் தக்கனின் தவறைத் திருத்த விரும்பிய உமையம்மை சிவனார் தடுத்தும் கேளாது யாகசாலைக்கு வந்தார். "உன்னையோ, உன் கணவனையோ நான் இங்கு அழைக்கவில்லையே, எதற்காக நீ வந்தாய்" என்று தக்கன் கேட்க, அம்மையார் இதமாகவும், கடுமையாகவும் பல சொல்லித் தந்தையைத் திருத்த முயன்றார். முயற்சி பலிக்காததால் பெருமானிடம் திரும்பிச் சென்று தக்கன் செய்யும் யாகத்தை அழிக்கும்படி வேண்டினார்.



உமையின் வேண்டுகோளை நிறைவேற்றத் தமது நெற்றிக்கண் வழியே வீரபத்திரர் என்னும் புதல்வனைப் பெருமான் தோற்றுவித்தார். மாலைக்கால மேகம் போன்ற நிறமும் சிவனுடைய உருவமோ என்று சொல்லும்படியான திருமேனியும் கொண்டிருந்தார் வீரபத்திரர். அவ்வேளை பிராட்டியாரும் வீரபத்திரை என்பவரைத் தோற்றுவித்தார். "எம்மை நீக்கி நடைபெறும் யாகத்தை அழித்து, பங்கு கொள்பவரைத் தண்டித்து வருக" என சிவன் வீரபத்திரருக்குப் பணிப்புரை விடுத்தார். இருவரும் வீரபத்திரரின் பெருமூச்சிலிருந்து உண்டாகிய கணங்களோடு யாக சாலையை அடைந்தனர். அங்கு வீரபத்திரர் சிவனுக்குரிய அவிர்பாகத்தைத் தரும்படி கேட்க தக்கன் தர மறுத்தான்.

சிவனைப் புறந்தள்ளி நடைபெற்ற யாகத்தில் பங்குபற்றியவர்கள் யாவரையும் வீரபத்திரரும் உடன் வந்தவர்களும் தண்டித்தனர். பிரமன் தலையில் குட்டுப்பட்டான். சரஸ்வதியின் மூக்கு அறுந்தது. சூரியன் பல் உடைந்தது. சந்திரன் காலால் தேய்க்கப்பட்டான. இயமன் தலை வெட்டுண்டது. குயிலுருக்கொண்டு ஓடிய இந்திரன் வாளால் வெட்டுண்டு இறந்தான். தப்ப முடியாதென்பதை உணர்ந்த தக்கன் வீரனைப்போல் எதிர்த்தான். அருகே வந்த வீரபத்திரர் தமது வாளால் அவன் தலையைத் துணித்து யாக அக்கினியில் எரியும்படி போட்டார்.

அந்நேரத்தில் சிவனும் உமையும் யாகசாலைக்கு வந்தனர். கருணைக் கடலாகிய உமையின் வேண்டுகோள்படி சிவனருளால் இறந்த யாவரும் உயிர் பெற்றெழுந்தனர். வேள்விச்சாலையில் தலையின்றிக் கிடந்த தக்கனின் உடலில் வெட்டுண்டு கிடந்த ஓர் ஆட்டின் தலையைச் சேர்த்து வீரபத்திரர் அவனை உயிர் பெற்றெழச் செய்தார். தக்கன் இப்போது நல்லறிவு வரப்பெற்று வணங்கினான்.

"அடைந்து அவிஉண்டிடும் அமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமகம் ஓடியத் தக்கனை
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்." - கந்தபுராணம்.

# ஆண்டவனும் அற்புதங்களும்

*- தவம்*

பெரியபுராணம், திருவிளையாடற்புராணங்கள் மூலம் நாம் ஆண்டவன் நிகழ்த்திய பல அற்புதங்களை அறிந்திருக்கின்றோம், வியந்து மகிழ்ந்திருக்கின்றோம். அன்றல்ல, இன்றும் என்றும் ஆண்டவன் தன் அருட்கருணையினால் பக்தர்களைக் காப்பதற்காகப் பல அற்புதங்களை நடாத்துகிறார். பக்தர்கள் அதனை அனுபவபூர்வமாக உணர்ந்தாலும் அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை, வெளிப்படுத்துவதுமில்லை. இதனால் இன்றைய தலைமுறையினரிடம் கடவுள் நம்பிக்கை குறைந்து போகின்றது. இந்த உண்மையைத் திருமுருக கிருபானந்தவாரியார் தான் நடித்த பக்திப்படமொன்றில் குறிப்பிடுகிறார். அற்புதங்கள் கலியுகத்தில் மக்களிடம் கடவுள் நம்பிக்கையை வளர்த்துள்ளது.

கலசத்தை வாசிக்கும் அன்பர்கள் தமது வாழ்க்கையில் நடைபெற்ற அல்லது கேள்விப்பட்ட ஆண்டவனின் அற்புதங்களை எழுதுங்கள். அது இளந்தலைமுறையினரிடையே நிச்சயமாகப் பக்தியுணர்வை வளர்க்க உதவும். உதாரணமாக நான் கேட்ட சம்பவம் ஒன்றை இங்கு குறிப்பிடுகின்றேன். நான் சில வருடங்களின் முன்பு யாழ்ப்பாணம் சென்றபோது அங்கு ஒரு தம்பதிகள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவத்தைக் கூறினர். அதாவது ஒருநாள் கணவனும் மனைவியும் தங்களின் மோட்டார் சைக்கிளில் முல்லைத்தீவு சென்றபோது காட்டுப் பகுதியைக் கடக்கும் வேளையில் ரயறின் காற்றுப்போய் வண்டி வழியில் நின்றுவிட்டதாம். பொழுதும் இருளத்தொடங்கி விட்டதாம். “பிள்ளையாரப்பா நீதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்” என அவர்கள் வழக்கமாகச் செல்லும் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையாரை மனதார வேண்டிக்கொண்டு நின்றனராம். அப்போது அங்கே ஒருவர் காற்றடிக்கும் பம்புடன் (Pump) வந்து “என்ன சில்லின் காற்று போய்விட்டதா? என்று கேட்டுவிட்டுத்தானே அந்த ரயறுக்கு காற்றை அடித்து விட்டாராம். அந்தத் தம்பதிகள் வண்டி ஓடுகிறதா என்று சோதித்துப் பார்த்து விட்டு உதவி செய்தவருக்கு நன்றி சொல்லத் திரும்பிப் பார்த்தபோது உதவி செய்த அந்த மனிதரைக் காணவில்லையாம். இதனைச் சொன்னபோது அந்தப் பெண்ணின் கண்கள் கலங்கின. அதைக்கேட்டு என் மனம் சிலிர்த்தது. எனவே கலசத்தை வாசிக்கும் அன்பர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களையோ, கேட்ட அனுபவங்களையோ எழுதுங்கள். அவை இளைய தலைமுறையினரிடையே சமய நம்பிக்கைகளையும் பக்தியையும் வளர்க்கும்

நாயன்மார்கள், ஆழ்வார்கள் இன்னும் எத்தனையோ மகான்கள் இந்துசமய வளர்ச்சிக்காகத் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்தார்கள். குறிப்பாகச் சமய குரவர்கள் நால்வரும் இறைவனை உருகிப்பாடி ஆண்டவனருளால் பல அற்புதங்களை நிகழ்த்தினர். புத்த சமயத்தவரை வாதில் வென்றும், சமணரின் சவால்களைத் தோற்கடித்தும் இந்து சமயத்தை நிலை நிறுத்தினர். புத்த சமயமும் சமண சமயமும் தமிழ் நாட்டினில் பரவி விடாது தடுத்தனர்.

பல்லின மத, சூழ்நிலையில் வளரும் நம் இளந்தலைமுறையினரின் மனதில் சமய நம்பிக்கையை வளர்க்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். இங்கு இந்துக்கள் பலர் கிறிஸ்தவர்களாக மாறுவதையும் காணக் கூடியதாக இருக்கிறது. காரணம் இவர்களுக்குப் போதிய சமய அறிவு இல்லாததேயாகும். கலசத்தில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவரும் கட்டுரைகள் கதைகள் பெரியவர்களுக்கும் சிறார்களுக்கும் இலவசமாக அளிக்கப்படும். இதழ்களைப் பெற்றோர்களும் பிள்ளைகளும் சேர்ந்து வாசித்துப் பயனடையலாம். பெற்றோர்கள் படிப்பு, பட்டம், பதவி என்பதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துகிறார்கள். பிள்ளைகள் இதனை இருபத்தைந்து வயதிற்குள் அடைந்து விடுகின்றனர். மீதியாக இருக்கும் வாழ்நாளை நிம்மதியாக, சந்தோசமாக, பயனுள்ளதாகக் கழிப்பதற்கு சமயத் தத்துவங்களே பெரிதும் உதவும் என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# தவத்தின் பயன் - கந்தபுராணச் சிந்தனைகள்

கலாநிதி சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

தவம் என்பது விரதங்களினாலும், ஏனைய செய்கைகளினாலும், கட்டுப்பாடுகளினாலும் தனக்கு வருகின்ற துன்பங்களைப் பொறுத்துக்கொள்வதும், மற்றயை உயிர்களுக்கு அன்பு காட்டுவதுமாகுமென்று வள்ளுவரின் குறளுக்குப் பரிமேலழகர் விளக்கம் கூறுகிறார்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

தவம் என்பது கட்டுப்பாட்டில் நிற்றல் எனப் பொருள்படும். தவத்தைப்பற்றி மேலும் சொல்லப் புகுந்த வள்ளுவர் மறுமைக்கண் தாம் வேண்டியதை வேண்டியவாறே பெறுதலால், தவமானது அறிவுடையோரால் இம்மைக்கண் செய்யப்படும் என்கிறார். இதன் மூலம் தவத்தின் பயன் மறுமைக்கண்தான் பெறப்படும் என்கிறார் வள்ளுவர். மேலும்,

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்

என்னும் குறள் மூலம் உலகத்திலே செல்வர்கள் சிலராகவும், வறியவர்கள் பலராகவும் இருப்பதற்குக் காரணம் தவம் செய்பவர் சிலராகவும், தவம் செய்யாதவர் பலராகவும் இருப்பதே என்று சொல்லுகிறார்.

பிரம்மதேவரின் மகனான காசிபமுனிவர் வாயிலாகத் தவத்தைப்பற்றி கந்தபுராணம் சொல்கிறது. காசிபர், தன்னுடைய பிள்ளைகளான சூரனுக்கும் சகோதரர்களுக்கும் கொடுத்த புத்திமதியாக இது தரப்படுகிறது. 'வலிமையை உள்ளதாக்குவது சிறந்த தவமே அல்லாது வேறு ஒன்றைச் சொல்ல முடியுமோ? இல்லை. அது சொல்வதற்கரிய சிவப்பேற்றைத் தரும். போற்றுவதானால் அத்தவத்தையே போற்றவேண்டும்.'

ஆற்றலை யுளதுமா தவம தன்றியே
வீற்றுமொன் றுளதென விளம்ப லாகுமோ
சாற்றருஞ் சிவகதி தனையும் நல்குமால்
போற்றிடின் அனையதே போற்றல் வேண்டுமால்

காசிபன் உபதேசப்படலம் 15

'இந்தத் தவமானது பிறவியை நீக்கி மேலான வீடுபேற்றையுந் தந்து தலைமையைத் தரும். இது மாத்திரமன்றி இப்பிறவியில் வேண்டப்படும் இன்பங்களையும் மனத்தில் நினைத்தவாறு தரும்.' என்று கூறிய காசிபர், தொடர்ந்தும் சொல்கிறார், 'தவத்தைவிடச் சிறந்த பொருள் வேறு ஒன்றும் இல்லை. குற்றமற்ற சிறப்புடைய தவத்தைப்போன்ற பொருளும் வேறில்லை. தவத்தினும் அரிய பொருளும் வேறில்லை. சொல்லுவதானால், தவத்திற்கு ஒப்பாவது தவமேயாகும்.'

தவந்தனின் மிக்கதொன் றில்லை தாவில்சீர்த்
தவந்தனை நேர்வது தானும் இல்லையால்
தவந்தனின் அரியதொன் றில்லை சாற்றிடில்
தவந்தனக் கொப்பது தவம தாகுமே.

காசிபன் உபதேசப்படலம் 23


இவ்வாறு தவத்தினையும் அதன் பெருமைகளையும் பயனையும் விளக்கிய காசிப முனிவர் தவத்தைச் செய்து அத்தவத்தின் பயனாகக் காலனையும் வென்ற மார்க்கண்டேயரின் சரித்திரத்தை உதாரணங் காட்டுகிறார். தாம் செய்த தவத்தாலே மார்க்கண்டேயர் தவறாத விதியையும் வென்று, எமனது வலிமையையும் அழித்து, அவனையும் அழித்து, பின் எக்காலத்தும் இறவாத தன்மையையும் பெற்றதைச் சொல்கிறார்.

சூரன் சிவனை நோக்கிச் செய்த பெருவேள்வியின் பயனாகப் பல வரங்கள் பெறுகிறான். தேவர்களைச் சிறையில் இடுகிறான். தேவர்களைச் சிறையின் மீட்க முருகப்பெருமானின் தூதுவராக வீரவாகுத்தேவர் சூரனிடம் செல்கிறார். சூரனின் தலைநகராம் மகேந்திரபுரியின் வளத்தையும் மக்களின் வளமான வாழ்க்கையையும் கண்ட வீரவாகுத்தேவர் பல தடவைகளில் அசுரர்களின் தலைவனான சூரன் செய்த தவத்தின் பெருவலியை வியக்கின்றார். உதாரணத்திற்கு ஒன்று. 'பூமி செய்த தவத்தினால் உண்டானது என்று கூறத்தக்க மகேந்திரபுரி என்ற இந்த நகரத்தின் சிறப்பு இரண்டு என்ற எண்ணிக்கையுடைய கண்களை உடையவரால் காணும் எளிமை கொண்டதோ? இல்லை. அல்லது, வானுலகிலே இருப்பவர்களாற் காண முடியுமோ? அதுவும் இல்லை. இந்நகரை, கண்களை மிகுதியாகக் கொண்டவரால் அல்லாது மற்றவரால் காண முடியுமோ? முடியாது.'

மண்ப டைத்திடு தவமெனும் மகேந்திர மலிசேர்
எண்ப டைத்தகண் ணிரண்டினர் காணுதல் எளிதோ?
விண்ப டைத்தவற் காயினும் அமையுமோ மிகவுங்
கண்ப டைத்தவர்க் கன்றியே கண்டிட லாமோ

நகர்புகு படலம் 84

இவ்வாறாகத் தலைநகரின் சிறப்பைச் சொல்வதன் மூலம் அதன் சொந்தக்காரனான சூரனின் தவ வலிமையைக் கந்தபுராணம் எடுத்துச் சொல்கிறது. இதனாலே கட்டுப்பாட்டில் நிற்றல் என்ற தவத்தை மிகவும் வலிமை வாய்ந்தவொரு சைவக்கலாசாரமாகக் கந்தபுராணம் சொல்லாநிற்கிறது.






# சேரமான் பெருமாள் நாயனார்

*- மு சிவராசா*

தம்பிரான் தோழராய் இருந்த சுந்தரமூர்த்தி நாயனார் பின்னர் சேரமான் தோழருமாகிப் பெருமை பெற்றார். சுந்தரர் கயிலை சேர்ந்த இடம் என்பதால் சிறப்படைந்த இடம் கொடுங்கோளூர். சேரமன்னர் ஆட்சியாற் சிறப்பெய்திய இந்நகரம் நாட்டின் தலைநகராகவும் விளங்கிற்று. இயற்கை வளம் நிறைந்த அத்திருநகர் விலங்குகள், பறவைகள் போன்ற உயிர் வர்க்கங்களின் ஒலிகளால் மாத்திரமல்லாமல், கடலோசை, காற்றோசையாலும் இன்பம் தருவதாய் அமைந்திருந்தது. இத்தலத்தில் சேரமன்னர் குலமும் உலகும் செய்த தவப்பேற்றால் பெருமாக்கோதை யார் அவதரித்தார். அரசு புரிவதைக் காட்டிலும் அரன் பணி செய்வதே இம்மை மறுமைக்கு மாத்திரமல்ல, வீடுபேற்றுக்கும் வழி செய்யும் என்பதை உணர்ந்து அஞ்சைக்களத்து அப்பனுக்கு அடிமைபூண்டு வாழலானார். மலர்ச் செடிகொடிகளை வளர்த்தும் மாலைகள் தொடுத்தும் அரனைப் பூசிப்பதோடு வேறு பல திருத்தொண்டுகளிலும் ஈடுபட்டு வாழ்ந்தார்.



நாட்டின் அரசர் துறவறம் மேற்கொண்டு காடு சென்றபோது வாரிசான இவரை அரசுக் கட்டில் ஏறும்படி அமைச்சர்கள் வேண்டினர். இறைவன் திருத்தொண்டுக்கு இவர்களின் வேண்டுகோள் இடையூறு தரும் என்பதால் இறைவனின் திருவுள்ளம் அறிந்து செயற்பட முடிவு செய்தார். அரசாட்சியைப் பொறுப்பேற்று அரன் பணியும் புரிவதென முடிவானது. இறையருளால் மக்கள் மொழிகளைத் தெரிந்துகொண்டதோடு மிருகங்கள் பறவைகளின் மொழிகளையும் அறிந்து கழறிற்றறிவார் ஆனார்.



முடிசூட்டு விழாவின்போது யானைமீது ஏறி ஊர்வலம் வந்த சமயம் மழையில் நனைந்த உடலில் உலர்மண் செறிந்து காய்ந்த நிலையில் அவ்வழியே வந்த வண்ணான் ஒருவன் மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியனாய் அவர் கண்ணுக்குத் தோன்ற, அவர் யானையில் நின்றும் இறங்கி வண்ணானை வணங்கினார். அவன் அடியேன் அடிவண்ணான் என்று மனம் நடுங்கக் கூறியபோது அவர் அடியேன் அடிச்சேரன் என்று பதிலிறுத்து திருநீற்றின் பெருமையை நினைவுபடுத்திய அவனை வணங்கினார்.

மதுரை சோமசுந்தரப் பெருமானிடம் பொருள் வேண்டிய பாணபத்திரன் என்னும் புலவனுக்குப் பொருள் உதவுமாறு சேரமானுக்கு சோமசுந்தரக் கடவுள் கடிதம் ஒன்று அனுப்பினார். கடிதம் கண்ட மன்னர் அளவற்ற மகிழ்வோடு தமது அரசாட்சியையே எடுத்துக்கொள்ளும்படி பத்திரருக்கு வழங்க, அவர் தமக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக்கொள்வேன் என்று மறுத்துரைத்தார். மன்னர் இசைவு கொண்டார்.

தம்முடைய நாளாந்தப் பணிகளுள் சிவபூசை செய்வதையும் சேர்த்திருந்த அவருக்கு, பூசை முடிவில் ஆடும் சிதம்பரத்து அண்ணல் தம்முடைய பாதச் சிலம்பொலி கேட்கும்படி அருளி யிருந்தார். ஒரு நாள் பூசை முடிவிலே சிலம்பொலி கேட்காததால் தாம் ஏதோ பெரிய தவறு செய்துள்ளோமோ எனக் கவன்று உடைவாளை உருவித் தற்கொலை செய்துகொள்ள முயன்றார். அத்தருணம் சிலம்பொலி கேட்டது. தாமதத்தின் காரணத்தை அறிய விரும்பிய மன்னருக்குச் சிற்றம்பலவனார் தமது சந்நிதியில் பண்ணிசை பாடிச் சுந்தரமூர்த்தி நாயனார் வணங்கிக் கொண்டு இருந்தமையால் அதிலே மயங்கித் தாமதித்துவிட்டதாகத் தெரிவித்தார். இறைவன் தன்னையே மறந்து லயிக்கும் வண்ணம் பண்ணிசைத்த சுந்தரரைத் தரிசிக்க வேண்டும் என்று விரும்பி சிதம்பரம் செல்ல ஆயத்தம் செய்தார். சிதம்பரம் செல்லும் வழி யிலே உள்ள பல தலங்களையும் வணங்கித் தில்லையிலே கோபுரம், பேரம்பலம், சிற்றம்பலம் யாவும் வணங்கினார். இவர் சென்ற சமயம் சுந்தரர் திருவாரூரிலே தங்கியிருந்தார். தில்லையில் ஆனந்த நடனத்தைத் தரிசித்த சேரமான் பொன்வண்ணத்தந்தாதி என்னும் பிரபந்தம் பாடிப் பணிந்தார்.

ஆரூரிலே சுந்தரரைக் கண்டு, இருவரும் பல்வேறு திருத்தலங்களைத் தரிசித்தனர். ஆங்காங்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத் திருப்பதிகங்கள் பாடியருளியபோது சேரமானும் தோத்திரப் பாடல்கள் பாடிப் பணிந்தார். இவை பதினொராம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுள் திருக்கயிலாய ஞானவுலா திருக்கயிலையில் இறைவன் சந்நிதியில் அருளப்பெற்றது. அந்தணர் குலத்திலும் அரசர் குலத்திலும் அவதரித்த இவர்கள் ஒருங்கிருந்து உணவு கொண்டமையும் சுந்தரருடைய பாதங்களுக்கு சேரமான் அபிடேக ஆராதனை செய்தமையும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாம். இவர்கள் இருவரும் தலயாத்திரையில் மதுரைக்குச் சென்ற சமயம் அங்கு ஏற்கெனவே விருந்தாளியாக வந்திருந்த சோழமன்னரையும் சந்தித்தனர். இதனால் தமிழ்கூறும் நல்லுலகின் மூவேந்தரும் சுந்தரரும் ஒருங்கிணைந்து இறைதரிசனம் செய்யக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. அவ்வப்போது சேரமானைப் பிரிந்து திருவாரூரில் தம் இல்லத்துக்கோ புண்ணிய தலங்களுக்கோ சென்ற சுந்தரர் ஒருபோது திருவாரூருக்குப் போகப் புறப்பட்டபோது சேரமான் அளித்த பொருள்கள், செல்வங்கள் யாவற்றையும் இறைவன் பூதகணங்களை வழிப்பறிக் கள்வராக்கிக் கவர்ந்து கொள்ளச்செய்தார். பின் அவை மீளக் கொடுக்கப்பட்டன. அடுத்த முறை சேரநாட்டுக்கு வரும் வழியில், சுந்தரர் திருப்புக்கொளியூர் என்னும் தலத்தில் முதலை உண்ட பாலன் மீண்டு உயிர் பெற்றுவர அருள் செய்தார்.

இம்முறை சேரமானுடன் தங்கியிருந்த சுந்தரர், மணவாழ்க்கையிற் சலிப்பெய்தி தலைக்குத் தலை மாலை என்ற திருப்பதிகம் அருளி இறைவனை அடையத் தாம் கொண்டுள்ள ஆவலை வெளிப்படுத்தினார். இறைவன் வெள்ளானையைக் கொண்டு சென்று சுந்தரரை அழைத்து வருமாறு தேவர்களுக்கு ஆணையிட அவர்கள் அவ்வாறே சுந்தரரை அழைத்து வந்தனர். அப்போது சேரமான் திருவஞ்சைக் களத்துக்கு வெளியே சென்றிருந்தார். சுந்தரர் கயிலை செல்வதை அறிந்தவுடன் அருகில் நின்ற குதிரை ஒன்றில் ஏறி, ஸ்ரீ பஞ்சாட்சரத்தை அதன் செவியில் ஓதி வெள்ளையானையைத் தொடரும்படி வேண்டினார். குதிரையும் அவ்வாறே சென்று வெள்ளை யானையை வலம்வந்து அதனை முந்தி கயிலையில் எம்பிரான் எழுந்தருளியுள்ள கோயிலின் மணிவாசலில் காவலர்களாற் தடுக்கப்பட்டு நின்றது. பின் வந்த சுந்தரர் இறைவனை வேண்டியபடி சேரமானை வரவழைக்க, பெருமான் திருமுன்பு திருக்கயிலாய ஞான உலா பாடியருளி இறைவன் திருவருளால் கணநாதராய் அமர்ந்து இன்புற்றார்.





சைவ நீதி ஆன்மிக இதழ் உலகமெல்லாம் வேத சிவாகம திருமுறை நெறியைப் பரப்பி வெற்றியுடன் நற்பணி செய்ய ஆசிரியர் நா. சிவானந்தசோதி அவர்களுக்கும் இவ் இதழின் உழைப்பாளர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்!

பாராட்டுகள்!!


இந்து மத நூல்கள் ஐந்து வகைக் கடமைகளை - தர்மங்களை இல்வாழ்க்கையில் உள்ள ஒருவன் செய்ய வேண்டுமென்று சொல்கிறது.

1. **தேவ யக்ஞும்**- இறைவனுக்குச் செய்யும் பூசை
2. **ரிஷி யக்ஞும்**- சாத்திரங்களைக் கற்பித்தல், தர்ம நெறியைப் போதித்தல்
3. **பிதுர் யக்ஞும்**- முன்னோருக்குத் தர்ப்பணம் முதலான காரியங்களைச் செய்தல்
4. **நர யக்ஞும்**- சக மனிதனுக்குத் தொண்டு செய்தல்
5. **பூத யக்ஞும்**- பிற உயிர்களுக்கு உதவுதல்

# திருமுகங்கள் மூன்று (மீள் பிரசுரம்)

- வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்.

மடங்கல், மடல், இதழ், ஓலை, நிருபம். இவைகள் எல்லாம் கடிதம் என்று இன்று நம்மால் சுட்டப்படுவதன் முந்தைய பெயர்கள். இவை எல்லாவற்றையும் விட, 'திருமுகம்' என்ற அழகிய பைந்தமிழ்ப் பெயரே மிக மிகப் பொருத்தமானதும் பொருள் பொதிந்ததும் ஆகும். வெகு தொலைவில் உள்ள கணவனுக்கோ, மனைவிக்கோ, தந்தை தாய்க்கோ, நண்பர்களுக்கோ எழுதும் கடிதத்தில் அவர்கள் எழுத்தைப் பார்க்கமாட்டார்கள். எழுதியவரின் உருவத்தையே பார்ப்பார்கள். 'முகம்' எண்ணங்களின் கண்ணாடி.

'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்'

என்பது பொய்யாமொழி. இத்திருமுகம் பற்றிய சுவையான பாடல்கள் கலம்பகங்களிலே இடம் பிடித்துள்ளன. சுவைக்க ஒரு பாடல்..... திருவரங்கக் கலம்பகத்திலிருந்து. இயற்றியவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

மறவன் ஒருவனின் மகளைத் தன் மகனாகிய இளவரசனுக்குப் பெண் கேட்டு மன்னன் ஒருவன் திருமுகம் அனுப்புகிறான் தூதுவன் மூலமாக. திருமுகத்தைக் கண்ட மறவனுக்குக் கோபம் கொப்பளிக்கின்றது. காரணம், திருவரங்கப் பெருமானின் தொழுகுலத்தில் தோன்றிய தான் பிறந்த குடியைவிட இழிந்த குலத்தில் தோன்றிய மன்னன் தன் மகளுக்குப் பெண் கேட்டது என்ன துணிவுபற்றி! பாடல் இதோ,

கொற்றவன்தன் திருமுகத்தைக் கொணர்ந்த தூதா
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கேட்டாய்
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமான் தோழன்
அவதரித்த திருக்குலமென்(று) அறியாய் போலும்
மற்றதுதான் திருமுகமே ஆனா லந்த
வாய்செவிகண் மூக்கெங்கே! மன்னர் மன்னன்
பெற்றஇள வரசானால் ஆலின் கொம்பை
பிறந்தகுலத் துக்கேற்பப் பேசு வாயே!

கொப்பளிக்கும் கோபத்திலும் தமிழ் எப்படிக் கொட்டுகிறது பாருங்கள்....... முகத்தைக் கொண்டுவந்தாயே! மற்றைய முகமற்ற முண்டத்துக்கோ பெண் கேட்டாய்? சரி... இது முகம் என்றால் அதன் உறுப்புக்கள் எங்கே? நீ மணம் பேசியது இள... அரசுக்குத்தானே! அரசுக்கு ஏற்றது ஆலமரந்தான்...... என்று மன்னாதி மன்னனையும் மணக்கவ்வ வைக்கும் மறத்தமிழ் நெஞ்சைவிட்டு நீங்காது.

இத்திருமுகங்களை எண்ணும் வரிசையில் முழுமுதற் பெருமானாகிய சிவபெருமானால் அருளப்பெற்றவை மூன்று திருமுகங்கள் ஆகும். ஒன்று புலவன் நிலையிலே புலவர்களுக்கு எழுதியது. இரண்டாவது மன்னவன் நிலையிலே மன்னனுக்கு எழுதியது. மூன்றாவது அடியவன் நிலையிலே அடியவனுக்கு எழுதியது.
இனி அத்திருமுகங்களைக் காணலாம். தலைமைப் புலவன் நிலையில் தமிழ்ச் சங்கப் புலவர்களுக்கு எழுதிய திருமுகம். குறுந்தொகை இலக்கியத்தில் உள்ளது. 'தருமி' என்ற ஏழை அந்தணனுக்காக எழுதியது.

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் செறியெயிற்று

அரிவை கூந்தலின் நறியவும் உளவோ

நீயறியும் பூவே!

இரண்டாவது திருமுகம் மன்னன் நிலையிலிருந்து சேரமான் பெருமாள் என்னும் அரசனுக்கு எழுதியது. பதினொராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. பாணபத்திரன் என்னும் கலைஞனுக்காக எழுதியது. ஒரு கடிதத்தின் இலக்கண வரம்பை எடுத்தியம்பும் அமைப்பில் அமைந்து யார், யாரிடம், யாருக்காக என்ற பகுப்பைத் தெரிவிக்கின்றது. இனி பாடல்,

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்

பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்(கு)
ஒருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க

பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே

இனி, மூன்றாவது திருமுகம் அடியவன் நிலையிலிருந்து அடியவனுக்காக அடியவருக்கு எழுதியது. பெற்றான் சாம்பான்..... நான்காம் வருணத்தவன். நாள்தோறும் தில்லை நடராஜப்பெருமானின் திருவமுதிற்காக விறகு வெட்டிக்கொடுத்து, தூயபணி செய்பவன். அவனுக்கு முத்தி கொடுக்குமாறு உமாபதி சிவாசாரியாருக்கு எழுதிய கடிதமா...... இல்லை...... திருமுகமா....... இல்லை...... இல்லை. கைச்சீட்டு! அடியவர் என்றதும் ஆண்டவன் எத்துணை இரங்கி வருகிறான், இறங்கியும் வருகிறான்!

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு - படியின்மிசை
பெற்றான்சாம் பானுக்கு பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை

புலமை சான்ற புலவனாக, மன்னாதி மன்னனாக, அடியார்க்கு எளியவனாக, முப்பரிமாணங்களில், முப்பரம் எரிசெய்த முதல்வனை அவனது எழுத்துக்களினூடு காணும்பொழுது காட்சி தருவது 'திருமுகம்' தானே!

## சைவசித்தாந்தம் சொல்லும் இறைவன்

ஞானத்தின் மீது உள்ள ஈடுபாட்டைத் தத்துவம் எனலாம். உண்மையின் தன்மையைப் பற்றி அறியும் தேடல் சமயத்தின் ஒரு பகுதி. மனிதர்களாகிய நாம் ஒரு தத்துவப் பிராணி. முடிவான பொருளைப்பற்றி ஆராயாமல் இருக்க எம்மால் முடியாது. இவ்வாராச்சியின் பயனாகக் கடவுளைப்பற்றி உதித்த ஞானிகளின் மேலான கொள்கையைச் சித்தாந்தம் நமக்குப் பாடமாகத் தருகின்றது.
உயர்ந்த உண்மையாக, பூரண அறிவாகக் கடவுள் இருக்கின்றார். அவர்தான் சிவபெருமான். இத்தகைய பதியாகிய சிவனை இரண்டு நிலைகளில் சைவசித்தாந்தம் உணர்த்துகின்றது, ஆவை சொரூப இலட்சணம், தடத்த இலட்சணம் எனப்படும்.

**சொரூப இலட்சணம்- சிறப்பியல்பு**
ஒன்றிலும் கலப்பின்றித் தன் உண்மையுடன் விளங்கும் நிலை. இந்நிலையை சுத்தசிவம், பரமசிவம் எனச் சித்தாந்தசைவம் சொல்லும். பெயர், குணம், குறி முதலியன இல்லாததாக அருவம், அருவுருவம், உருவம் என்ற மூன்று நிலைகளைக் கடந்தும், மனம், வாக்கு, காயத்தால் அறியப்படாததாக சிவன் இருக்கும் நிலை.

**தடத்த இலட்சணம்- பொது இயல்பு**
கட்டற்றதும் கட்டப்படாததுமான சுத்தசிவம் சொரூப நிலையில் இருந்து பல படிகள் இறங்கி குணங்களும், இயல்புகளும் தாங்கி நிற்கும் நிலை இதுவாகும். ஆன்மாக்களின் மேல் வைத்துள்ள எல்லையற்ற கருணையினால் சுத்தசிவம் படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் ஆகிய ஐந்தொழில்களை நிகழ்த்துகின்ற நிலை தடத்த நிலையாகும்.

*ச.ஆ*

# உங்களுக்கு மன அமைதி வேண்டுமா?

*-ஸ்வாமி சிவானந்தா*

எத்தனை முறை பிரார்த்தனை செய்யப்பட்டது. எத்தனை தடவை மந்திரங்கள் ஜபிக்கப்பட்டன. எத்தனை முறை விளக்குகள் ஏற்றப்பட்டு ஆரத்தி காண்பிக்கப்பட்டது. எத்தனை முறை மணி அடிக்கப்பட்டு, மறை நூல்கள் வாசிக்கப்பட்டன போன்றவற்றால் மனிதரின் செயல்கள் தெய்வீக அளவுகோல்கள் மதிப்பிடுவதில்லை.

உங்கள் இதயத்தில் எழும் எண்ணங்களின் தரத்தைப் பொறுத்து, எத்தகைய வார்த்தைகளை நீங்கள் உங்கள் அண்டை அயலாரிடம் பயன்படுத்துகிறீர்களோ அவற்றைப் பொறுத்து, உங்கள் வாழ்வை நீங்கள் யார் யாருடன் கழிக்க வேண்டும் என்று இறைவன் விதித்திருக்கிறானோ அவர்களுடன் நீங்கள் ஈடுபடும் ஒவ்வொரு செயலையும் பொறுத்தே தெய்வீக அளவுகோல்கள் மனிதனை மதிப்பிடுகின்றன என்று நான் திட்டவட்டமாக உங்களுக்குக் கூறுகிறேன்.

நல்லாரோக்கியமும் பொருளாதாரப் பாதுகாப்பும் மன அமைதிக்கு மிகவும் இன்றியமையாதவை என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் இவை இரண்டும் இருப்பினும், பலரும் தொடர்ந்து மன அமைதியின்றி அல்லல்படுகின்றனர். நீங்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்களா? ஆமாம் என்று நீங்கள் பதில் சொன்னால் மேலும் இதைப் படியுங்கள். உங்களது தொல்லைகள் பெரும்பாலும் நீங்களாகவே உண்டாக்கிக்கொண்டது என்பதால், அவை தவிர்க்கப்படக் கூடியவையே. எப்படி என்று நாம் பார்ப்போம். நீங்கள் அடிக்கடி பிறர் விஷயங்களில் தலையிடுகிறீர்களா? அவர்கள் தவறாகவே இருக்கலாம். ஆனால் அதை முன்னிட்டு நீங்கள் அல்லல் உறுவானேன்? யாரையும், எதையும், குறை கூறாதீர்கள். பிறருக்குத் தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை கடவுள் உங்களுக்குக் கொடுக்கவில்லை. எல்லோரும் அவரவர் விருப்பப்படியே நடக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்குள்ளே இலங்கும் கடவுள் அவர்களை அப்படிச் செய்யத் தூண்டுகிறார். உங்கள் அமைதியைப் பாதுகாக்க நீங்கள் உங்கள் சொந்த வேலையில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும் என்பது ஒரு நல்ல விதியாகும்.

**வேலை - அதுவே ஒரு தியானம்** உங்கள் வேலையில் நீங்கள் கவனம் செலுத்துங்கள். மன அமைதிக்கு முக்கியத்துவம் தருவோர் எல்லாவற்றிற்கும் மேலாக கடைப்பிடிக்க வேண்டிய நியதி இது. இந்த உலகத்தில் எதுவுமே உங்கள் கவனத்தை வேண்டுவதில்லை. அனைத்தையும் கவனிக்க ஒரு ஆண்டவன் இருக்கிறார். உண்மையில், உங்களையும் கவனிப்பது அவர்தானே! இந்த உண்மையை மறக்கக்கூடாது.

**குறை கூறலாமா?** நான் திரும்பவும் கூறுகின்றேன். உங்கள் வேலைகள் நீங்கள் பாருங்கள். எவரையும், எதையும் குறை கூறாதீர்கள். குறை கூறுதல் என்பது திட்டுவதற்கு நிகர். எது நடந்தாலும் அது கடவுளின் இச்சையால் நடக்கிறது. கடவுளின் அனுக்கிரகம் இன்றி எதுவுமே நிகழ்வதில்லை. ஏதாவது நிகழ்ந்தது என்றால் அது உங்கள் பார்வையில் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ இருக்கலாம். அதற்கு கடவுளின் அனுமதி இருக்கிறது என்றுதான் பொருள். நீங்கள் அதைக் கண்டனம் செய்தால் கடவுளின் விருப்பத்தை, கடவுளின் பேரறிவை, கடவுளின் தீர்ப்பை நீங்கள் விமர்சிக்கின்றீர்கள் என்றுதானே அர்த்தம். அதைச் செய்யாதீர்கள். உங்களுக்கு அமைதி கிட்டும்.

**நம் விருப்பமா உலகை இயக்குகிறது?** கடவுள் பொருள்களை முழுமையாகப் பார்க்கிறார். மனிதன் பொருள்களை பகுதியாகப் பார்க்கிறான். மனிதன் கடந்த காலம் மற்றும் எதிர் காலத்திலிருந்து பிரிந்து, நிகழ்ச்சிகளை நிகழ்காலத்தில் மட்டுமே பார்க்கிறான். கடவுளுக்கோ முன் நடந்ததும், பின் நடக்க வேண்டுவதும் தெரியும். அதனால்தான் கடவுள் ஒற்றுமையைக் காண்கிறார். மனிதன் வேற்றுமையைக் காண்கிறான். கடவுள் பூரணமான நியாயத்தைக் காணும் அதே தருணத்தில் மனிதனோ அதைக் காண்பதில்லை. நீங்கள் உங்களை கடவுளின் ஸ்தானத்தில் வைத்துப் பாருங்கள். நீங்களே கடவுள் என உணருங்கள். பிரபஞ்சம் முழுவதும் உங்களது படைப்பே என்றும், அனைத்தும் உங்கள் விருப்பத்தாலேயே நிகழ்கின்றன என்றும் உணருங்கள். உடனேயே உங்களுள் அபரிமிதமான அமைதியும் ஆற்றலும் ஊற்றெடுப்பதை நீங்கள் உணர்வீர்கள்.

**பிறர் நம்மை திட்டும்போது....** பிறர் உங்களைக் காரணமின்றி திட்டுவதாகவும் காரணமின்றி துன்புறுத்துவதாகவும் நீங்கள் கூறுகின்றீர்கள். அது உண்மையாக இருந்தாலும் கூட அதற்காக அலட்டிக் கொள்ளாதீர்கள். நிலைமையைப் பொறுமையுடன் சமாளியுங்கள். இக்கட்டான நிலைமைகளைச் சமாளிப்பதில் அமைதி ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம் என்பதை நீங்கள் காண்பீர்கள். யாராவது உங்களைத் திட்டினால் கண்களை மூடிக் கொண்டு பொறுமையாக இருங்கள். பிறர் அவர்கள் விருப்பம் போல் நினைக்கட்டும். அவர்கள் விரும்புவதைச் சொல்லட்டும்.

**இந்த உலகம் முட்டாள்கள் நிறைந்தது. நீங்கள் அறிவுடையவராக விளங்குங்கள்.**
எல்லோர் முன்னிலையிலும் பணிவுடன் இருங்கள். எந்த நிலைமையிலும் அடக்கமாக இருங்கள். நான் உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் என்ற எண்ணத்தை விடுத்து அனைவரிடமும் அனைத்திடத்தும் கடவுளைக்காணக் கற்றுக் கொண்டால்தான் இது சாத்தியமாகும். கடவுள் அப்படி விரும்புகிறார். எனவே அது அப்படி இருக்கட்டும். பிறர் உங்களை நிந்திக்கையில் நீங்கள் மௌனமாக இருங்கள். கலக்கம் அடையாதீர்கள். பழிச்சொற்களை ஏற்றுக் கொண்டால் அடக்கத்திலும் தூய்மையிலும் நீங்கள் வளர்ச்சி அடைவீர்கள். அதுவே ஒரு தவம் ஆன்மிகத்தில் நீங்கள் உயர்வடைவீர்கள்.

*(தொடரும்)*

# ஆலய வழிபாடும் வேதாகம நெறியும் (மீள் பிரசுரம்)

*சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா வசந்தன் குருக்கள்*

ஆலய வழிபாடுகள் ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் ஆகம விதிமுறைகளுக்கு மாறாது பணியாற்றவேண்டும் என்பதில் சிவாசாரியர்கள், அறங்காவலர்கள், உபயகாரர்கள், அடியார்கள் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள். 'மேலைநாடுகளில் முறையாகவா கோயில் கட்டப்பட்டுள்ளது?' என்று ஒரு சிலர் கேள்வி கேட்பதுண்டு. அவர்கள் ஒன்றை நினைக்கவேண்டும். ஏதோ கிடைக்கும் இடத்திலாவது அதிகூடிய அளவுக்கு ஆகம விதியைப் பின்பற்ற முயற்சி எடுக்கிறோம் என்று மகிழவேண்டும். ஆகமம் சாராத வழிபாடுகளும் உள்ளன. அவை ஆலயங்களுக்கு வெளியே பல்வேறு நபர்களாற் செய்யப்படுகின்றன. ஆனால் அவை தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக நடக்கும் என்று கூற முடியாது.

சைவத் திருக்கோயில்கள் பாரம்பரிய பெருமை உடையவை. திருக்கோயில்களில் உள்ள திருமேனிகள் மந்திரங்களாலும் ஆகம செயல்களாலும் உருவேற்றப்பட்டவை. வேத வேள்விகள் இறைவனையும் தேவர்களையும் திருப்திப்படுத்தும் தேவகாரியங்கள். தினமும் நடைபெறும் நித்திய, நைமித்திய வழிபாடுகளால் தெய்வத் திருமேனிகள் சாந்நித்தியம் பெறுகின்றன. வேத மந்திரங்கள் இறை சாந்நித்தியத்தையும் ஆகம செயல்கள் பிரகாசத்தையும் மேம்படுத்துபவை. இவ்விரண்டையும் பேணிப் பாதுகாப்பது சைவ சமயச் சான்றோர்களுடைய கடமையாகும். இந்த விடயத்தில் மரபு மீறலை ஏற்படுத்தி சைவ மூலநூல்களை அவமதிக்கும் செயலுக்கு நாம் துணைபோகக்கூடாது. வேதங்களும் ஆகமங்களும் வடமொழியில் இருக்கின்றன என்பதற்காக நாம் வேத, ஆகமங்களைப் பழித்துக் கூறலாமா? அப்படியாயின் இறைவன் சொன்னதைப் பழிக்கும் குற்றத்துக்கு ஆளாகமாட்டோமா?

உண்மையான சைவத்தமிழர் எப்போதும் வேதாகம செயல்களை வரவேற்று வாழ்ந்து வந்துள்ளனர். தொல்காப்பியம் வேதத்தை அந்தணர் மறை என்று கூறுகிறது. இதேபோலத் திருக்குறளும் குறிப்பிடுகின்றது. சிலப்பதி காரத்தில், "மாமுது பார்ப்பான் மறைவழி காட்ட" கண்ணகியின் திருமணம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. தேவாரம் வேதசாரம் என்பதற்கு ஏற்ப திருமுறைகள் யாவும் வேதாகமங்களைப் போற்றி வந்துள்ளன என்பது அனைவரும் அறிந்ததே. தேவாரத்தைப் பாடிப் பூசை செய்யலாம் என்பவர்கள் ஏன் திருமுறைகள் போற்றும் வேதாகமங்களை வேண்டாம் என்கிறார்கள், வெறுக்கிறார்கள்? எம்முடைய தாய் மொழி தமிழ் என்றால் சைவத்தைப் பொறுத்த அளவில் எம்முடைய தகப்பன் மொழி வடமொழியாகும். தாய் மட்டும் போதும், தகப்பன் வேண்டாம் என்று சொல்வது போலத்தான் தமிழிலே பூஜை செய்தாற் போதும், விளங்காத வடமொழி வேண்டாம் என்று கூறும் குழுக்களின் கருத்தாகும்.

வேதவேள்வியை நிந்தனை செய்பவர்களைச் சம்பந்தர் வெறுக்கிறார்.


"வேத வேள்வியை நிந்தனை செய்துழல் ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே......"

தன்னைத் தமிழ் வல்லான் என்று கூறிய சம்பந்தர் வேத, ஆகம மரபை மறுக்கவில்லை. வேதாகமங்கள் வெறுத்த சமணரையும் தேரரையும் பதிகந்தோறும் பத்தாவது தேவாரத்தில் மாசு மெய்யர், மண்டைத் தேரர், குண்டர் என பல்வேறு நிலையிலே சாடுகின்றார். நாம் வேதாகமங்களைப் புறந்தள்ளி, திருமுறைகளைப் போற்றிப் பயனில்லை.

தமிழும் வடமொழியும் இரு கண்கள். ஒரு கண்ணைத் தோண்டி எடுக்க முயற்சி செய்யாதீர்கள். திருமூலருடைய, "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற இரு வரிகளை ஒருசில தமிழ் வழிபாட்டு விரும்பிகள் அடிக்கடி கூறுவர். ஆனால் அவர்கள் ஏன் திருமந்திரத்தில் உள்ள ஏனைய பாடல்களை பார்க்காமல் இருக்கிறார்கள்? "வேதத்தை விட்ட அறம் இல்லை" என்று கூறுவதுடன் வேதாகமத்தைப்பற்றி பல வரிகள் இருக்கின்றன என்று தெரிந்தும் தெரியாதவர்கள் போல நடிக்கிறார்கள். திருமூலர் வேதம், ஆகமம் பற்றி தனித் தலைப்புக் கொடுத்துள்ளார். தமிழும் வடமொழியும் அவனை உணர்த்தலும் உணரலுமாமே என்று கூறுகிறார்.

இந்தியாவில் கடவுள் நம்பிக்கையற்ற ஒரு சிலர் ஆரிய மொழி என்று வடமொழியையும் அதைப் போற்றும் அந்தணர்களையும் முதலிலே சொல் மழை கொண்டு தாக்கினார்கள். பின்பு கடவுள் இருந்தால் இருக்கட்டும், அவரைத் தமிழிற் பாருங்கள், வடமொழியும் ஐயரும் வேண்டாம் என்றார்கள். இந்த நம்பிக்கை அற்றவர்களின் கதைகளைக் கேட்டு நாம் எம் மரபுகளை அழிக்க வேண்டுமோ? திருமுறைகளைப் போற்றுபவர்கள் வடமொழி, வேதாகம நெறிகளை ஆலய வழிபாட்டு முறைகளிலே பின்பற்றியேயாகவேண்டும். இல்லையேல் அவர்கள் திருமுறைகளையும் மதிக்கவில்லை என்றே பொருள்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுகள்
# இந்து மதம் செப்டம்பர் 19 1893 இல் வாசிக்கப்பட்டது




**Born:** January 12, 1863, Kolkata
**Died:** July 4, 1902, Bvelur Math
**Full name:** Narendra Nath Datta
**Education:** University of Calcutta, Scottish Church College, Calcutta,Presidency College, Kolkata
**Siblings:** Bhupendranath Dutta

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலேயே தோன்றி, இன்றும் நிலைத்து நிற்கும் மதங்கள் மூன்று. அவை இந்து மதம், சொராஸ்டிரிய மதம், யூத மதம் ஆகும். அவை அனைத்தும் பல கடுமையான அதிர்ச்சிகளுக்கு உட்பட்டும், இன்றும் நிலைத்திருப்பதின் வாயிலாக தங்கள் உள் வலிமையை நிரூபிக்கின்றன.

யூத மதம் கிறிஸ்தவ மதத்தைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளத் தவறியது மட்டுமின்றி, அனைத்தையும் வெற்றி கொண்டதும் தன்னிலிருந்து தோன்றியதுமான கிறிஸ்தவ மதத்தால், பிறந்த இடத்திலிருந்தே விரட்டி அடிக்கப்பட்டுவிட்டது. இன்று தங்கள் பெருமைக்குரிய மதத்தை நினைவு படுத்த ஒரு சில பார்சிகள் மட்டுமே வாழ்ந்து வருகிறார்கள்.

இந்திய மண்ணில் ஒன்றன் பின் ஒன்றாக எத்தனையோ கிளைமதங்கள் உண்டாயின. வேத நெறியின் அடித்தளத்தையே அவை உலுக்கிவிடும் போலத் தோன்றியது. ஆனால், பயங்கரமான நில நடுக்கம் ஏற்பட்டால், எப்படிக் கடலானது சிறிது நேரம் பின்னோக்கிச் சென்று, பின்னர் ஆயிரம் மடங்கு சீற்றத்துடன் பெருகி வந்து அனைத்தையும் வளைத்துக் கொள்கிறதோ, அது போல, எல்லா கிளை மதங்களும் ஆரம்ப ஆரவாரம் ஓய்ந்ததும் மிகப்பெரியதான தாய்மதத்தால் கவர்ந்து இழுக்கப்பட்டு, அதனுள் இரண்டறக் கலந்து விட்டன.

அறிவியலின் இன்றைய கண்டு பிடிப்புகள் எந்த வேதநாதத்தின் எதிரொலிகள் போன்று உள்ளனவோ, அந்த வேதாந்த தத்துவத்தின் மிக உயர்ந்த ஆன்மீகக் கோட்பாடுகள் முதல் பல்வேறு புராணக் கதைகள் கொண்ட மிகச் சாதாரண உருவ வழிபாட்டுக் கருத்துகள், பௌத்தர்களின் சூன்யவாதம், சமணர்களின் நாத்திக வாதம், ஆகிய அனைத்திற்கும் இந்து சமயத்தில் இடம் உள்ளது. அப்படியானால் ஒன்றுக்கொன்று மிகவும் வேறுபட்டு நிற்கும் இவை அனைத்தும் ஒன்று சேரும் பொதுமையம் எங்கே இருக்கிறது, என்ற கேள்வி எழுகிறது. ஒன்று சேரவே முடியாதது போல் தோன்றுகின்ற இவை அனைத்தும் ஒருங்கிணைவதற்கான அடித்தளம் எங்கிருக்கிறது? இந்தக் கேள்விக்குத் தான் நான் விடை கூற முயலப்போகிறேன்.

தெய்வீக வெளிப்பாடான (Revelation) வேதங்களிலிருந்து இந்துக்கள் தங்கள் மதத்தைப் பெற்றுள்ளனர். வேதங்களுக்குத் துவக்கமும் முடிவும் இல்லை என்பது அவர்கள் கூற்று. ஒரு நூலுக்குத் துவக்கமோ முடிவோ இல்லாதிருக்குமா, அது அபத்தம் என்று உங்களுக்குத் தோன்றும். ஆனால் வேதங்கள் என்று குறிப்பிடப்படுவது நூல்கள் அன்று. வெவ்வேறு மக்களால், வெவ்வேறு காலங்களில் திரட்டி வைக்கப்பட்ட, ஆன்மிக விதிகளின் கருவூலமே வேதங்கள். புவியீர்ப்பு விதி, அது கண்டறியப்படும் முன்னரே இருந்தது, மனித இனம் முழுவதும் அதை மறந்து விட்டாலும் அது இருக்கும். அவ்வாறே ஆன்மிக உலகின் விதிகளும். ஓர் ஆன்மாவுக்கும் இன்னோர் ஆன்மாவுக்கும், தனிப்பட்ட ஆன்மாக்களுக்கும் அனைத்து ஆன்மாக்களின் தந்தைக்கும் இடையே உள்ள தார்மிக, ஆன்மிக, நீதி நெறி உறவுகள், அவை கண்டு பிடிக்கப் படுவதற்கு முன்னரும் இருந்தன. நாம் அவற்றை மறந்தாலும் இருக்கும்.
இந்த விதிகளைக் கண்டறிந்தவர்கள் ரிஷிகள் எனப்பட்டனர். பூரணத்துவம் அடைந்தவர்கள் என்று

அவர்களை நாங்கள் போற்றுகிறோம். அவர்களுள் மிகச் சிறந்த சிலர் பெண்கள் என்பதைக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விதிகள், அவை விதிகளாதலால், முடிவில்லாமல் இருக்கலாம். ஆனால் தொடக்கம் இருந்திருக்க வேண்டுமே என்று கூறலாம். படைப்பு, தொடக்கமும் முடிவும் இல்லாதது என்று வேதங்கள் போதிக்கின்றன. பிரபஞ்ச சக்தியின் மொத்த அளவு என்றும் ஒரே அளவில் தான் இருக்கிறதென்று விஞ்ஞானம் நிரூபித்திருப்பதாகச் சொல்லப்- படுகிறது. அப்படியானால், பிரபஞ்சத்தில் ஒன்றுமே இருந்திராத ஒரு காலம் இருந்திருக்குமானால் இப்போது காணப்படும் சக்தி அனைத்தும் எங்கிருந்தது? அது கடவுளிடம் ஒடுக்க நிலையில்இருந்தது என்று சிலர் கூறுகிறார்கள். அப்படியானால் கடவுள், சில காலம் ஒடுக்க நிலையிலும் சில காலம் இயக்க நிலையிலும் இருக்கிறார் என்றாகிறது. அதாவது, கடவுள் மாறக்கூடிய தன்மையர். மாறக்கூடிய பொருள் கூட்டுப் பொருளாகத் தானிருக்க வேண்டும். எல்லா கூட்டுப் பொருள்களும் அழிவு என்னும் மாறுதலை அடைந்தே தீரவேண்டும். எனவே, கடவுள் இறந்து விடுவார் என்றாகிறது. இது அபத்தம். ஆகையால் படைப்பு இல்லாதிருந்த காலம் ஒரு போதும் இருந்ததில்லை.

இதை ஓர் உவமையால் விளக்க நினைக்கிறேன். படைப்புத் தொழிலும், படைப்பவனும், தொடக்கமும் முடிவும் இல்லாது சமதூரத்தில் ஓடுகின்ற இரண்டு இணைகோடுகள். கடவுள் எப்போதும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் பரம்பொருள். அவரது சக்தியால் ஒழுங்கற்ற நிலையிலிருந்து (Chaos) பல ஒழுங்கு முறைகள் (Systems) ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றுகின்றன, சிறிது காலம் செயல்படுகின்றன, பின்னர் அழிந்து விடுகின்றன. இதையே அந்தணச் சிறுவன் தினமும் ஓதுகிறான்: 'பழைய கல்பங்களில் இருந்த சூரியர்களையும் சந்திரர்களையும் போன்றே சூரியனையும் சந்திரனையும் கடவுள் படைத்தார்.' இது தற்கால அறிவியலுக்குப் பொருந்தியதாக உள்ளது. இங்கு நான் நிற்கிறேன். கண்களை மூடிக்கொண்டு, 'நான், நான், நான்' என்று என்னைப் பற்றி நினைத்தால் என்னுள் என்ன தோன்றுகிறது? உடலைப் பற்றிய எண்ணம்தான். அப்படியானால் சடப் பொருள்களின் மொத்த உருவம் தானா நான்? 'இல்லை' என்கின்றன வேதங்கள். நான் உடலில் உறைகின்ற ஆன்மா. நான் அழிய மாட்டேன். நான் இந்த உடலில் இருக்கிறேன். இது விழ்ந்து விடும். ஆனால் நான் வாழ்ந்து கொண்டே இருப்பேன். நான் முன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருந்தேன். ஆன்மா படைக்கப்பட்டதன்று. படைக்கப்பட்டதாயின் அது பல பொருள்களின் சேர்க்கையாகும். அப்படியானால் வருங்காலத்தில் அது கண்டிப்பாக அழிந்து போக வேண்டும். எனவே, ஆன்மா படைக்கப் பட்டதானால் அது இறக்க வேண்டும்.

சிலர் பிறக்கும்போதே இன்பத்தில் பிறக்கிறார்கள். உடல் வளத்தோடும் வனப்போடும் மனவலிமையோடும், தேவைகள் அனைத்தும் நிறைவேறப் பெற்று வாழ்கிறார்கள். சிலர் துயரத்திலேயே பிறக்கிறார்கள். சிலர் முடமாகவும் நொண்டியாகவும் இருக்கிறார்கள். சிலர் முட்டாள்களாகவே வாழ்ந்து, வாழ்க்கை முழுவதையும் ஏதோ இழுபறி நிலையிலேயே கடத்துகிறார்கள்.

அவர்கள் அனைவரும் படைக்கப் பட்டவர்கள் என்றால், நேர்மையும் கருணையும் உள்ள கடவுள், ஒருவரை இன்பத்தில் திளைப்பவராகவும் இன்னொருவரைத் துன்பத்தில் உழல்பவராகவும் ஏன் படைக்க வேண்டும்? அவர் ஏன் அத்தனை வேறுபாடு காட்ட வேண்டும்? இந்தப் பிறவியில் துன்பப்படுபவர்கள் அடுத்த பிறவியில் இன்பம் அடைவார்கள் என்று கூறுவதும் பொருந்தாது. நேர்மையும் கருணையும் கொண்ட கடவுளின் ஆட்சியில் ஏன் ஒருவர் துயருற வேண்டும்?

ஆகவே, படைப்பாளராகிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று கொள்வது இந்த முரண்பாட்டைத் தெளிவு படுத்தவில்லை. மாறாக, எல்லா வல்லமையும் வாய்ந்த ஒருவரின் கொடுங்கோன்மையையே காட்டுகிறது. அப்படியானால், ஒருவன் மகிழ்வதற்கோ துயரத்தில் உழல்வதற்கோ உரிய காரணங்கள், அவன் பிறப்பதற்கு முன்பே இருந்திருக்க வேண்டும். அவையே அவனது முற்பிறப்பின் வினைகள். ஒருவனுடைய உடல், உள்ளம் ஆகியவற்றின் இயல்புகள் பரம்பரையாக வருவது என்று காரணம் காட்டப்படுகிறது அல்லவா?

வாழ்க்கையில் இரண்டு இணை கோடுகள் உள்ளன - ஒன்று மனத்தைப் பற்றியது. இன்னொன்று சடப்பொருளைப் பற்றியது. சடப் பொருளும் அதன் மாற்றங்களும் மட்டுமே நமது இப்போதைய

நிலையை விளக்கி விடும் என்றால் ஆன்மா என்ற ஒன்று இருக்கிறது என்று கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் சடத்திலிருந்து எண்ணம் தோன்றியது என்று நிரூபிக்க முடியாது. தத்துவப்படி, ஒரே ஒரு பொருள்தான் இருக்க முடியுமானால் ஆன்மா ஒன்றே ஒன்றுதான் இருக்க வேண்டும் என்பது பகுத்தறிவுக்குப் பொருந்தியதே. ஆனால் இவை எதுவும் இப்போது நமக்கு அவசியமில்லை.

பரம்பரையின் மூலம் உடல்கள் சில இயல்புகளைப் பெறுகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனால் குறிப்பிட்ட மனம் குறிப்பிட்ட விதமாகச் செயல்படுவதற்கு ஆதாரமாக இருக்கின்ற ஒரு தூல உருவத்தையே இந்த இயல்புகள் குறிக்கின்றன. இனி, ஆன்மாவுக்கும் கடந்தகால விளைவுகளின் காரணமாகச் சில குறிப்பிட்ட இயல்புகள் ஏற்படுகின்றன. குறிப்பிட்ட இயல்புகளுடன் கூடிய ஆன்மா, குண ஒற்றுமை விதிகளுக்கு (Laws of Affinity) இணங்க எந்த உடலில் பிறந்தால் அந்த இயல்புகளை வெளிப்படுத்த முடியுமோ, அந்த உடலில் பிறக்கிறது. இது அறிவியலுக்கு ஏற்புடையது. ஏனெனில், அறிவியல் எதையும் பழக்கத்தைக் கொண்டே விளக்க விரும்புகிறது. பழக்கமோ எதையும் திரும்பத் திரும்பச் செய்வதால் தான் உண்டாகிறது. ஆகவே புதிதாகப் பிறந்த ஓர் ஆன்மாவின் இயல்புகளை விளக்குவதற்கு, அது அந்தச் செயலைத் திரும்பத் திரும்பச் செய்திருக்க வேண்டும் என்று ஆகிறது. அந்த இயல்புகள் இந்தப் பிறவியில் பெறப்பட்டவை அல்லன. ஆதலால் அவை முந்தைய பிறப்புகளிலிருந்து வந்திருக்க வேண்டும். *(தொடரும்)*

## Swami Vivekananda's Chicago Addresses -3

# PAPER ON HINDUISM

### *Read at the Parliament on 19th September 1893*

Three religions now stand in the world which have come down to usfrom time prehistoric - Hinduism, Zoroastrianism, and Judaism. They have all received tremendous shocks, and all of them prove by their survival their internal strength. But while Judaism failed to absorb Christianity and was driven out of its place of birth by its all-conquering daughter, and a handful of Parsees is all that remains to tell the tale of their grand religion, sect after sect arose in India and seemed to shake the religion of the Vedas to itsvery foundations, but like the waters of the sea-shore in a tremendous earthquake it receded only for a while, only to return in an all-absorbing Hood, a thousand times more vigorous, and when the tumult of the rush was over, these sects were all sucked in, absorbed and assimilated into the immense body of the mother faith.

From the high spiritual flights of the Vedanta philosophy, of which the latest discoveries of science seem like echoes, to the low ideas of idolatry with its multifarious mythology, the agnosticism of the Buddhists and the atheism of the Jains, each and all have a place in the Hindu's religion.

Where then, the question arises, where is the common centre to which all these widely diverging radii converge? Where is the common basis upon which all these seemingly hopeless contradictions rest? And this is the question I shall attempt to answer. The Hindus have received their religion through revelation, the Vedas. They hold that the Vedas are without beginning and without end. It may sound ludicrous to this audience, how a book can be without beginning or end. But by the Vedas no books are meant. They mean the accumulated treasury of spiritual laws discovered by different persons in different times. Just as the law of gravitation existed before its discovery, and would exist if all humanity forgot it, so is it with the laws that govern the spiritual relations between soul and soul and between individual spirits and the Father of all spirits were there before their discovery, and would remain even if we forgot them.

The discoverers of these laws are called Rishis, and we honour them as perfected beings. I am glad to tell this audience that some of the very greatest of them were women.

Here it may be said that these laws as laws may be without end, but they must have had a beginning. The Vedas teach us that creation is without beginning or end. Science is said to have proved that the sum total of cosmic energy is always the same. Then, if there was a time when nothing existed, where was all this manifested energy? Some say it was in a potential form in God. In that case God is sometimes potential and sometimes kinetic, which would make Him mutable? Everything mutable is a compound and everything compound must undergo that change which is called destruction. So God would die, which is absurd-Therefore, there never was a time when there was no creation.

If I may be allowed to use a simile, creation and creator are two lines, without beginning and without end, zoning parallel to each other. God is the ever-active providence, by whose power systems after systems are being evolved out of chaos, made to run for a time, and again destroyed. This is what the Brahmin boy repeats every day:

'The sun and the moon, the Lord created like the suns and the moons of previous cycles.'

And this agrees with modern science. Here I Stand and if I shut my eyes, and try to conceive my existence, 'I,' 'I,' 'I', what is the idea before me? The idea of a body. Am I, then, nothing but a combination of material substances? The Vedas declare, 'No' I am a spirit living in a body: I am not the body. The body will die, but I shall not die. Here I am in this body; it will fall, soul shall go on living. I had also a past. The soul was not created, for creation means a combination, which means a certain future dissolution. If then the soul was created, it must die. Some are born happy, enjoy perfect health with beautiful body, mental vigour, and all wants supplied. Others are born miserable; some are without hands or feet; others again are idiots, and only drag on a wretched existence. Why, if they are all created, why does a just and merciful God create one happy and another unhappy, why is He so partial? Nor would it mend matters in the least to hold that those who are miserable in this life will be happy in a next one. Why should a man be miserable even here in the reign of a just and merciful God?

In the second place, the idea of a creator God does not explain the anomaly, but simply expresses the cruel Rat of an all-powerful being. There must have been causes, then, before his birth, to make a man miserable or happy and those were his past actions.

Are not all the tendencies of the mind and the body accounted for by inherited aptitude? Here are two parallel lines of existence - one of the minds, the other of matter. If matter and its transformations answer for all that we have, there is no necessity for supposing the existence of a soul. But it cannot be proved that thought has been evolved out of matter; and if a philosophical monism is inevitable, spiritual monism is certainly logical and no less desirable than a materialistic monism; but neither of these is necessary here.

We cannot deny that bodies acquire certain tendencies from heredity, but those tendencies only mean the physical configuration through which a peculiar mind alone can act in a peculiar way. There are other tendencies peculiar to a soul caused by his past actions. And a soul with a certain tendency would, by the laws of affinity, take birth in a body which is the fittest instrument for the display of that tendency. This is in accord with science, for science wants to explain everything by habit, and habit is got through repetitions. So repetitions are necessary to explain the natural habits of a new born soul. And since they were not obtained in this present life, they must have come down from past lives.

# குறுமுறுவல் - குமிண்சிரிப்பு

*- ஆழ்கடலோன் முருகவே பரமநாதன்*



சிரிக்கத் தெரிந்தவன். வாழப்பிறந்தவன். சிரிப்பிலே எத்தனை எத்தனை அர்த்தம். எல்லாம் ஒருவகைக் குறியீடே. தமிழிலே அது எத்தனை எத்தனை விதமான வர்ணிககப்படுகிறது. வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகுமாம். நையாண்டியில் இருந்து நாசூக்காகப் பேசுவது வரை அதுவொரு வெளிப்பாடே. வெள்ளரிப்பழம் வெடிப்பதைச் சிரிப்புக்கு உவமானமாய்க் கூறுவர் சிரித்து வாழவேணும். சிரிக்க வாழக்கூடாது. தெய்வம் சிரித்தது. உலகம் பொடிப் பொடியானது. புன்சிரிப்பு, குமிண்சிரிப்பு, முறுவலிப்பு, நகைப்பு, என்றெல்லாம் சிரிப்பு வகைப்படுத்தப்படுகிறது. '*பொயிலை விரிச்சாப் போய்ச்சு, பொம்பளை சிரிச்சாப் போச்சு*' என்பது பழமொழி. மகிழ்ச்சியின், சந்தோசத்தின் அடையாளம் சிரிப்பு. மனிதனோடு பிறந்தது சிரிப்பு. முல்லைச் சிரிப்பு புலவர் நாவில் இடம்பெற்றுக் கவிதையானது. '*முறிமேனி முத்தம் முறுவல்*' என்பது வள்ளுவர் வாக்கு. மலர் (மொட்டு) வெடித்து பூ மலர்வது போன்றதே சிரிப்பு. சிரிப்பு அரும்பி மலராகும். சிரிப்பு ஓர் அழகின் வெளிப்பாடு. சிரிப்பும் ஒருவகை மொழி. நகைச்சுவை நிகழ்ச்சி இன்றேல் நாடகமும், வெள்ளித்திரையும் கலகலப்பாய் அமையாது. சிரிப்பு ஒரு பாவம். முகபாவமே மாறும் சிரிப்பால். விகடத் துணுக்குகள் சிரிக்க வைக்கும் மனிதரை. மெய்ப்பாடுகளுள், நவரசங்களிற் சிரிப்புக்கு முன்னுரிமை, எல்லா மொழியாளர்க்கும் சிரிப்பு மகிழ்வின் சின்னம். நினைத்து நினைத்து குடல் குலுங்கச் சிரிப்பதும் சிரிப்பின் ஒரு மொழி. நகையாடும் கட்டங்கள் பல திருவாசகத்திலே பேசப்படுகிறன. பக்தியின்பாலாகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர் கூடி மகிழும்போது சிரிப்புப் பொழிகிறது. முகபாவம் மாறுகிறது. அன்பு கனிந்த பக்தகோடிகளின் உளப்பாங்கை செம் மொழியிலே செப்புகிறார் மாணிக்கனார்.

**கூடிக்கூடி உன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா**
**வாடி வாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனோ**
**ஊடி யூடி உடையாயொடு கலந்துள் ளுருகி பெருகி நெக்கு**
**ஆடி ஆடி ஆனந்தம் அதுவே யாக அருள் கலந்தே** *பிரார்த்தனைப் பத்து 11*

குனிப்பார். கூத்திடுவார் களிப்பு – ஆனந்தக் களிப்பு(மகிழ்ச்சி) பொருள்:- உன்னுடைய தொண்டர்கள், தம்முள் இடைவிடாது, சேர்ந்து சேர்ந்து, கூத்தாடி நகைத்து, இறுமாப்புக் கொள்வாராய் இருப்பவும், ஓயாது வாட்டமடைந்து உன்னை அடையும் வழியற்றுப்போன யான், உலர்ந்து போகின்ற மரம் போற் பயனற்று நிற்பேனோ? என்னை அடிமை கொண்டவனாகிய உன்னோடு சேர்ந்து சேர்ந்து, பிணங்கிப் பிணங்கி, உள்ளமுருகி, அன்பு பெருகி, மனம் நெகிழ்ந்து, இடைவிடாது, ஆனந்தக் கூத்தாடி, இன்பமயமே ஆகும்படி நீ அருள் செய்வாயாக.

**சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை**
**விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன திருநாமம்**
**தரிப்பார் பொன்னம்பலத்தாடும் தலைவா என்பார் அவர் முன்னே**
**நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயோ** (கோயில் திருப்பதிகம் - 9)

பொருள்: அண்ணலே, நினது மெய்யன்பர்கள், உன் ஆனந்தத்தை அனுபவித்துப் புறத்தே சிரிப்பார்கள்: அகத்தே மகிழ்வார்கள்; நிட்டை கூடுவார்கள்; கூடிக்கூடி உன் திருப்புகழை விரித்துப் பேசுவார்கள். அதனை விரும்பிக் கேட்பார்கள்; வியந்து கொண்டாடுவார்கள். தனித்தனியே இருந்து நின்தன் திருப்பெயரை நிைப்பார்கள். 'பொற்சபைக் கூத்தியற்றுகின்ற

தலைவனே' யென்று அழைப்பார்கள். அத்தகையோர் முன்பாக (உன் பேரானந்தத்தை முற்றும் அனுபவிக்கப் பெறாது) நாய் போன்ற நான் இகழ்ச்சிக்கு உரியவனாய்ச் சும்மா இருப்பேனோ? இனியாவது உன் ஆனந்தத்தை முற்றிலும் கொடுத்து அருள்வாயாக.

(தேனிப்பார் - தேன்போல அனுபவிப்பார், நரிப்பு - இகழ்ச்சிக்குறிப்பு;

தரிப்பு – நினைவு, ஞாபகம் உரை கா. சுப்பிரமணியபிள்ளை.

இவ்விரு திருவாசகங்களிலும் இறைநாட்டம் மிக்க பக்திமான்களது ஆனந்தப் பரவசம் எடுத்தாளப்பட்டிருக்கிறது. இப்படிப் பல திருவாக்குகளிலே கூறும் புளங்காகிதம் சொல்லும் தரமன்று. அவ்வளவு தெளிவாய்ப் படம்பிடித்துக் காட்டப்பட்டிருப்பதைப் படிப்போர் அனுபவிப்பர்.

திருச்சதகத்தில் அமைந்த முதற் பாடலான “மெய்தானரும்பி” என்ற பாடல் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது. இப்பாவம் திருவாசகத்தின் தனி உத்தி எனலாம். இன்னோர் திருவாசகம் அங்கதச் சுவையிலே அமைந்துள்ளது. இறைவனையே புதிய கண்ணோட்டத்தில் பார்க்கும் நுணுக்கம் அதிலே வருகிறது.

**தாரகை போலும் தலைத்தலை மாலைத் தடிவரப் பூண்**
**வீரஎன் தன்னை விடுதிகண் பாய் விடிலெண்ணை மிக்கார்**
**ஆரடி யானென்னின் உத்தரகோசமங்கைக் கரசின்**
**சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே** நீத்தல் விண்ணப்பம் - 48

கருத்து: விண்மீனாகிய நட்சத்திரம் போலும் வெண்தலைமாலையையும், நெருப்பையும், பாம்பையும் தலையிற் சூடிய வீரனே! என்னைக் கை விட்டுவிடாதே. என்னை(நீ) கை நெகிழ விட்டால், பெரியார்கள் நீ யாருடைய அடியார் என என்னை விசாரணை செய்தால், உத்தர கோசமங்கையில் அமர்ந்து அருள்பாலிக்கும் எம்பிரானின் அடியார்க்கு அடியான் எனப் பதிலிறுத்து, நின்னை அவர்கள் சிரிக்கும்படி செய்வேன். இப்பாடலிலே ஒரு வியப்பான போக்கைச் சுவாமிகள் அமைத்துப் பாடியுள்ளார். மெய்யடியார்களை உரைத்துப் பார்த்து அவர்கள் தரத்திலே மாற்றுக் குறைந்தவர்களாக இருப்பினும் அப்படியான அடிமைகளை அடியார்க்கு எளியவனான சிற்றம்பலவன் - பக்தர்களைப் பொருட்படுத்தாவிடின் அது நகைப்புக்கு இடமானதென்ற ஒரு கோட்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் என்பதை “சிரிப்பிப்பன்” என்ற பாவனை படம் போட்டுக்காட்டுகிறது. இதைச் சிரிப்பிப்பன் என்ற தொடர் வெளிப் படுத்துகிறது. செட்டியார் கணக்குச் செத்த மண் என்பர். மணிமொழியாரின் சாதுரியம் படிப்போரின் உள்ளத்தையே கிள்ளிக் கிளுகிளுக்கச் செய்கிறது. இது இறைவனுக்கு விடும் ஒரு சவால் என்று கூறினும் மிகையாகாது. நகையின், நகைப்பின் சுவை இப்படியெல்லாம் பேசப்படுகிறது. பன்னிருதிருமுறைத் தொகுப்பில் இருந்து திருவாசகத்தை எடுத்துவிட்டால் எப்படியிருக்கும். ஒருமுறை இப்படியும் சிந்திப்போமே! இந்தச் சிரிப்பின் இன்னொரு நிலைப்பாட்டை அப்பர் வாக்கிலே நாம் காணுகிறோம். பாவேந்தர். நாவேந்தர், தாண்டக வேந்தர் ஆடலரசனின் கூத்திலே சொக்கிப்போன நிலையிலே, அவரையறியாமலே எழுந்த பாடல்களிலே இச்சிரிப்பு பேசப்படுகிறது.

**குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்**
**இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே** கோயில் பதிகம் 4

சைவம் அறுத்தி உறுத்திப் பிறவியை வேண்டாமெனப் பேசுகிறது. ஆனால் அப்பர் பெருமானோ நடராஜப்பெருமானின் அந்தத் திவ்விய திருக்கோலத்தைக் காண மனிதப் பிறவியால்தான்

முடியுமென அறைகூவுகிறார். கொவ்வைப்பழம் போன்ற சிகப்புநிறச் சொண்டும் தெரியாமல் சிரிக்கின்ற சிரிப்பும் (குமிண் சிரிப்பு) கொள்ளை இன்பம் தருவன. கொடுப்புக்குட் சிரிப்பது இதுதானோ என எம்மை ஆதங்கப்படுத்தும் பாவம் தனி அலாதியானது. ஒருபடிமேலே நாவுக்கரசர் அடுத்து வரும் பாடலிலே முறுவலிப்பை அனுபவித்துப் பாடுகிறார்.



**முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின் நோக்கும் முறுவலிப்பும்**
**துடிகொண்ட கையும் துதைந்த வெண்ணீறும் சுரிகுழலாள்**
**படிகொண்ட பாகமும் பாய்புலித்தோலும் என் பாவி நெஞ்சில்**
**குடிகொண்டவா தில்லை அம்பலக்கூத்தன் குரைகழலே** மேலது 7

சுவாமிகள் தன்னைப் பாவியென்று நைச்சியப் பாவத்தோடு பேசுகிறார். அந்தப் பாவியின் நெஞ்சிலும் தில்லைக்கூத்தன் குடிகொண்டிருக்கிறானே. எப்படியான பாக்கியசாலி சுவாமிகள். இந்த நடராஜனின் கோலத்தைக் காணக் கண் ஆயிரம் வேண்டும். ஆயிரம், பல்லாயிரம் முறை பிறக்கலாம். ஆனபடியாற்றான் பதிகத்தின் முத்திரைப் பாடலிலே

*" ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை யாட்கொண்டதே"* யெனத் தன் சுய அனுபூதி நிலையை வெளிப்படுத்துகிறார். நாமும் அக்காட்சியைக் கண்டு ஆனந்திப்போமாக.

இந்தப் பாவனையிலே வில்லிபுத்தூரர் (பாரதத்திலே) கண்ணபிரானைக் காட்டுகின்றார்.

**சேய பங்கயச் சிறுவிரல் அங்கையில் திரட்டிய நறு வெண்ணெய்**
**ஆயர் மங்கையர் கடகட அமுது செய்து ஆடிய திருக்கூத்தும்**
**நேயமும் குறு முறுவலும் புரிந்து பார்த்து அருளிய நெடுங்கண்ணும்**
**மாய வன்திரு வடிவமும் இகும் என் மனத்தை விட்டு அகலாவே**

பாரதம்- ஆரண்யபருவம் - 8 நச்சும் பொய்கைச் சுருக்கம் கடவுள் வாழ்த்து (655)

பொருள்:- இடைக்குல மகளிர் தயிரைக் கடைந்ததினால், திரளத் தோன்றிய வெண்ணெயை, செந்தாமரை இதழைப் போன்ற. சிறு விரல்களையுடைய அழகிய கைகளில், அம் மகளிர் வைக்குந்தோறும் உண்டு, மகிழ்ச்சி தோன்ற ஆடிய திருக்கூத்தும், அன்பையும், புன்முறுவலையும் வெளியே காட்டி, அம்மகளிருக்கு அருளிய நெடிய கண்களும், அம் மாயவனின் திருமேனி அழகும் என் மனத்தைவிட்டு, எப்பொழுதும் நீங்கமாட்டா. மாயவனுடைய திருக்கூத்தும், கண்களும், வடிவமும், அழகும் என் மனதைவிட்டு அகலாதென்பது இப்பாட்டின் கருத்தாம். அழியா அழகையும், அருளையும் ஆரப்பருகி ஆனந்தம் கொள்ள இம்மனிதப் பிறவியே சாலப் பொருத்மென்பதை உணர்வோமாக.

இப்படியொரு காட்சி இராமாயணத்திலும் வருகிறது. இராமபிரான் மிதிலையிலே வீதிவழியே வருகிறார். உப்பரிகையிலே நின்ற சீதாபிராட்டி அவரின் இலாவண்யத்திலே மூழ்கி *"முந்தி என் உயிரை அம்முறுவல் உண்டதே"* எனக் கூறுகின்றார். இராமனது முறுவல் - கண்ணனது குறுமுறுவல் - தில்லைக்கூத்தனது குமிண் சிரிப்பு எம் உள்ளத்தோடும் உயிரோடும் இரண்டறக் கலந்த அருளியற் காட்சியே!.

**எனவே *வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போம்***
**என்ற உண்மையை உணர்ந்து சிரித்து வாழ்வோமாக.**

# மாலை மாற்றுத் திருப்பதிகம்

**யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா**
**காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா.**


திருஞானசம்பந்தர்

என்ன பார்பதற்கு மிகவும் வேடிக்கையான ஒரு திரைப்படப் பாடல் போலத் தோன்றுகிறதா ! நீங்கள் எப்படி முயற்சி செய்தாலும் பொருள் புரிந்து கொல்லுதல் இயலாத காரியம். ஏன் என்றால் இதை கூறியது திரைப்பட கவிஞர்கள் இல்லை .. இதை நமக்கு, நமக்காக அளித்து அருளியது உமையின் உன்னத அன்பினை ஈன்ற நம் திருஞானசம்பந்தர் ஆவார். ஆங்கிலத்தில் பளின்றோம் [Palindrome] என்று ஒன்றை கூறுவார்கள். வலமிருந்து இடமாக படித்தாலும் அல்லது இடமிருந்து வலமாக படித்தாலும் ஒரே அர்த்தம் தரும் வார்தைகள் அவை. உதாரணமாக குடகு, இச் சொல்லை முதலில் இருந்து படித்தாலும் இறுதியிலிருந்து படித்தாலும் பொருளோடு அமைந்து விளங்குவதைக் காணலாம்.

இது போன்ற வார்த்தைகள் தமிழ் மொழில் காண்பது மிகமிக அரிது. ஆனால் நமது சம்பந்தரோ சர்வ சாதாரணமாய் ஒரு பெரிய பதிகத்தை நமக்கு "மாலைமாற்று" என்று ஓர் அற்புத திருபதிகத்தை அருளியுள்ளார் . "மாலைமாற்று" என்பது ஓர் அற்புதமான யாப்பு வடிவம் ஆகும். இது ஒரு சொல் விளையாட்டு! முதலிலிருந்து இறுதிவரை அமைந்த ஒரு பாடல் அடியை, இறுதியிலிருந்து திருப்பி அப்படியே எவ்விதமாற்றமும் இல்லாமல் படித்தால் அமையும் பாடலே **மாலைமாற்று** ஆகும். இச்சொல்லை முதலில் இருந்து படித்தாலும் இறுதியிலிருந்து படித்தாலும் பொருளோடு அமைந்து விளங்குவதைக் காணலாம். இது ஒருசொல்லுள் அமைவது. நம் சம்பந்த பிள்ளையார் ஒருபாடல் முழுவதையும் இப்படி அமைத்துப் பாடியுள்ளார். ஒரு பாடலா? ஒரு பதிகமே, பதினோரு பாடல்களைப் பாடியுள்ளார். அம்மாடி! இது யாரால் முடியும்? அந்த ஞானப்பிள்ளையால்தான் முடியும்.

இப்படிப்பட்ட யாப்பு வடிவத்தினைத் தமிழ்மொழியில் முதன்முதலில் கண்டு பிடித்துக் கையாண்டவர் திருஞானசம்பந்தப்பெருமான் ஆவார். தமிழ் யாப்பில் அற்புதமான புரட்சிகள் செய்தவர் அந்த ஞானப்பிள்ளையார்.

இதோ அந்த அற்புதத் திருப்பதிகத்தன் முதலாம் பாடல்

**<u>பாடல்:1 (யாமாமா)</u>**

**யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா**
**காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா**

இப்பாடலின் சொற்பிரிப்பு
யாம் ஆமா நீ ஆம் ஆம் மாயாழீ காமா காண் நாகா
காணா காமா காழீயா மாமாயா நீ மா மாயா

**இதன்பொருள்** யாம்- ஆன்மாக்கள் ஆகிய யாமே கடவுள் என்று கூறினால்,ஆமா- அது சரியாகுமா? நீ- நீ தான் கடவுள் என்றால் அது, ஆம்ஆம்- அது சரியாகும் ஆம், மாயாழீ- பேரியாழை வாசிப்பவனே, (மாயாழ் என்பது பேரியாழ் ஆகும்), காமா- யாவரும் விரும்பும் கட்டழகா, காண்- யாவரும் காணும்படியாக, நாகா- நாகங்களையே (பாம்புகளை) அணிகலனாகப் பூண்டவனே, நாகா, காணா-எவரும் காணாதபடி, காமா- காமனைச் செய்தவனே (அதாவது எரித்து அழித்தவனே,காழீயா- சீகாழிப்பதியில் எழுந்தருளியுள்ளவனே, மாமாயா = பெரிய மாயைகளைச் செய்தலில் வல்லவனே! நீ- நீ, மா-கருமையாக உள்ள (அறியாமையைச் செய்கின்ற) மாயா- மாயை முதலிய மலங்களிலிருந்து எம்மை விடுவிப்பாயாக.

நன்றி - செந்தில்குமார்

மாணவர்களுக்கு

# சுவாமி விவேகானந்தர் - ஓர் அறிமுகம்


## சிவன் கொடுத்த வரம்



இந்தியாவின் கல்கத்தா நகரத்தில் சிமுலியா என்ற ஊரில் விசுவநாத தத்தர் என்ற வழக்கறிஞருக்கும் அவர் மனைவி புவனேஸ்வரிக்கும் மகனாகப் பிறந்தார் சுவாமி விவேகானந்தர். காசி வீரேசுர சிவனை வழிபட்டு சிவனருளால் 12.01.1863ஆம் நாள் பிறந்த அழகிய குழந்தைக்கு வீரேசுவரன் என்று பெயரிட்டார்கள். செல்லமாக 'பிலே' என்று அழைத்தார்கள்.


## குறும்புக்காரன்






சிறு வயதில் பிலே சகோதரிகளுடன் வம்பு செய்வான். அவனுடைய குறும்புத்தனம் சில வேளைகளில் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும். பிலேயின் குறும்புத்தனத்தை அடக்க புவனேஸ்வரி தேவி 'சிவசிவ' என்று சொல்லியபடி அவன் தலையில் தண்ணீரை ஊற்றுவார். பிலே சாந்தமாகி விடுவான்.சில வேளைகளில் 'பிலே, நீ இவ்வளவு அட்டகாசம் செய்தால் சிவன் உன்னை கைலாசத்துக்குள் வர விடமாட்டார்' என்று புவனேஸ்வரி கூறுவார். பிலே உடனே அமைதியாகி விடுவான்.

## அன்பு உள்ளம்



இவ்வுலகத்தில் சிலர் நிறைய அன்பு உள்ளவர்களாக இருக்கிறார்கள். பிலேயும் அப்படிப்பட்ட சிறுவனாக இருந்தான். பிறருக்கு உதவி செய்ய மிகவும் ஆசைப்பட்டான். விசுவநாத தத்தரின் வீட்டிற்கு சாதுக்களும், வறியவர்களும் வருவதுண்டு. அவர்களைக் கண்டதும் பிலே கையில் கிடைத்த பொருளைக் கொடுத்து விடுவான் அது எவ்வளவு விலை உயர்ந்ததாக இருந்தாலும் கலைப்படமாட்டான். எல்லாவற்றையும் தானம் கொடுத்து விட்டால் வாழ்க்கை நடத்துவது எப்படி என்று கவலைப்பட்டார் புவனேஸ்வரி தேவி. ஒரு நாள் பிலேயை அறையில் அடைத்து வைத்தார். ஆனால் பிலே அன்புள்ளம் கொண்டவன் அல்லவா! அவன் ஜன்னல் வழியாகப் பிச்சைக்காரர்களைக் கூப்பிட்டு அறைக்குள் இருந்த ஆடைகளை தூக்கிப்போட ஆரம்பித்தான்.

## விளையாட்டு



பிலே நண்பர்களுடன் விளையாடுவான். மரங்களில் ஏறுவான். ஓடிப்பிடித்து விளையாடுவான். அரசனாக, மந்திரியாக தன்னை நினைத்துப் பார்த்து விளையாடுவான். முனிவர்கள் தியானம் செய்வது போல அமர்ந்திருப்பான். பிலே தியானத்தை விளையாட்டாகத் தொடங்கினாலும் அதுவே அவனுக்குப் மிகவும் பிடித்த விளையாட்டாக இருந்தது.

ஒரு நாள் வீட்டின் மொட்டை மாடியில் பிலேயும் அவன் நண்பர்களும் தியான விளையாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். தீடீரென அங்கு ஒரு நாகப் பாம்பு வந்து விட்டது. அதைக் கண்ட மற்ற சிறுவர்கள் 'பாம்பு, பாம்பு, பிலே ஓடி வா!'என்று கத்தினார்கள். எழுந்து ஓடினார்கள். ஆனால் பிலேயோ எதுவும் அறியாமல் தியானத்தில் மூழ்கி இருந்தான்

**கல்வி**

பிலே ஆறு வயதிலேயே ராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களைப் படித்தான். அவனுடைய அம்மா அவனை மடியில் வைத்துக் கொண்டு கதைகளைப் படித்துச் சொல்வார். பிலே கதைகளைக் கேட்கும் போதும் ஆசிரியரிடம் பாடம் படிக்கும் போதும் முழுமனத்துடன் கவனமாகக் கேட்பான். அவனுக்கு ஞாபக சக்தி அதிகமாக இருந்தது. ஓய்வு நேரங்களில் உடற்பயிற்சி, குதிரைச் சவாரி என்று எப்போதும் சுறுசுறுப்பாக இருந்தான். அதே நேரம் மற்றவர்களுடன் அன்பாக நடந்து கொண்டான்.

**உண்மையே பேசு**


பள்ளியில் ஒருநாள் ஆசிரியர் கேட்ட கேள்விக்கு பிலே சொன்ன பதில் பிழை என்று ஆசிரியர் சொன்னார். பிலேயோ தனது பதில் சரி என்று உறுதியுடன் கூறினான். கோபப்பட்ட ஆசிரியர் அவனை அடித்தார். வீட்டிற்குத் திரும்பிய பிலே தாயாரிடம் இதைக் கூறி அழுதான். அதற்கு புவனேஸ்வரி தேவி 'பிலே நீ எப்போதும் உண்மையே பேசு, உனக்கு சரியென்ற நம்பிக்கை இருந்தால் போதும். எதைப்பற்றியும் கலைப்படாதே' என்று சொல்லி மகனைத் தேற்றினார். அன்று மாலை அந்த ஆசிரியர் பிலேயின் வீட்டிற்குப் போய் 'குழந்தாய் நீ சொன்ன பதில்தான் சரியானது, நான் அவசரப்பட்டு உன்னை அடித்துவிட்டேன் என்று கூறி வருத்தப்பட்டார்.



இன்னொரு நாள் வகுப்பில் பாடம் நடக்கும் போது பிலே மற்ற மாணவர்களுடன் பேசிக் கொண்டிருந்தான். ஆசிரியர் அவனிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினார். பிலே சரியாகப் பதில் சொன்னான். 'ஓகோ, நீ பேசிக் கொண்டிருந்தாய் என்று நினைத்தேன். வேறு யாராவது பேசியிருப்பார்கள், அது யார்? என்று கோபமாகக் கேட்டார். ஆனால் பிலேயோ 'ஐயா, பதில் சரியாகச் சொன்னாலும் பேசிக் கொண்டிருந்தது நான்தான். வேறு யாரும் இல்லை' என்று உண்மையைக் கூறினான்.

**தைரியத்தை இழக்காதே**


ஆபத்தான நேரேத்தில் பிலே தைரியமாய் இருந்தான். பிலேயின் வீட்டிற்கு அருகில் உடற் பயிற்சிக் கூடம் ஒன்று இருந்தது. அங்கு பிலேயும் அவனது நண்பர்களும் ஒரு மரக் கட்டையைத் தூக்க முயன்றார்கள். அது பாரமாக இருந்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஓர் ஆங்கிலேய மாலுமி அவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தார். எல்லோரும் சேர்ந்து மரத்தைத் தூக்க முயன்றார்கள். அப்போது மரம் நழுவி மாலுமியின் மேல் விழுந்தது. அவருடைய தலையில் காயம் ஏற்பட்டு மாலுமி தரையில் விழுந்தார். அவர் இறந்துவிட்டார் என்று பயந்து சில சிறுவர்கள் ஓடி விட்டனர். ஆனால் பிலே ஓரிரு நண்பர்களுடன் தனது வேட்டியின் ஒரு



பகுதியைக் கிழித்து மாலுமிக்கு முதலுதவி செய்தான்.

**கடவுளைக் காண முடியுமா?**

பிலே வளர்ந்து அழகான கம்பீரமான இளைஞனானான். இப்போது அவனுடைய பெயர் நரேந்திரநாதன். 1880ஆம் ஆண்டு நரேந்திரர், கல்கத்தா பல்கலைக் கழகத்தின் நுழைவுத் தேர்வில் அதிகப் புள்ளிகள் பெற்றுத் தேர்ச்சி அடைந்தார். அப்போது அவருக்கு வயது 17. சிறு வயது முதல் நரேந்திரருக்கு கடவுள் நம்பிக்கை அதிகம் இருந்தது. இப்போது கடவுளைப் பற்றி அவருடைய மனதில் பல கேள்விகள் எழுந்தன. கடவுள் யார்? எங்கே இருக்கிறார்? அவரைக் காண முடியுமா? என்ற கேள்விகள் அவருடைய மனதை வாட்டத் தொடங்கின. சிறு வயதில் செய்த தியான விளையாட்டு இப்போது உண்மையானத் தியானமாக மாறியது. இறை சிந்தனையில் காலத்தைக் கழித்தார். உண்மையாகவே கடவுளைக் கண்டவர் யாராவது இருக்கிறார்களா? - இதுவே நரேந்திரரின் மனதில் பெரிய கேள்வியாக இருந்தது.




பல சாமியார்களிடமும், பெரியவர்களிடமும் ‘ஐயா, நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?’ என்ற ஒரே கேள்வியைக் கேட்டுக் கொண்டே இருந்தார். ஒரு நாள் ஒரு நண்பரின் வீட்டில் ஸ்ரீராமகிருஷ்ணர் என்னும் மகானைச் சந்தித்தார். அதன் பின் ஸ்ரீராமகிருஷ்ணரை அடிக்கடி சந்தித்க அவரை நாடிப் போனார் நரேந்திரர்.

நரேந்திரர் தாம் இத்தனை நாட்களாகத் கேட்க விரும்பிய கேள்வியை, அவர் மனதை வருத்திக் கொண்டிருந்த சந்தேகத்தை ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கேட்பது என்று முடிவு செய்தார்.

**கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?**

‘ஐயா, நீங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?’

விரைந்து வந்தது ஸ்ரீராமகிருஷ்ணரின் பதில் - ***தொடரும்***




நான்சாப்பிடுகின்ற உணவு
பூமித்தாயின் அருளாலும்,
விவசாயிகளின் உழைப்பாலும்,
என் பெற்றோர்களினாலும்
எனக்கக் கிடைக்கின்றது. இதே
உணவை நான் வளர்ந்த பிறகு
நாலு பேருக்குக் கிடைக்கச்
செய்வேன் - *ரிக் வேதம்*



# HINDU SCRIPTURES (contd) - AGAMAS

Agamas are theological treatises and practical manuals of divine worship. In Hinduism, the Agamas are a collection of Sanskrit scriptures which are revered and followed by millions of Hindus. Like the Vedas they have come down through Guru-Sishya parampara, in oral traditions. The word Agama means 'that which has come to (us)'.

Sruti, the eternal word, is said to be of two forms – Nigama (Veda) and Agama. Two kinds of texts, Agama and Tantra are in general grouped under the same class of literature. The Agamas are not derived from the Vedas, but are not antagonistic to them. They are all Vedic in spirit and character and are as old as the Vedas. They are suitable to this age, Kali Yuga. Saiva tradition recognises the agamas as the most authoritative and sacred texts on the methods of worshipping Saguna (Idol) Iswara.



"Agamas govern the practical and living religion of Hindus"Sw.Vivekananda

Agamas deal with :

- the philosophy and spiritual knowledge behind the worship of the deity,
- the Yoga and mental discipline required for this worship,
- the rules for the construction of temples and for sculpting and carving the figures of deities for worship in the temples, Yantras
- the specifics of worship offered to the deity including rules pertaining to the observances of religious rites, rituals, and festivals.
- using various Mantras
- Town planning  Domestic practices and civil codes  Holy Places
- Principles of Universe, Creation and Dissolution

The Saiva Agamas revere the Ultimate Reality as Lord Shiva (Shaivism). The Vaishnava-Agamas adore the Ultimate Reality as Vishnu (Vaishnavism). The Shakta-Agamas (Tantras) venerate the Ultimate Reality as Shakti, the consort of Shiva and Divine Mother of the universe (Shaktism). Each set of texts expands on the central theological and philosophical teachings of that denomination.

Besides Hindu texts, early Jain and Buddhist scriptures are also called Agama texts.

The Saiva Agama has led to the Saiva Siddhanta philosophy in South India.

The Saiva Agamas state three essential requirements for a place of pilgrimage - Sthalam, Theertham and Moorthy. Sthala refers to the temple, Theertham, to the temple tank/pond and Moorthy to the deity(ies) worshipped. A temple may also be associated with a tree, called the Sthala Vruksham.  For instance, the Kadamba tree at the Madurai Meenakshi Sundareswarar temple is the Sthala Vruksham for that temple. A lone banyan tree that adorns the spacious courtyard of the Ratnasabha at Tiruvalankadu is its Sthala Vruksham.

Elaborate rules are laid out in the Agamas for Silpa (the art of sculpture) describing the quality requirements of the places where temples are to be built, the kind of images to be installed, the materials from which they are to be made, their dimensions, proportions, air circulation, lighting in the temple complex etc. The Manasara and Silpasara are some of the works dealing with these rules.

The rituals followed in worship services each day at the temple also follow rules laid out in the Agamas. According to Saiva Agama all agamas are came from Shiva to Devi, from Devi to Nandhi, from Nandhi to Brahma, from Brahma to Rishi, from Rishi to Human beings. Agamas are still in worship

Further, the 28 Agamas are classified into four classes: Kapala, Kalamukha, Pasupata, Saiva. The last kind (Saiva) is further classified into two subclasses – Kasmira Saiva and Siddhanta Saiva. Agamas are available in print.


### Aspects of Agama

Agama deals with three phenomena**, Mantra, Yantra** and **Tantra**.

### Mantra

Mantra is the sound-form of God and is often used synonymously to Devata. It is the means/basis for both Yantra and Tantra.

### Yantra




Yantra is basically a contrivance, charged with the power of a mantra. It could be a geometric shape as in case of Devata Yantra or just any instrument as in case of an Asthra. It is the tool. The nature of Yantra depends on its purpose sought to be served.

Each devata is said to have a Yantra, a specific geometric shape that represents the nature of devata and a world model. For temporary purposes and worshipping, it could be drawn on clean floor with turmeric or some other powder, or for installations it could be carved on metal plates. The Yantra is worshipped and charged with corresponding mantra. It is treated like the devata, and is worshipped as the devata.

### Tantra


Tantra is the practitioner's manual. It combines mantra, yogic methods and philosophy. It elaborates procedures that a sadhaka should follow, at each stage of his sadhana.

Mantra, Yantra and Tantra are closely knit. Mantra is the energy. Yantras are geometric shapes that define the workings of various kinds of energies. Tantra deals with the philosophy and methods for redirecting and channelling the energies to guide the spiritual evolution of the



# கண்ணனும் தாத்தாவும்

- முத்து



இப்பொழுது நத்தார் விடுமுறையானதால் கண்ணன் தாமதமாகவே நித்திரைவிட்டெழுந்து, காலைக்கடன் முடித்துவிட்டு உணவருந்தக் கீழே வரவும், தாத்தா வெளிக்கதவைத் திறந்து வீட்டினுள்ளே வரவும் சரியாக இருந்தது. கண்ணனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இப்பொழுது நேரம் எட்டு மணியாகக்கூட இல்லை. இந்தக் காலங்காத்தாலை தாத்தா எங்கே போய்விட்டு வருகிறார் என்று எண்ணுகிறான். ஆனால் அவரது முகத்தைப் பார்த்ததும் அவர் கோயிலுக்கு போய்விட்டு வருகிறார் என்று விளங்கிவிட்டது.

கண்ணன்- ஏன் தாத்தா இன்று இவ்வளவு வேளைக்கு விடியமுன்பே கோயிலுக்குப் போனீர்கள்வழக்கமாகக் எட்டுமணிக்குத்தானே கோயில் திறப்பார்கள்.

தாத்தா- கண்ணா! இப்போது கோயிலில் திருவெம்பாவை பூசை நடைபெறுகிறது. இது எப்போதும் மார்கழி மாதத்தில் பத்து நாட்கள்வரை நடைபெறும். இந்நாட்களில் கோயில் ஆறுமணிக்கே திறந்து விடுவார்கள்.

கண்ணன்- மார்கழி மாதம் சரியான குளிராச்சே! இந்த ஊரில் காலையில் விடிவதும் பிந்தித்தானே தாத்தா! அந்த நேரம் எழும்புவதை நினைத்தாலே கஷ்டமாக இருக்கு. நீங்கள் எப்படித் தாத்தா எழும்பினீர்கள்?

தாத்தா- இந்தியா, சிறீலங்காவில் கூட இம்மாதம் குளிர்தான். அங்கே மாரிகாலம். மார்கழி மாதத்தில் மழை அதிகம் பெய்யும். அங்கே நாலரை மணிக்கே கோயிலில் பூசை ஆரம்பித்துவிடும்.

கண்ணன்- அங்கேயும் குளிரா? அப்படியிருந்தும் எல்லோரும் காலையில் எழுந்து குளித்துக் கோயிலுக்குப் போவார்களா?

தாத்தா- கடவுள்மீது பக்தியிருந்தால் குளிரோ மழையோ எதுவுமே பெரிதாகத் தோன்றாது கண்ணா! அங்கே சிறுவர்களிலிருந்து பெரியவர்கள் வரை எல்லோரும் கோயிலுக்குப் போவார்கள்.

கண்ணன்- சிறுவர்கள் கூடப் போவார்களா? நம்பவே முடியவில்லையே தாத்தா.

தாத்தா- முதலில் கோயில் மணியோசை கேட்கும். சில பக்தர்கள் மக்களை எழுப்புவதற்காக வீதிகளில் தேவார திருவாசகங்களைப் பாடிக்கொண்டு வீதிகளிற் செல்வார்கள். இந்தச் சத்தத்தைக் கேட்டதும் சிறுவர்களும் எழுந்து குளித்துப் பெற்றோருடன் கோயிலுக்குப் போவார்கள். சிறு வயதில் இருந்தே எல்லாப் பிள்ளைகளும் வெள்ளிக்கிழமை மற்றும் முக்கிய திருவிழாக்கள் எல்லாவற்றிற்கும் பெற்றோருடன் தவறாது கோயிலுக்குப் போவார்கள். பின்பு கொஞ்சம் வளர்ந்தபின் தாமாகவே நண்பர்களுடன் போவார்கள். அதனால் அவர்கள் மனதில் கடவுள் பக்தி ஏற்பட்டுவிடும்.



கண்ணன்- கடவுள் பக்தி எப்படி வரும் என்பதை நன்றாகவே சொல்லிவிட்டீர்கள் தாத்தா! நானும் நாளைக்கு உங்களுடன் கோயிலுக்கு வரட்டுமா?

தாத்தா- அப்போ நாளைக்குக் காலையில் எழுந்து நான் திருப்பள்ளி எழுச்சி பாடவேண்டும்.

கண்ணன்- அது என்ன தாத்தா! திருப்பள்ளி எழுச்சி

தாத்தா- கடவுளை நித்திரைவிட்டு எழும்பும்படியாக மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் திருப்பள்ளி எழுச்சி எனப்படும். பள்ளி என்றால் படுக்கை(கட்டில்) என்று கருத்தாகும். இறைவா! சூரியன் உதித்து விட்டான். பக்தர்கள் எல்லாரும் வந்து உன் பாதங்களை வணங்கக் காத்திருக்கிறோம். எழுந்திருங்கள். என்ற கருத்தில் இந்தப் பாடல்கள் இருக்கின்றன. அப்படி நான் உனக்கும் கண்ணா! எழும்பு என்று பாடிக் கொண்டிருந்தால்தான் நீ எழும்புவாய்.

கண்ணா- இல்லைத் தாத்தா நீங்கள் கூப்பிட்டதுமே நான் எழும்பிவிடுவேன்.

தாத்தா- சரி கண்ணா! அப்போ நான் நாளைக்குக் கோயிலுக்குப் போகும்போது மறக்காமல் எழுப்புவேன்.

கண்ணா- சரி தாத்தா! இப்போ நான் எனக்கும் உங்களுக்கும் காலைச்சாப்பாடு எடுத்துக் கொண்டு வருவேன். நாங்கள் கதைத்துக் கொண்டே சாப்பிடலாம். இன்றைக்கு எனக்கு என்ன சொல்லித்தரப் போகிறீர்கள் என்று யோசியுங்கோ!

தாத்தா- பிறகென்ன நல்ல பிள்ளை. தாத்தாவை கவனமாகவே பார்க்கிறாய். இப்படித்தான் எல்லாப் பேரப்பிள்ளைகளும் தாத்தாமாரைப் பார்க்கவேண்டும்.

கண்ணா- உங்களைப்போலவே எல்லாத் தாத்தாமாரும் இருக்க வேண்டும்.

தாத்தா- ஓ...! நன்றாகவே கதைக்கிறாய்.! கெட்டிக்காரன்! (சிறிது நேரத்தில் கண்ணன் காலையுணவுடன் வருகிறான். இருவரும் சாப்பிட்டுக் கொண்டே கதைக்கின்றனர்.)

கண்ணன்- இன்றைக்கு என்ன சொல்லித்தரப் போகின்றீர்கள் தாத்தா?

தாத்தா- இன்றைக்கு மகாகவி பாரதியார் சின்னப் பிள்ளைகளுக்காக எழுதிய பாப்பாப் பாட்டைச் சொல்லித்தரப் போகிறேன்.

கண்ணன்- "ஓடி விளையாட பாப்பா" என்ற பாட்டுத்தானே தாத்தா! நான் முன்பு அதனைத் தமிழ்ப்பள்ளியில் படித்திருக்கிறேன். நீங்கள் இப்போ கருத்தை மட்டும் சொல்லித் தாருங்கோ.

தாத்தா- சரி கண்ணா! நீ பாட்டைச் சொல்லு நான் கருத்தைச் சொல்லுகிறேன்.

கண்ணன்- ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா — ஒரு
குழந்தையை வையாதே பாப்பா



தாத்தா- சின்னப் பிள்ளைகளெல்லாம் ஓடியாடி விளையாட வேண்டும். சோம்பலாக ஒரு இடத்தில் இருக்கக்கூடாது. ஏனென்றால் விளையாடுவது நல்ல உடற்பயிற்சி. அதனால் பிள்ளைகள் மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து சந்தோசமாக விளையாட வேண்டும். மற்றப் பிள்ளைகளைத் திட்டக்கூடாது. ஒற்றுமையாக எல்லோரும் இருப்பது நல்லது என்பதுதான் இதன் கருத்தாகும். எங்கே மிச்சத்தைப் பாடு பார்ப்போம்.

கண்ணன்- காலை எழுந்தவுடன் படிப்பு — பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு — என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

தாத்தா- காலையில் எழுந்தவுடன் எல்லாப் பிள்ளைகளும் படிக்க வேண்டும். ஏனென்றால் கல்வி எல்லோருக்கும் முக்கியமானது. காலை நேரம் எல்லோருக்கும் புத்துணர்வைக் கொடுக்கும். அப்போது படித்தால்

படிப்பதெல்லாம் மனதில் இலகுவில் பதியும்.

கண்ணன்- காலையில் எழும்பியவுடன் நாங்கள் பள்ளிக்குத்தானே படிப்பதற்குப் போகிறோம். பின்னேரம் மட்டும் படிக்கிறோம். பாரதியார் ஏன் காலையில் மட்டும் படிக்கச் சொல்கிறார்.

தாத்தா- பாரதியார் வாழ்ந்த காலத்தில் பள்ளிக்கூடங்களே மிகக்குறைவு. அவை காலை நேரத்தில் மட்டுமே நடக்குது. பள்ளிக்கூடங்கள் இல்லாத ஊர்களில் பிள்ளைகள் படித்தவர்களின் வீடுகளுக்குப்போய் படிக்கும் வழக்கும் இருந்தது. அதனால் பாரதியார் காலை எழுந்தவுடன் படிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கலாம். அதன் பின்பு மனதிற்குள் இனிமையான பாடல்களைப் படிக்க வேண்டும் என்று சொல்கிறார். பாடுவது மனதிற்கு மகிழ்ச்சியைத் தருவதுடன் மூளைக்கும் ஓய்வு கொடுக்கும். அதன் பின்பு மாலை முழுவதும் சந்தோசமாகப் பிள்ளைகள் விளையாடலாம். அது எல்லாப் பிள்ளைகளுக்கும் பிடித்த விடயம். அதோடு உடம்புக்கும் நல்லது.

கண்ணன்- படிப்பு, பாட்டு, விளையாட்டு மூன்றும் பிள்ளைகளுக்கு அவசியம் என்று சொல்கிறார். என்ன தாத்தா?

தாத்தா- ஆமாம் கண்ணா! இப்போ அடுத்த வரிகளைப் பாடு.

கண்ணன்- பொய் சொல்லக் கூடாது பாப்பா — என்றும்
புறஞ் சொல்லலாகாது பாப்பா
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா

தாத்தா- பிள்ளைகள் ஒருபோதும் பொய் சொல்லக்கூடாது. உண்மையே பேசுதல் வேண்டும். ஒருவர் இல்லாதபோது அவர்களைப் பற்றி குறைகளைச் சொல்வது புறங்கூறுதல் என்று சொல்லப்படும். அப்படி ஒருபோதும் நாங்கள் பழகியவர்களின் (நண்பர்கள், உறவினர்) குறைகளைப்பற்றி மற்றவர்களுக்குச் சொல்லக்கூடாது. அவர்களுக்கு நேரில் சொல்லி அவர்களைத் திருத்துவதுதான் நல்ல பழக்கம். நாங்கள் அப்படி நல்லவர்களாக நடந்தால் கடவுள் எப்போதும் துணையாக இருப்பார். எங்களுக்கு ஒருபோதும் எந்தவிதமான கஷ்டமோ, துன்பமோ வரமாட்டாது என்று பாரதியார் சொல்கிறார்.

கண்ணன்- பிள்ளைகள் எப்படி வளர வேண்டும். எப்படி வாழவேண்டும். என்று பாரதியார் அழகாகச் சொல்கிறார் தாத்தா?

தாத்தா- ஆமாம் கண்ணா! இப்படிச் சிறுவயதிலிருந்தே நல்ல பழகக்ங்களைப் பழகிக் கொண்டால் அவர்கள் பெரியவர்களாகி நல்ல பண்புள்ளவர்களாகவே வாழ்வார்கள்.. சந்தோஷமாகவும் வாழ்வார்கள்.
எங்கே மீதிப்பாடலகளையும் சொல் பார்க்கலாம்.

கண்ணன்- எனக்கு இவ்வளவும்தான் தெரியும் தாத்தா!

தாத்தா- இதில் மொத்தமாக பதின்மூன்று நான்கு வரிப்பாடல்கள் உள்ளன. அதில் மூன்று நீ பாடிவிட்டாய் நான் இன்னும் ஒன்று சொல்லித் தருகிறேன் கேள்.

கண்ணன்- சரி சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா- துன்பம் நெருங்கி வந்த போதும் - நாம்
நாம் சோர்ந்து விடலாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வமுண்டு - துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா

கண்ணன்- பாரதியாருக்கு நல்ல கடவுள் பக்தி இருந்திருக்கிறது தெரிகிறது தாத்தா!

தாத்தா- ஆமாம் கண்ணா! பாரதியார் நிறைந்த கடவுள் பக்தியுள்ளவர்.. அவர் எல்லாத் தெய்வங்களையும் போற்றிப் பாடல்கள் எழுதியிருக்கிறார். கண்ணனைப்பற்றி நிறையவே பாடியிருக்கிறார்.

கண்ணன்- எனக்கும் ஒரு பாட்டுத் தெரியும். "கண்ணன் எங்கள் கண்ணனாம்" என்ற பாட்டு.

தாத்தா- நல்லது! நீயும் கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிறாய். இந்தப் பாடலின் கருத்தைச் சொல்கிறேன் கேள். எங்களுக்குத துன்பங்கள் வரும்போது கவலைப்பட்டுக்கெண்டு சோர்ந்துபோய் இருக்கக்கூடாது. எங்களைப் படைத்த தெய்வம் தாயினும் மேலான அன்பு கொண்ட தெய்வம். எங்களுக்கு வரும்துன்பங்கள் எல்லாவற்றையும் போக்கிவிடும் என்ற நம்பிக்கையுடன் மன உறுதியாக வாழ வேண்டும் என்று பாரதியார் இந்தப் பாடலில் கூறுகிறார்.

கண்ணன்- கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று நீங்கள் அடிக்கடி கூறுவீர்களே! அதேமாதிரிப் பாரதியாரும் கூறுகிறார்.

தாத்தா- கடவுளிடம் பக்தியிருந்தால் எதற்கும் பயம் வராது கண்ணா! பக்தி ஏற்படுவதற்கு நாங்கள் நல்லவர்களாக வாழப் பழுகுதல் வேண்டும்.

கண்ணன்- பாரதியார் சொல்வதைப்போலப் பொய் சொல்லாது மற்றவர்களுடன் சண்டை போடாது, குறை சொல்லாது எல்லோருடனும் அன்பாகவும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும். அப்படித்தானே தாத்தா.

தாத்தா- ஆமாம் கண்ணா! இப்போ படித்த பாரதியார் பாடல் உனக்கு நன்றாகவே விளங்கிவிட்டது. கெட்டிக்காரன்.

கண்ணன்- எல்லாம் நீங்கள் சொல்லித் தந்ததுதானே தாத்தா. நான் இப்போது தொலைக்காட்சியில்(ரெலிவிசன்) ஒரு கார்ட்டுன் பார்க்கப்போகிறேன் தாத்தா.

தாத்தா- சரியடா கண்ணா! நானும் இந்த வாரப்பத்திரிகை வாசிக்கப் போகிறேன்.



We are what our thoughts have made us; so take care about what you think.

Words are secondary. Thoughts live; they travel far.

You cannot believe in God until you believe in yourself.


You have to grow from the inside out. None can teach you, none can make you spiritual. There is no other teacher but your own soul.

When an idea exclusively occupies the mind, it is transformed into an actual physical or mental state.

*- Swami Vivekananda*

# Why worship in a temple?

*G Arunai Vadivel Mudaliar*




"The town which is without temple is inauspicious" - Saint Appar
"Do not reside in a village that has no temple" – Avvaiyar

The Tamil word for temple is Ko-il which literally means 'The King's Abode' or, 'The King's Palace'. Just as the king is the head of a certain region on earth, God is the head of the entire world and his abode is appropriately termed the King's abode , or, Koil.

**Has God an abode?** God is everywhere. He is ever-present. How then can he be confined to a temple? The entire Universe should be deemed to be his home. This may arise in the minds of some people. On the other hand, though God is formless, there is nothing to prevent Him from assuming any particular form for any particular reason. He is deemed to take different forms and to take His abode in various temples. It is not for his sake that he takes any form. Indeed, it is for the benefit of us and our souls that he does so.

**Why God assumes forms?** Human beings cannot have communion with God in His formless state. So, in His infinite mercy God takes on a form for the sake of human beings. Souls suffer because of their intimate bond with the world. If they should sever their bond with the world, and strengthen their connection with God, this suffering would stop. Souls are accustomed to sensory perception only. For God to communicate with souls, he necessarily has to take a form. The bodies which encase mortal souls are of flesh and blood. They are made of the three impurities. But the form which God assumes for Himself is made of His own grace. This has been made clear in the 61st, 65th and 67th songs of Sivajnana Siddhiar. It is stated that He does appear before those who adore Him.

There are two states in which God is conceived: One is Swarupa Sivam in which He is formless. The other is Tadastha Sivam in which He has form , name and function. Forms are of two kinds: "True forms" and "image forms". True forms are those that God takes at a particular time and place for a particular purpose. Image forms are the forms carved in stone by people from either knowledge through books or insights of saints and sages. These forms are not the imagination of some people. They are believed to be the images of God as actually seen by the saints.




Only those who are spiritually evolved are able to see God in his true form. For those who are fortunate to get a Jnana guru who can impart jnanam, or Supreme Knowledge, the guru's form is also considered to be that of God. Others would need to worship His other image forms either those in the temple or those considered as Sangama Thirumenigal. There are three ways in which we worship God. These are: Guru, Lingam, and Sangamam. We worship the Guru, our spiritual master, as God himself. We worship the Lingam in the temples. The Lingam in the sanctum sanctorum is of the highest order. The other god-forms surround the central Lingam.
Spiritual men who conduct themselves in this world as God's representatives are also considered image forms of God (Sangama Thirumenigal).

# திருக்குறள் கற்போம்

## பயனில சொல்லாமை

## Against Profitless Conversation



பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும் 01

கேட்டோர் பலரும் வெறுக்கும்படி பயனற்ற சொற்களைப் பேசுபவன் எல்லோராலும் இகழப் படுவான்.

He who, to the disgust of many, speaks useless things will be despised by all

பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது 02

பயனற்ற சொற்களைப் பலர்முன் பேசுதல் விருப்பமற்ற செயல்களை நண்பர் இடத்துச் செய்தலைக் காட்டிலும் தீயது.

To speak useless things in the presence of many is greater evil than to do unkind things towards friends.

நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை 03

பயனில்லாதவற்றை விரித்துரைக்கும் ஒருவனது வெற்றுரை அவன் அறமற்றவன் என்பதைக் காட்டும்.

That conversation in which a man utters forth useless things will say of him, “He is without virtue”

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து 04

பயன் தராத பண்பற்ற சொற்களைப் பலர்முன் ஒருவன் பேசினால் அப்பேச்சு இன்பத்தோடு பொருந்தாததாய் அவனை அறத்தினின்று நீக்கும்.

The words without profit or pleasure which a man speaks with many persons will have no union with virtue and will remove him from godness

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின் 05

பயனிலவாகிய சொற்களை இனிமைப் பண்புடையார் பேசிளால், சீரும் சிறப்பும் கெடும்.

If the good speak vain words, their eminence and excellence will leave them.

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல் 06

பிறர் பேசும் பொருளற்ற சொற்களைப் போற்றிக் கொண்டாடுபவனை மாந்தன் என்று சொல்லாதே. மாந்தர்களுள் பதர் என்று இகழ்க.

Call not him a man who parades forth empty words. Call him the chaff of men.

நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர் 07
பயனில சொல்லாமை நன்று

சால்புடையவர் அறனல்லாத சொற்களைக் கூறினும் கூறுக. அவர் பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லது.
If you will speak things without excellence speak them. It will be well for the wise not to speak useless things.

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார் 08
பெரும்பயன் இல்லாத சொல்

மெய்ப்பொருளை ஆராயும் அறிஞர்கள் பெரும்பயன் விளைக்காத சொற்களைக் கூறமாட்டார்கள்
The wise who seek for great advantage will not speak words that have not much profit.

பொருள்தீர்ந்த பொய்ச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த 09
மாசறு காட்சி யவர்


மயக்கம் தீர்ந்த குற்றமற்ற அறிவினை உடையவர்கள் பொருளற்ற சொற்களை மறந்தும் பேசமாட்டார்கள்.
Those wise men who are without faults and are freed from ignorance will not eve forgetfully speak things that cannot profit

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க 10
சொல்லிற் பயனிலாச் சொல்




பேசினாற் பயன்தரும் சொற்களைப் பேசுக. சொற்களுள் பயனில்லாச் சொற்களைப் பேசாதொழிக.
You speak, speak what is useful. If you speak, speak not useless words.

---



சிவநெறிப் புரவலர்

அமரர் திரு. தம்பியப்பா சண்முகலிங்கம்

அமரர் சிவநெறிப் புரவலர் அமரர் திரு. தம்பியப்பா சண்முகலிங்கம் அவர்கள் ஊர்காவற்றுறை சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் தலைவராக விளங்கி அதன் சொத்துக்களைக் காப்பதற்காக அல்லும் பகலும் உழைத்த சைவப் பெரியார். சிதம்பரத்தில் உள்ள புண்ணிய நாச்சியார் மடத்தைத் திருத்தி ஈழத்தமிழர்கள் இலவசமாக அங்கு தங்க பேருதவி புரிந்தவர். சைவ ஒழுக்க சீலராகத் திகழ்ந்ததால் திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு “சிவநெறிப் புரவலர்” என்ற கௌரவப் பட்டம் வளங்கியது. நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வளர்ச்சிக்கு சிறப்புடனும் பொறுப்புடனும் பணியாற்றியவர். அற வழியில் பொருளீட்டி அறம் வளர்த்து தமிழ் இளைஞர்களுக்கு சமுகப் பணி செய்தவர்.

இத்தகு சைவப் பணி புரிந்த பெரியவர் 28.10.2012 அன்று இறைபதமடைந்தார். அவரை நினைந்து அவருக்கு எமது அஞ்சலியைத் செலுத்துகின்றோம்.

- சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

## சைவ முன்னேற்றச் சங்கம் (UK),

## ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்

### முக்கிய நாட்கள்

| | | |
|---|---|---|
| 14.01.2013 | திங்கட்கிழமை | தைப்பொங்கல் |
| 26.01.2013 | சனிக்கிழமை | தைப்பூசம் |
| 24.02.2013 | ஞாயிற்றுக்கிழமை | மாசி சதுர்த்தசித் திதி நடசேர் அபிஷேகம் மாலை |
| 09.03.2012 | சனிக்கிழமை | மகாசிவராத்திரி |
| 23.03.2013 | சனிக்கிழமை | யோகசுவாமிகள் குருபூசை |
| 29.03.2013 | வெள்ளிக்கிழமை | காரைக்காலம்மையார் குருபூசை |
| 14.04.2013 | ஞாயிற்றுக்கிழமை | விஜய ஆண்டுப்பிறப்பு |
| 26.04.2013 | வெள்ளிக்கிழமை | சித்ரா பூரணை விரதம் |
| 02.05.2013 | வியாழக்கிழமை | சித்திரைத் திருவோணம் நடசேர்அபிஷேகம் காலை |
| 04.05.2013 | சனிக்கிழமை | திருநாவுக்கரசுநாயனார் குருபூசை |
| 26.05.2013 | ஞாயிற்றுக்கிழமை | திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் குருபூசை |
| 12.06.2013 | புதன்கிழமை | சேக்கிழார் சுவாமிகள் குருபூசை |
| 05.07.2013 | வெள்ளிக்கிழமை | அலங்காரத் திருவிழா ஆரம்பம் |
| 12.07.2013 | வெள்ளிக்கிழமை | மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை |
| 14.07.2013 | ஞாயிற்றுக்கிழமை | ஆனி உத்தரம் நடசேர்அபிஷேகம் காலை |
| | | அலங்காரத் திருவிழா பூர்த்தி |
| * | **ஞாயிற்றுக்கிழமை** | **நால்வர் தமிழ்க் கலை நிலையக் கலை விழா** |
| 06.08.2013 | செவ்வாய்க்கிழமை | ஆடி அமாவாசை |
| 13.08.2013 | செவ்வாய்க்கிழமை | சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை |
| 08.09.2013 | ஞாயிற்றுக்கிழமை | விநாயக சதுர்த்தி |
| 21.09.2013 | சனிக்கிழமை | புரட்டாதிச் சனி விரதம் ஆரம்பம் |
| 05.10.2013 | சனிக்கிழமை | நவராத்திரி விரதம் ஆரம்பம் |
| 12.10.2013 | சனிக்கிழமை | புரட்டாதிச் சனி விரதம் பூர்த்தி |
| 13.10.2013 | ஞாயிற்றுக்கிழமை | விஜயதசமி. கேதாரகௌரி விரத ஆரம்பம் |
| * | **சனிக்கிழமை** | **சங்க 36வது ஆண்டு நிறைவு விழா** |
| 02.11.2013 | சனிக்கிழமை | தீபாவளி. கேதாரகௌரி விரத பூர்த்தி |
| | | கந்தசஷ்டி விரத ஆரம்பம் |
| 08.11.2013 | வெள்ளிக்கிழமை | கந்தசஷ்டி விரத பூர்த்தி |
| 17.11.2013 | ஞாயிற்றுக்கிழமை | திருக்கார்த்திகை |
| 18.11.2013 | திங்கட்கிழமை | விநாயகர் விரத ஆரம்பம் |
| 08.12.2013 | ஞாயிற்றுக்கிழமை | விநாயகர் விரத பூர்த்தி |
| 09.12.2013 | திங்கட்கிழமை | திருவெம்பாவை ஆரம்பம் |
| 25.12.2013 | திங்கட்கிழமை | ஆறுமுக நாவலர் குருபூசை |
| 18.12.2013 | புதன்கிழமை | திருவெம்பாவை பூர்த்தி ஆருத்திரா தரிசனம் |
| 14.01.2014 | செவ்வாய்க்கிழமை | தைப்பொங்கல் |
| 13.03. 2014 | வியாழக்கிழமை | மாசி சதுர்த்தசித் திதி நடசேர் அபிஷேகம் மாலை 27.02.2014 |
| | வியாழக்கிழமை | மகாசிவராத்திரி |

*திகதி அறிவிக்கப்படும்





SHARON
Importers, Wholesalers, Distributor & Retailers
Specialist in: Srilankan and Indian Products
Fresh Fruits
Vegetables
Fish
Groceries
Off Licence
Food Products
311-313 Mitcham Road, Tooting, London SW17 9JQ
T: 020 8672 9353
F: 020 8672 6353
E: sharonsfood@aol.com



WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First Tamil Jewellery shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 020 8767 3445
Wembley Branch.
5,Plaza Parade, 29-33 Ealling Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909
SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS SILK EMPORIM SAREES
SILK
EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900
OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)